விலை ரூபா 20.00


ஈராக் வலியுறுத்து
பக்கம் 09


சகாப்தம் தொருடம்
பக்கம் 10


60 அணு உலைகள்
பக்கம் 11


இலங்கை போராட்டம்
பக்கம் 27

www.onlineuthayan.com

பக்கங்கள்: 38

# உதயன்

சுடர் 27
கதிர் 130

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 22 புதன்கிழமை (04/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# தீர்வை முன்வைக்காவிடில் நாடு பிளவுபடும் பேராபத்து

## நாடாளுமன்றத்தில் நேற்று ஐ.தே.க. எச்சரிக்கை



கொழும்பு, ஏப்ரல் 4

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகம் கொண்டு வந்துள்ள தீர்மானமானது உலகின் புதிய நாடானதென்சூடானை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயங்களுக்குச் சமனானது. எனவே அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவாக முன் வைக்காவிட்டால்தென்சூடானைப் போல இலங்கையும் பிளவுபடும் பேராபத்து உள்ளது என பிரதான எதிர்க்கட்சியான ஐக் கிய தேசியக் கட்சி அரசை எச்சரித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானம் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய ஐ.தே.க. உப தலைவரான லக்ஷ்மன் கிரியெல்ல இந்த எச்சரிக்கையைவிடுத்தார். சிறுபான்மை இனங்களின் உரிமைகளை அரசு உறுதிப்படுத்தாவிட்டால் அது நாட்டை பிரிப்பதற்கு வழிவகுக்கும் என்றும் அவர் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தலை வருமாறு:

நாட்டின் இறைமை என்ற கேடயத்தைப் பயன்படுத்தி சர்வதேசத்திற்கு எதையும் மறைத்துவிட முடியாது. பாதுகாப்பு மனித உரிமை, நியாயாதிக்கம் தொடர்பான சகல ஐ.நா. சாசனங்களிலும் இலங்கை கையெழுத்திட்டுள்ளது. இதன் அடிப்படையில் சர்வதேசத்திற்குப் பதில் அளிக்க வேண்டிய கடப்பாடும், கட்டாயமும் 04

## வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிவில் நிர்வாகம் இல்லை

### சாடுகிறது ஜே.வி.பி

கொழும்பு, ஏப்.4

ஜெனிவா தீர்மானம், உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிடுவதற்கான நுழைவாயிலாகும். கை, கால்கள் கட்டப்பட்டு அமெரிக்காவைச் சார்ந்து செயற்பட வேண்டிய நிலையிலுள்ள அரசின் தேசப்பற்று அங்கவீனமானது. தெற்கு மக்கள் வேண்டுமானால் இராணு வத்தினரை மலர்மாலை அணிவித்து வரவேற்கலாம். ஆனால், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் மனநிலைமை அவ்வாறு இல்லை. எனவே, அரசு வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை உடனடியாக நிலைநாட்ட வேண்டும்.

- இவ்வாறு ஜே.வி.பியின் 04

## வவுனியாவில் இளைஞர் வெட்டிக் கொலை

வவுனியா, ஏப்.4

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்களால் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த 04

## இந்தியாவுடன் இலங்கை அணு பாதுகாப்பு ஒப்பந்தம்



கொழும்பு, ஏப்.4

அணுசக்தி பாதுகாப்பு தொடர்பில் இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடுவதற்கான ஆவணமொன்றை இந்தியாவிடம் கையளித்துள்ளதாக இலங்கை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பல பிரதேசங்களில் அணு ஆலைகள் காணப்படுவதாகவும் இந்த அணு ஆலைகளின் மூலம் இலங்கையின் மன்னார் மற்றும் வடக்கு பகுதிக்குப் பாதிப்பு ஏற்படுவதை வரையறுக்கும் வகையில் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கூடங்குளம் அல்லது வேறு இந்திய அணு ஆலைகளில் விபத்து ஏற்படுமாயின் அதன் கதிர்கள் இலங்கையின் வடக்கு பகுதியை தாக்கக் கூடும் என அமைச்சர் சம்பிக்க 04

## ஜெனிவா தோல்வியின் எதிரொலியே இலங்கையின் புலிக் குற்றச்சாட்டு

### கடும் விசனத்தில் புதுடில்லி

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு மூன்று முகாம்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன எனவும், அவ்வாறு பயிற்சி பெற்ற 150 புலிகள் இலங்கை திரும்பியுள்ளனர் எனவும், அரச புலனாய்வுச் சேவையை மேற்கோள்காட்டி இலங்கை ஊடகம் வெளியிட்ட செய்தி இந்தியாவுக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனப் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்ததை மனதில் கொண்டே, இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் நம்புகின்றன.

இந்தக் குற்றச்சாட்டு இந்திய அரசை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. அதே வேளை, தமிழக 04

## சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு மீண்டும் கடன்

கொழும்பு, ஏப்.4

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 7 ஆம் கட்டமாக கடன் அடிப்படையில் நிதியுதவி வழங்க தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற சர்வதேச நாணய நிதிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 426.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் அடிப்படையில் வழங்கவுள்ளது.

மேலும் 8 ஆவதும் இறுதித் தொகுதியுமாக 04

## வாடகை வீடுகளும் இல்லை நடுத்தெருவில் நிற்கிறோம்

### வலி.வடக்கு மக்கள் அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஏப்.4

வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து 22 வருடங்களுக்கு மேலாக விரக்தியடைந்த நிலையில் வாழ்ந்து வருகின்றோம் நாங்கள் தங்கியுள்ள வீடுகளுக்கு வீட்டு உரிமையாளர்கள் வெளி நாடுகளில் இருந்து திரும்பி வந்துள்ளததால் அந்த வீடுகளை விட்டு வெளியேறி நடுத்தெரு வில் நிற்கவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது. வாடகை வீடுகளும் இல்லை எனவே சொந்தக் காணிகளில் மீளவும் குடிய மர்ந்து தொழில் செய்ய 04

### பண்டிகை காலத்தில் விசேட பஸ், ரயில் சேவைகள்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகளை செயற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி நாளை தொடக்கம் விசேட பஸ் சேவை ஆரம்பிக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது. தூர இடங்களை நோக்காகக் கொண்டு இந்த பஸ் சேவை செயற்படுத்தப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன தெரிவித்துள்ளார். தற்போது தூர சேவைகளில் 3100 பஸ்கள் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இதற்கு மேலதிகமாக 750 - 1000 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### 16 பிச்சைக்காரர்கள் வவுனியாவில் கைது

வவுனியா நகர்ப்பகுதியில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்த 16 பிச்சைக்காரர்களைக் கைது செய்ததாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். பல்வேறு காரணங்களைக் கூறி வவுனியா நகர்ப்பகுதியில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பிச்சை எடுத்தார்கள் என்ற காரணத்தினாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட பிச்சைக்காரர்கள், வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

### 50,000 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு


பெரும்போக நெல் கொள்வனவு திட்டத்தின் கீழ் நெல் கொள்வனவுச் சபை இதுவரை 50,000 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கென 1432 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இம்முறை அதிக படியாக 13595 மெற்றிக் தொன் நெல் அம்பாறை மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

### கண்டியில் 21 பஸ் சாரதிகள் கைது

காப்புறுதி, வரி மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இன்றி பயணிகள் பஸ்களைச் செலுத்திய நீண்ட தூரப் போக்குவரத்து பஸ் சாரதிகள் 21பேர் கண்டி போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்ட நிலையில் மேற்படி ஆவணங்கள் இன்றி குறித்த பஸ்களை இவர்கள் செலுத்தி வந்துள்ளார்கள் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இந்த பஸ்கள் கண்டியிலிருந்து அவிசாவளை, வெலிமடை, மஹியங்கனை ஆகிய இடங்களுக்குச் சேவையில் ஈடுபடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா, நியூயோர்க், வொஷிங்டன் எதையும் எதிர்கொள்ள நான் தயார்



## மார்தட்டுகிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஏப்.4
ஜெனிவா, நியூயோர்க், வொஷிங்டன் என்று உலகில் எங்கிருந்து வரும் அழுத்தங்களையும் எதிர்கொள்வதற்கு தமது அரசு தயாராகவே இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அரசஅதிகாரிகள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசியல் தலைவர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜெனிவா தீர்மானத்தை அடுத்து இலங்கை அரசு ஏற்பாடு செய்துள்ள ஒன்றுபட்ட நாடு என்ற பரப்புரை நிகழ்வுத்தொடரின் ஒரு பகுதியாக இந்தக்கூட்டம் அலரி மாளிகையில் இடம் பெற்றது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ராஜபக்ஷ மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று இலங்கை பலத்த சவால்களைச் சந்தித்து நிற்கிறது. ஆனால் இத்தகைய சவால்கள் எமக்குப் புதியவையல்ல.

இலங்கையை ஒற்றையாட்சி நாடாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட காலத்தில் இருந்து, நாடு பெரும் அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளது.

ஆனாலும், வெளிநாட்டு அழுத்தங்களுக்கு எதிராக ஒன்றுபட்ட குரலை எம்மால் வெளிப்படுத்த முடிந்தது.

எரிபொருள் விலை உயர்வு, அனைத்துலக நிதி நெருக்கடி காரணமாக வங்கிகள் மூடப்பட்டமை, பயங்கரவாதம் போன்ற சவால்களை நாம் எதிர்கொள்ள நேர்ந்தது.

அணிசேராக் கொள்கை மூலம் இவற்றை எம்மால் எதிர்கொள்ள முடிந்தது. தொடர்ந்தும் நாம் அணிசேராமல் இருப்போம். இதனால் எந்த அழுத்தத்தையும் எதிர்கொள்ள நாம் தயார்-என்றார். (த)

## காணாமல்போன 30 பேர் பற்றிய தகவல் கோரும் அமெரிக்கா

கொழும்பு, ஏப்.4
காணாமல் போன 30 பேர் பற்றிய தகவல்களை வழங்குமாறு அமெரிக்கா இலங்கை அரசிடம் கோரியுள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் ஊடாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் சார்பில் அமெரிக்கத் தூதரகம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட நபர்கள் பற்றி முழுமையான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அரசு வாக்குறுதி அளித்துள்ளது. காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்களிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்த உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போன லலித்குமார் மற்றும் குகன் ஆகியோர் பற்றிய தகவல்களை வழங்குமாறு அமெரிக்கா கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## தூதரக சேவையில் முழு மனநோயாளிகள்

### கோட்டே ஸ்ரீநாக விகாராதிபதி கிண்டல்

கொழும்பு,ஏப்.4
வெளிநாட்டுத் தூதரக சேவைகளில் தற்போது உறவினர்களும் தேர்தலில் தோல்வி அடைந்தவர்களும் முழு மன நோயாளிகளுமே உள்ளனர். அவர்களது சாமர்த்தியம்தான் ஜெனிவாவில் எமக்கு கிடைத்த நிலைமை. வெளிநாடுகளுக்கு நாட்டின் நிலைமை பற்றி அறிவுறுத்துவது தூதரகங்களாகும். ஆனாலும் எமது தூதரகங்களில் கடமையாற்றுபவர்களது திறமையையே ஜெனிவாவில் நாங்கள் கண்டோம் என கோட்டே ஸ்ரீநாக விகாராதிபதி வண. மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

கண்டி ஈ.எல்.சேனநாயக்க சிறுவர் நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

'தற்போது நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்ய அனைவரும் விரும்புகின்றனர். அண்மையில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் ஒரு கூட்டத்தில் ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வது அவசியம் எனக் கூறியுள்ளார்.

1994ஆம் ஆண்டு சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வது என்ற கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்டார். தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனையிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எவருமே இதனை நிறைவேற்றுவதாக இல்லை.இன்று நீதிமன்றங்களில் சுதந்திரம் இல்லை. எல்லாவற்றிலும் அரசியல் ஊடுருவி உள்ளது.

ஜெனிவாவில் மனித உரிமை மீறல் பற்றி பேசப்படுகிறது. எமது நாட்டின் சில அரசியல்வாதிகள் நான் அவரை அப்படி அடித்து விரட்டினேன். மீண்டும் வந்தால் அவர்களுக்கு இப்படிச் செய்வேன் என்றெல்லாம் கூறுவதன் விளைவு எவ்வாறு இருக்கும்.-என்றார். (த)

## அதிகார மோகமுடையவர்கள் என்னை பதவி விலக்க முயற்சி

### தயான் ஜயதிலக்க கூறுகிறார்

கொழும்பு,ஏப்.4
அதிகார மோகமுடைய சிலர் என்னைப் பதவி விலக்க முயற்சிக்கின்றார்கள் என பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். வெளிவிவகார அமைச்சில் கடமையாற்றி வரும் சிலர் எனக்கு எதிராகச் சூழ்ச்சித் திட்டங்களை தீட்டி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.



"தகுதி அடிப்படையில் பதவிகளை வகித்து வரும் நான் சிற்றூழியர்களின் பணிகளை ஆற்ற முடியாது."

தயான் ஜயதிலக்கவுக்கு எதிராக இலங்கைக் குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டு நிர்வாகப் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர் ஜீ.எஸ்.பிரசன்னவினால் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தருஸ்மன் அறிக்கை மற்றும் சனல்4 வீடியோ போன்றே எனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் போலியானவை.

தகுதி அடிப்படையில் பதவிகளை வகித்து வரும் எனக்கு சிற்றூழியர்களின் பணிகளை ஆற்ற முடியாது.

இலங்கையின் தேசிய நலன்களை பிரான்ஸில் பாதுகாப்பதே எனது கடமையாகும். ஜெனிவாவில் அடைந்த தோல்வி தொடர்பில் ஆராய்வதனை விடுத்து, என்மீது அழுத்தங்களை பிரயோகிக்கச் சிலர் முயற்சிக்கின்றனர்-என்றார். (த)

## புதிய ஹெல உறுமயவின் தலைவரை தேடும் பொலிஸ்

### கைத்துப்பாக்கி விற்றாராம்

கொழும்பு, ஏப்.4
நுகேகொடை, பலங்கொடவைச் சேர்ந்த வர்த்தகர் ஒரு வருக்குத் தனது கைத்துப்பாக்கியை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நவ சிஹல உறுமய கட்சித் தலைவர் சரத் மனமேந்திராவை விசாரணைக்கு உட்படுத்தவுள்ளதாக மிரிஹான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக இவர் போட்டியிட்டபோது, அரசினால்இவருக்கு கைத்துப்பாக்கி வழங்கப்பட்டது. இந்தக் கைத்துப்பாக்கி 52,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாக கூறப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வர்த்தகர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மிரிஹான பொலிஸ் நிலையத்திற்கு சமூகமளிக்குமாறு மனமேந்திராவிடம் கேட்ட போது, அதனைச் செய்வதற்கு அவர் தவறிவிட்டதுடன், தனது கையடக்கத் தொலைபேசியையும் நிறுத்தி வைத்துவிட்டார். இதனைத் தொடர்ந்து அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த வர்த்தகர் கைத்துப்பாக்கி ஒன்றை கையில் ஏந்தியவாறு அங்குமிங்குமாக அலைந்துதிரிந்ததாகப் பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து அவர் கைது செய்யப்பட்டதுடன், இரு தோட்டாக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மனமேந்திரனாவினாலேயே இக்கைத்துப்பாக்கி விற்பனை செய்யப்பட்டது என்பதை குறித்த வர்த்தகர் ஒப்புக்கொண்டுள்ளார். (த)

## பரிந்துரைகளை செயற்படுத்துமாறு ரஷ்யாவும் இப்போது கோருகிறது

மொஸ்கோ, ஏப்.4
நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ரஷ்யா கோரிக்கை விடுத்துள்ளது.

ஆணைக்குழுவின் பரிந்துரை அறிக்கையை அமுல்படுத்துவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் விளாடிமிர் மிக்கேய்லோவ் தெரிவித்துள்ளார்.

"சகல இன சமூகங்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தீர்வுத் திட்டம் அமைய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது."

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பாரியளவில் அழுத்தங்களை ஏற்படுத்த வாய்ப்பில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தால் அழுத்தங்கள் அதிகளவில் பிரயோகிக்கப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். புறச்சக்திகளின் தலையீடோ அல்லது அழுத்தங்களோ அவசியமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் சகல இன சமூகங்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தீர்வுத் திட்டம் அமைய வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். முரண்பாடுகளினால் ஏற்பட்ட காயங்கள் வலுவானவை எனவும், அவற்றை துரித கதியில் ஆற்ற முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே அவசர அவசரமாக தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டுமென அழுத்தங்களை பிரயோகிப்பது பொருத்தமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.(த)

## வாகனம் ஏற்றிவரும் கப்பல்கள் இனிமேல் அம்பாந்தோட்டைக்கு

கொழும்பு, ஏப்.4
வாகனங்களை ஏற்றி வருகின்ற கப்பல்களை, எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்துக்கு அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் வாகனங்களை இறக்கும் செயற்பாடுகளில் நிலவுகின்ற தாமதங்களைக் கவனத்திற் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக சில சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களை விடுவிப்பதில் தாமதம் நிலவுகின்றமை காரணமாக, கொழும்பு துறைமுகத்தை அண்மித்து வாகனங்களை ஏற்றிவரும் கப்பல்களில் இருந்து இறக்கும் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாகவும் துறைமுகங்கள் அதிகாரசபை தெரிவிக்கின்றது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழில் அபிவிருத்திக்கு ரூபா 26 மில்லியன் ஒதுக்கீடு

## கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ். மாவட்டத்தின் கடற்றொழில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 26 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு மூலமே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடம் மேற்கொள்ளப்பட வேண்டிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் தேவைக்காக 40 மில்லியன் ரூபா தேவை என முன்மொழியப்பட்டபோதும் 26 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி மூலம் கட்டடங்களை அமைக்கவுள்ளோம். மேலும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதியுதவிகள் கோரப்படும்- என்றார். (த-3)

### பால்மா வழங்கல்

523ஆவது படையணி பிரிவுக்கு உட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பால் மா வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை மு.ப. 8.30 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயிலடியில் உள்ள கலாசார மண்டபத்தில் இடம்பெறும். மீசாலை, சரசாலை மட்டுவில், நுணாவில், கல்வயல், சாவகச்சேரி, கைதடி, நாவற்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பயன்பெறலாம். (த-9)

### அடிதடிகாரர் விளக்கமறியலில்

கைகலப்பில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவரையும் இரண்டு நாள்கள் விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கொழும்புத்துறைப் பகுதியில் தமக்கிடையே கைகலப்பில் ஈடுபட்ட இருவரையும் யாழ். பொலிஸார் கைது செய்து நீதிவான் மா. கணேசராஜாவிடம் முன்னிலைப்படுத்தினர். அதன்போதே விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (10-4)

### சக சாரதி கடித்ததில் மற்றவர் காயம்

மது போதையில் வந்த ஓட்டோ சாரதி மற்றொரு ஓட்டோ சாரதியைக் கடித்துக் காயப்படுத்தினார். காயமடைந்தவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மல்லாகம் சந்தியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சந்தியில் ஓட்டோ வைத்திருக்கும் இருசாரதிகளுக்கும் இடையே பிணக்கு ஏற்பட்டது. இந்த வேளையில் ஒரு சாரதி மோட்டார் சைக்கிளில் இருந்த வேளையில் மற்றைய சாரதி திடீரென இவரின் நெஞ்சுப் பகுதியில் கடித்துள்ளார். அதனைத் தொடர்ந்து அங்கு நின்றவர்கள் இருவரையும் விலக்க முற்பட்டபோதிலும் ஒருவர் நெஞ்சுப் பகுதியில் மிகவும் ஆழமாக கடிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பின விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-86)

### தொல்பொருள் காட்சியகத்துக்கு பொலிஸ் காவல்

தொல்பொருள் காட்சியகத்துக்கு இரவு பகலாகப் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள தொல்பொருள் காட்சியகத்தில் உள்ள பொருள்களை திருடர்களிடம் இருந்து பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்பு தொல்பொருள் காட்சியகத்தில் வரலாற்றுப் புகழ் மிக்க தொல்பொருள்கள் திருடப்பட்ட நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள தொல்பொருள் காட்சியகத்துக்கும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (த-86)

## பருத்தித்துறை வைத்தியசாலையில் சிசுக்கள் காப்பகம் திறந்து வைப்பு

வடமராட்சி, ஏப்.4

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பிரசவ விடுதியில் சிசுக்கள் காப்பகம் சிகிச்சைக்கூடம் குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் கே.சிவகுமாரினால் திறந்து வைக்கப்பட்டது.

குறைந்த மாதத்தில் பிரசவிக்கும் குழந்தைகள், நிறை குறைந்த குழந்தைகள், குழந்தைக்குரிய முதிர்ச்சியடையாத குழந்தைகள் இந்தக் காப்பகத்தில் வைத்து சிகிச்சை அளிக்கப்படும்.

நவீன வசதிகள் கொண்ட பிரசவ அறை இந்த வைத்தியசாலையில் இருந்த போதிலும் சிசுக்கள் காப்பகம் இன்மையால் குறைமாத குழந்தைகள், நிறை குறைந்த குழந்தைகள், முதிர்ச்சியடையாத குழந்தைகள் பிரசவ மாகும்போது அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கமுடியாத நிலை இருந்தது.

இதன் காரணமாக இவ்வாறான குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அவர்களையும் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலமோ தனியார் வாகனத்திலோ அனுப்பி வைக்க வேண்டிய நிலை இருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் வைத்தியசாலையில் உள்ள மிகக் குறைந்த வளாகத்துடனும், ஏற்கனவே இருந்த சில உபகரணங்களுடனும் யுனிசெவ் நிறுவனம் அண்மையில் வழங்கிய உபகரணத்தையும் வைத்து வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க நிதி உதவி, அனைத்துத்தரப்பு ஊழியர்களின் ஒத்துழைப்புடனும், குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் சிவகுமாரின் பெருமுயற்சியினால் பதில் வைத்திய அத்தியட்சகரின் அனுசரணையுடன் சிசுக்கள் காப்பகம் உருவாக்கப்பட்டுள்ளது.

சிசுக்கள் காப்பகச் சிகிச்சைக் கூடம் திறக்கப்பட்டதனால் வடமராட்சிப் பிரதேச பெற்றோர்கள் குறிப்பிட்ட குழந்தைகளுக்கான சிகிச்சைகளைப் பெற யாழ். போதனா வைத்தியசாலை செல்ல வேண்டிய சிரமங்கள், கஷ்டங்கள் நீங்கியுள்ளன.

இந்த நிகழ்வில் டாக்டர் எஸ்.பிரேமானந், தலைமைத் தாதி திருமதி மலர் மதிவரதராஜா, தாதிய உத்தியோகத்தர் புஸ்பராணி கருணாகரன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (த-8)

## சுகாதாரப் பரிசோதகருக்கு தொலைபேசியில் மிரட்டல்

### ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஏப். 4

சுகாதாரத்துக்குக் கேடான வகையில் உணவகம் நடத்தி வந்தவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவருக்குத் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து மிரட்டல் விடுத்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். சந்தேக நபர் அரச உத்தியோகத்தர் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்தது.

அராலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள உணவகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அந்த உணவகம் சீர்கேடாக இயங்கி வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அதன் உரிமையாளருக்கு எதிராக சங்கானை சுகாதார வைத்திய அதிகாரப்பிரிவுக்கு உட்பட்ட அராலிப்பிரிவுப் பரிசோதகர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

அதனையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தொலைபேசியில் மிரட்டப்பட்டுள்ளார்.

தொலைபேசியில் தொடர்பு கொண்ட அந்த அரச அதிகாரி தான் வழக்கறிஞர் எனவும், பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு எதிராக மேல் மட்டங்களில் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் கூறி தகாத வார்த்தைகளால் மிரட்டல் விடுத்துள்ளார். அவர் இவ்வளவும் மிரட்டல் விடுத்தபோது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அவற்றைக் கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து அதனைப் பொலிஸாரிடமும், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கும் கையளித்து முறைப்பாடு செய்தார்.

**அராலிப் பகுதியில் சீர்கேடான முறையில் இயங்கிய உணவகம் ஒன்றிலேயே சுகாதாரச் சீர்கேடு.**

இதனையடுத்து இது தொடர்பாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பொலிஸ் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அரச அதிகாரியான சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. தான் மதுபோதையில் அவ்வாறு நடந்து கொண்டதாக அவர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். (த-4)

## இளவாலை ஆஸ்பத்திரியில் மகப்பேற்று விடுதி திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4

இளவாலை பிரதேச வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி செயற்படத் தொடங்கியுள்ளதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.கணேசலிங்கம் தெரிவித்தார்.

இதற் மூலம் அப்பகுதியில் உள்ள மக்களுக்கான வைத்திய சேவைகளை முழுமையாக வழங்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இளவாலைப் பிரதேச வைத்தியசாலை தற்போது புதிய கட்டடத்தில் செயற்பட்டு வருகின்றது. இதன் மூலம் தினமும் பெரும் எண்ணிக்கையானோர் பயனடைந்து வருகின்றனர். கடந்த 23ஆம் திகதி முதல் வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியும் இயங்க ஆரம்பித்துள்ளது என வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மேலும் கூறினார்.


இளவாலைப் பகுதி மக்களுக்கும் அண்மையில் மீளக் குடியமர்ந்த வலி.வடக்குப் பகுதி மக்களுக்கும் இந்த மகப்பேற்று விடுதி மூலம் சிறந்த சேவையை வழங்க முடியும் எனவும் அவர் மேலும் கூறினார். (த)

## சின்னம் சூட்டுதல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.4

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன் கலந்துகொள்வார். (த-9)



காரைநகர் ஆலயங்களில் அண்மைக் காலமாக திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன. ஆலயங்களின் எழுந்தருளி ஐம்பொன் விக்கிரகங்களை மட்டுமன்றி வாகனங்களின் தலைகளையும் [illegible] அம்மன் ஆலயத்தில் குதிரை வாகனத்தின் தலையையும், பத்தர்கேணி [illegible] ஆலயத்தில் யானையின் தலையையும் திருடர்கள் கொய்துள்ளனர். (த-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திகை பொதுச் சந்தை ஆண்டிறுதிக்குள் புனரமைப்பு

வடமராட்சி, ஏப். 4

ஒரு சில வருடங்களாக அரைகுறையாக உள்ள மந்திகை பொதுச்சந்தை புனரமைப்பு வேலைகளை இந்த ஆண்டுக்குள் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்வதெனப் பருத்தித்துறைப் பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் இந்தச் சபையால் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் வருமாறு:

* மந்திகை பொதுச்சந்தையில் புதிய கடைத் தொகுதி அமைத்தல்.
* திக்கம்மானாண்டி பொதுச்சந்தைக் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்வதோடு, புதிய கடைத்தொகுதி ஒன்றும் கட்டப்படும்.
* கெருடாவில் அம்மன் வீதி, இன்டர்சிட்டி வீதி, மந்திகை கண்ணகை அம்மன் கோயில் வீதி ஆகிய வீதிகள் திருத்திப் புனரமைக்கப்படும்.
* வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மணல்காடு உள்ளக வீதியும், மடத்து வாசல் பிள்ளையார் வீதியும் திருத்திப் புனரமைக்கப்படும். (த-8)

### சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு மீண்டும் கடன்

01 தியுமாக கடனை வழங்க சர்வதேச நாணய நிதியம் ஜூலை 23 ஆம் திகதி வரை கால எல்லை பெற்றுள்ளது. இலங்கையில் முன்னெடுக்கப் படும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் சர்வதேச நாணய நிதியம் கடன் தொகையை வழங்க தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவுடன் இலங்கை அணு பாதுகாப்பு ஒப்பந்தம்

01 ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக கூடங்குளம் அணுமின் நிலையம் மன்னாருக்கு அருகில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2052ஆம் ஆண்டளவில் இந்தியா அணு ஆலைகளின் மூலம் பெருமளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் எனவும், அணு ஆலைகளின் மூலம் இலங்கைக்கு பாதகமான சூழ்நிலை ஏற்படலாம் எனவும் இலங்கை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கூடங்குளம் அணு மின் நிலையம் இரண்டு மாதத்துக்குள் செயல்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழக சட்டசபையில் தெரிவித்துள்ளார். (த)

### வவுனியாவில் இளைஞர் வெட்டிக் கொலை

01 சம்பவம் நேற்றுமதியம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த எஸ்.கிருபாகரன் (வயது-25) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

உக்கிளாங்குளம் சீர்திருத்த விளையாட்டுக் கழக மைதானத்தில் குறித்த இளைஞன் நின்றிருந்த வேளை மோட்டார்சைக்கிளில்வந்த இருவர் இவரை கத்தியால் வெட்டி கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஜெனிவா தோல்வியின் எதிரொலியே இலங்கையின் புலிக் குற்றச்சாட்டு

01 அரசியல்கட்சிகளுக்கும் கோபத்தை ஏற்படுத்தியுள் ளது.

இந்தச் செய்தி ஆதாரமற்றது என்றும் முற்றிலும் தவறானது என்றும் கொழும்பிலுள்ள தூதரகம் ஊடாக இந்தியா அறிக்கை வெளியிட்டுள்ளது. அதேவேளை தமிழக பொலிஸ்மா அதிபரும் இதனை மறுத்துள்ளார்.

ஆனாலும் இந்தியா மீது இலங்கை திட்டமிட்டே சுமத்தியுள்ள குற்றச்சாட்டாகவே டில்லி இதனைக் கருதுகிறது.

ஜெனிவா தீர்மானத்தை ஆதரித்ததன் எதிரொலியாக, இந்தியா மீது பழிபோடும் வகையில் இலங்கை செயற்படுவதாக அங்குள்ள இராஜதந்திரிகள் கூறியுள்ளனர்.

செய்தியில் அரச புலனாய்வுச் சேவை ஆதாரம் காட்டப்பட்டுள்ளநிலையில்,இதன்பின்னணியில் இலங்கை அரசே இருப்பதாக இந்தியா கருதுகிறது எனவும் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வாடகை வீடுகளும் இல்லை நடுத்தெருவில் நிற்கிறோம்

01 அனுமதியுங்கள். இவ்வாறு கோரி வலி. வடக்கு இடம் பெயர்ந்தோர் மீள்குடியமர்வுக் குழுவினால் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுக்கு மகஜர் கையளிக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் மீள்குடிய மர்வுக்குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் மேற்படி மகஜரினைக் கையளித்தார்.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யுத்தம் நிறைவடைந்து 3 வருடங்கள் நிறைவடையும் நிலையில் எமது சொத்துக் களையும் இழந்து உண்ணும் உணவுக்கே கஷ்டப்படுகிறோம். இந்த நிலை மாற்றித்தரப்பட வேண்டும்.

வலி.வடக்கு பிரதேசத்தில், காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டித்துறை, மயிலிட்டி வடக்கு, பலாலி வடக்கு, பலாலி வட மேற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நாங்கள் 1990 ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தோம். இதன் பின்னர் நாங்கள் சந்தித்த உயிரிழப்புக்கள், உடைமை இழப்பு க்கள் ஏராளம்.

யுத்தம் நிறைவடைந்த போது எமது இடங்களும் விடுவிக்கப்படும் என எண்ணிச் சந்தோசப்பட்டோம் ஆனால் அது தற்போது ஏக்கமாக மாறத் தொடங்கிவிட்டது. நாம் இடம்பெயர்ந்து தங்கியிருந்த நண்பர்கள், உறவினர்கள், வீட்டுக்காரர்கள் வெளிநாடுகளில் இருந்து மீளத் திரும்பி வருவதால் நாம் அந்த வீடுகளை விட்டு வெளியேறி நடுத் தெருவில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

1996, 2000,2009 ஆம் ஆண்டுகளில் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி மீளக்குடியமர்ந்துள்ள போதும் கடல் வளத்தினாலும், விவசாய வளத்தினாலும் உழைப்பின் மூலம் நாட்டின் வருமானத்தை உயர்த்தி நின்ற நாம் எமது வீட்டுக்கு செல்ல முடியுமா? என்ற ஏக்கத்துடன் விரக்தியடைந்த நிலையில் வந்துள்ளோம். எங்களது சொந்தக் காணியில் இருந்து தொழில் செய்ய அனுமதியுங்கள் என்றுள்ளது.

இந்த மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்த அரச அதிபர் இந்தப் பகுதிகள் தொடர்பில் முடிந்த முடிவாக என்னால் எதுவும் செய்ய முடியாது இராணுவத்தினர் அனுமதி தந்தால் மாத்திரமே மீளக் குடியமர்வை மேற்கொள்ள முடியும்- என்றார். (த-5)

# வடக்கு,கிழக்கு பகுதிகளில் சிவில் நிர்வாகம் இல்லை

01 நாடாளுமன்றக்குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் நேற்று சபையில் விசேட பிரேரணையொன்றை முன்மொழிந்து உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசு தேசப்பற்றைத் தனது தேவைக்கேற்ப பயன்படுத்துகின்றது. அரசு அமெரிக்காவைச் சார்ந்து செயற்பட வேண்டியுள்ளதால் கை, கால்கள் கட்டப்பட்டு நாட்டின் தேசப்பற்று அங்கவீனமாகியுள்ளது.

நாட்டின் ஒருமைப்பாடு, உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிடுவதற்கான நுழைவாயில் ஜெனிவாவில் அமைக்கப்பட்டுள்ளது. மியன்மாரில் குண்டு மழை பொழிந்து மக்களைப் படுகொலைசெய்த அமெரிக்காவுக்கு மனிதஉரிமைகள் பற்றிப் பேசும் அதிகாரம் கிடையாது.

ஐக்கிய நாடுகள் சபை ஆணத்தில் அமரும் அனைத்து அங்கத்துவ நாடுகளுக்கும் சமவுரிமை, சமஅந்தஸ்தை வழங்கவேண்டிய ஐக்கிய நாடுகள்சபை இன்று ஏகாதிபத்தியவாதிகளின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனமாகச் செயற்படுகின்றது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள் தொடர்பில் அமைச்சர்கள் முரண்பட்ட கருத்துகளை வெளியிடுகின்றனர். ஜெனிவா மாநாடு நிறைவடைந்த கையோடு ஊடகவியலாளர்கள் மாநாட்டை நடத்திய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை ஏற்கமுடியாது என்றும், மேற்குலகத்தின் தாளத்திற்கேற்ப எம்மால் ஆடமுடியாது என்றும் கூறினார்.

ஆனால், அமைச்சர் பீரிஸ் வெளியிட்ட கருத்துகள் தனிப்பட்ட கருத்துகள் என்றும், அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு அறிவிக்கப்படும் என்றும் ஊடகத்துறை பதில் அமைச்சர் கூறுகின்றார். சர்வதேச பிரச்சினைகளை சாதாரணமாகக் கருத்திற்கொண்டு அமைச்சர்கள் மாறுபட்ட கருத்துகளை வெளியிடுவதால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஏகாதிபத்திய நாடுகள் இன்று ஏனைய நாட்டு உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு முதுகெலும்பில்லாத தலைமைகளே பிரதான காரணமாகும். ஐ.நா.சபை என்பது அவசியம். ஆனால், அந்தச்சபை பக்கச்சார்பாக செயற்படக்கூடாது.

**இலங்கை அமெரிக்காவைச் சார்ந்துள்ளது**

போர்க் காலத்தில் இலங்கை அரசு அமெரிக்காவுடன் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தங்களால் இன்று அரசு அமெரிக்காவைச் சார்ந்து செயற்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.பாதுகாப்புச் செயலாளருக்கும் ரொபேட் ஓ பிளேக்கிற்குமிடையே இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இலங்கையின் வான் பரப்பு, துறைமுகங்கள் உட்பட முக்கிய வளங்களை அமெரிக்கப் படைகள் தேவையேற்படும்போது பாவிக்கலாம் என அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசு இன்று பொருளாதார ரீதியில் அமெரிக்காவுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கெல்லாம் தலைசாய்த்து செயற்பட வேண்டிய நிலை அரசுக்கு உள்ளது. தேசப்பற்றுக் குறித்து அங்குமிங்கும் பேசித்திரியும் அரசு உள்நாட்டு விவசாயிகளுக்கு காணிகளை வழங்காமல் அமெரிக்காவுக்கு வழங்குவது ஏன்? இதுதான் அரசின் தேசப்பற்றா?

**அடிமை அரசு**

சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு வழங்கவுள்ள அடுத்தக்கட்ட நிதியை பெற்றுக் கொள்வதற்காக அவர்களின் நிபந்தனைகளுக்கு அரசு கட்டுப்பட்டுள்ளது. நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றே அரசு செயற்படுகின்றது. உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும் போது இங்கு விலைகளை அதிகரிக்கும் அரசு உலக சந்தையில் விலை குறையும் போது இங்கு விலைகளை குறைக்காதது ஏன்?

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறே மக்கள் கேட்கின்றனர் ஆனால், அரசு ஜனநாயகத்தைப் பறித்துள்ளது.

வெள்ளைவான் கலாசாரம் சட்டத்தில் ஒரு அங்கமாக சேர்க்கப்பட்டுள்ளது. அரசின் கடமையை நிறைவேற்ற நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையோ, அல்லது ஜெனிவா தீர்மானமோ கூறும் வரை காத்திருக்க தேவையில்லை. செய்து முடிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது.

ஜெனிவா தீர்மானம் நிறைவேறினால் ஜனாதிபதி மின்சார கதிரையில் அமரவேண்டி வரும் என அரசு ஜெனிவா பிரச்சினையை பூதாகரப்படுத்தியது. ஆனால், அது உண்மையல்ல - என்றார்.

சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களில் ஏகாதிபத்தியத்தின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் நிறுவனங்களாக செயற்படுகின்றன.

அமெரிக்கா ஒரு நாட்டின் சில வளங்களை இலக்கு வைத்தே செயற்படுகின்றது. அதன் ஒழுங்குபத்திரத்தில் இந்தக் காரணி முக்கியமானது.

வடக்கு, கிழக்கில் இன்று திரும்பும் திசையெல்லாம் இராணுவம் உள்ளது. தெற்கில் நாம் இராணுவத்தினரை பூமாலை போட்டு வரவேற்கலாம் ஆனால் வடக்கு மக்களுக்கு இன்னும் அச்சம் உள்ளது. இதனை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

# தீர்வை முன்வைக்காவிடில் நாடு பிளவுபடும் பேராபத்து

01 எமக்கு உண்டு. இதனை உதாசீனப்படுத்தினால் அதனால் ஏற்படும் விபரீதங்களையும் உணரவேண்டும்.

அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஒரு வாரத்தின் முன் இந்திய வெளிவிவகார அமைச்சர் 13 பிளஸ் தொடர்பாக விளக்கம் கேட்டபோது நீங்கள் மௌனம் சாதித்ததினாலேயே இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்தது. இதுதான் உண்மை. இதை ஏன் மூடி மறைக்கின்றீர்கள். இதோ இப்போதும்கூட வெளிவிவகார அமைச்சர் அமைதியா கத்தான் இருக்கின்றார். கிருஷ்ணாவின் கேள்விக்கும் இப்படி மௌனம் காட்டியதால்தான் விபரீத முடிவு ஏற்பட்டது.

அமெரிக்காவால் முன் வைக்கப்பட்ட பிரேரணை இன்று ஐ.நாவின் தீர்மானமாகிவிட்டது.

ஜெனிவாத் தீர்மானத்தால் எமது நாட்டின் இறைமை பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறுவது தவறு.

இங்கே இல்லாத எதைப் பற்றியும் தீர்மானத்தில் கொண்டுவரப்படவில்லை.

- ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை.
- சட்டவிரோத படுகொலைகள்.
- கடத்தப்பட்டு காணாமல் போனோர்.
- தடுப்பு முகாம்களில் இருப்பவர்களின் விவரங்களை வெளிப்படுத்தல்.
- வடக்கில் சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்துதல்.
- ஊடக சுதந்திரங்களை உறுதிப்படுத்தல்.
- மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை அதிகரித்தல்.
- சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டுதல்.
- கருத்துக்கூறும் சுதந்திரம் ஊர்ஜிதப்படுத்தப்பட வேண்டும்.

இவை அனைத்தும் ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் முன்மொழிவுகள் தானே.

ஐ.நா. சபையின் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவை நிராகரித்து எம்மால் உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவோம் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உறுதியளித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சட்டவிரோத மரணங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

உங்களுடைய நல்லிணக்க ஆணைக்குழு, இடைக்கால அறிக்கையில் இரண்டு முக்கியமான விடயங்களை முன்வைத்தது.

- தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படவேண்டும்.
- சட்டவிரோதமாக் இயங்கும் துணைப்படைகளைத் தடைசெய்து அவற்றின் ஆயுதங்களும் களையப்படவேண்டும் - என்று கட்டாயப்படுத்தியது.

ஆனால், இன்றுவரை இவை நடைமுறைப்படுத்தப்படவில்லையே.

இது மட்டுமல்ல, பிராந்தியத்தில் அமெரிக்கா மேற்கொள்ளும் யுத்த நடவடிக்கைகளுக்கு இலங்கை சகல விதமான உதவிகளையும் வழங்கும் என்ற உடன்படிக்கையில் ஜனாதிபதிதான் கையெழுத்துப் போட்டுள்ளார்.

அன்று அமெரிக்காவுக்கு வாக்குக் கொடுத்து நாட்டைக் காட்டிக்கொடுத்தவரே ஜனாதிபதிதான்.

ஐ.நா. மனித உரிமை சபை முற்று முழுதாக அமெரிக்காவின் கட்டுப் பாட்டில் இயங்கும் ஒரு பொம்மை நிறுவனம் என்று குற்றஞ் சாட்டுகின்றீர்கள்.

அப்படியானால்,அமெரிக்காவால் கியூபாவுக்கும், இஸ்ரேலுக்கும் எதிராக முன் வைக்கப்பட்ட இரண்டு பிரேரணைகளும் தோற்கடிக்கப் பட்டன. இந்தப் பிரேரணைகளும் வெற்றி பெற்றிருக்க வேண்டுமே.

அங்கே நியாயம் இருந்தது. உங்களிடம் நியாயம் இல்லை. இதுதான் உண்மை.

வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாத் தீர்மானத்தால் பொருளாதாரத் தடை எதுவும் வராது என்கிறார். ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் நினைத்தால் இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை ஏற்படுத்த முடியும்.

இதனை வெளிவிவகார அமைச்சர் இந்தச் சபையில் மறுப்பாரா?

இந்த அமைச்சர் எவை எல்லாம் வராது, ஏற்படாது என்று கூறினாரோ அவை எல்லாம் இன்று நடை பெற்றுவிட்டன.

ரொபேர்ட் ஓ பிளேக் இந்த மண்ணில் இருந்து கொண்டே இலங்கைக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று கூறினார். அப்போது உங்களுடைய இறைமை எங்கே போனது.

நாட்டுக்கு ஆதரவு தேட ஜெனிவா சென்ற அமைச்சர்கள் தமக்குள் சண்டை பிடித்தனர். அங்கே இருந்து கொண்டு மனித உரிமை ஆர்வலர் பாக்கியசோதி சரவணமுத்து உட்பட ஊடகவியலாளர்களை மிரட்டினர்- என்றார் லக்ஷ்மன் கிரியெல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கம்பளத்தின் கீழே கூரான ஆணிகள்

எமது கட்சிக்குக் கிடைத்துள்ள வெற்றி, நாட்டின் அரசியல் நிர்வாகத்தில், அதன் ஆட்சியில், தாமும் பங்காளராக இருக்க வேண்டும், பங்குதாரர்களாகச் செயற்பட வேண்டும் என்று விழைந்த மக்களுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.

இவ்வாறு தெரிவித்திருப்பவர், மியன்மார் நாட்டில் ஜனநாயகத்தை மீள்விப்பதற்காகப் பெரும் பாடுபட்டுவரும் ஆங்சான் சுகி.

கடந்த வார இறுதியில், நாடாளுமன்றத்தில் 45 ஆசனங்களுக்காக நடைபெற்ற தேர்தலில் அவரது தேசிய ஜனநாயக லீக் கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைத்ததாகப் பூர்வாங்க முடிவுகள் மூலம் தெரியவந்தது. இறுதி முடிவுகள் உத்தியோகபூர்வமாக வெளியாவதற்கு இன்னும் ஒரு சில நாள்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மியன்மாரில் இப்போது நாடாளுமன்றம் இராணுவத்தின் ஆதிக்கத்தில் உள்ளது. அந்தப் பிடியில் இருந்து நாடும் அதன் மக்களும் மீள்வதற்கும், ஜனநாயகத்தை மீள்விப்பதற்கும் ஆங்சான் சுகியின் கட்சியின் வெற்றி முதற்படியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் ஜனநாயகத்துக்காகப் போராட்டங்களை நடத்தியவர் ஆங்சான் சுகி. அதற்காக இராணுவ ஆட்சியாளர்களால், 20 வருட காலத்துக்கு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு, கொடுமைக்குள்ளாக்கப்பட்டவர்.

முன்னர் பர்மா என்று அழைக்கப்பட்டு, இராணுவ ஆட்சியினரால் மியன்மார் என்று பெயர் மாற்றப்பட்டது, அங்கு நீண்டகாலமாக, சுமார் 22 வருடங்களாக நாடாளுமன்ற ஆட்சி என்ற பெயரில் இராணுவ ஆட்சியாளர்களே கோலோச்சினார்கள்.

அதனாலேயே அந்த நாட்டில் புதிய யுகம் ஒன்று பிறப்பதற்கான ஒளிக்கீற்றுத் தெரிகிறது. ஆங்சான் சுகியும் அதனை மனதில் வைத்தே, தமது நாட்டில் புதிய யுகம் ஒன்று பிறக்கிறது என்று கருத்து வெளியிட்டிருக்கிறார். அத்தோடு அரசியல் கட்சிகள் யாவும் ஐக்கியமாக, ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும் என்றும் அறைகூவல் விடுத்துள்ளார்.

தேர்தலில் பங்குபற்றிய கட்சிகள் அனைத்தும் தம்மோடு சேர்ந்து உழைக்க வேண்டும், அதனூடாகவே உண்மையான, நேர்மையான ஜனநாயக சூழ் நிலையைத் தோற்றுவிக்க முடியும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இப்போது நாம் அடைந்துள்ள வெற்றியை, எங்களின் கட்சிக்குச் சேர்ந்த வெற்றி என்பதை விட மக்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகவே கொள்ள வேண்டும் என்றும் அவர் ஆக்கபூர்வமான அர்த்தம் மிகுந்த கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். எல்லாம் நல்லவையாக நடைபெறுவதற்கு, நாட்டில் சிதைக்கப்பட்டுள்ள ஜனநாயகத்துக்குப் புது மெருகும், புது வடிவமும் கொடுக்கவேண்டும் என்ற அவரது கூற்று அவரின் அரசியல் தூரநோக்கை வெளிப்படுத்துகிறது.

மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுத்து அவர்களைத் தொடர்ந்து அடக்கி வைக்கமுடியாது என்பதற்கு மியன்மாரின் இடைத்தேர்தல் முடிவு ஒரு சிறந்த உதாரணம்.

முதல் தடவையாக நாடாளுமன்றம் செல்லும் சுகி 2015ஆம் ஆண்டு, மியன்மாரில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவாரானால், அவர் ஜனாதிபதியாகி மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்டுவார் என்று மக்கள் நம்புகிறார்கள் அதனாலேயே அவரது கட்சிக்கு அமோக ஆதரவு நல்கி உள்ளனர்.

ஆனால், இராணுவ அதிகாரிகளும் ஒய்வுபெற்ற ஜெனரல்களும் முக்கிய பதவிகளில் உள்ள மியன்மாரில் ஆட்சி மாற்றம் என்பது சுலபமாக இருக்கமாட்டாது என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

1962ஆம் ஆண்டு முதல் மியான்மர் இராணுவத்தின் செல்வாக்கின்கீழ் இருந்துவருகிறது. 1990ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆங்சான் சுகியின் கட்சி அமோக வெற்றியீட்டியபோதும் அவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அந்தத் தேர்தல் செல்லுபடியற்றதாக்கப்பட்டது. அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

தற்பொழுது நடைபெற்ற இடைத்தேர்தலில் தனது தொகுதியில் இராணுவ வைத்தியர் ஒருவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஆங்சான் சுகி அமோக வெற்றி ஈட்டியுள்ளார்.

2015 தேர்தல் சுதந்திரமாக நடத்தப்பட்டு ஆங்சான் சுகி வெற்றிபெறுவாரானால், மியான்மரின் எதிர்காலம் பிரகாசம் அடையும் என்றும் கொள்ளலாம்.

ஜனநாயகத்தை மதிக்காது சர்வாதிகார ஆட்சி நடத்தும் தென்கிழக்காசிய நாடுகளுக்கு ஆங்சான் சுகியின் தலைமையில் இன்னும் மூன்று வருட காலத்தில் மியான்மரில் அமையப்போகும் அரசு ஒரு நல்லபடிப்பினையாக இருக்கும்.

இலங்கையிலோ ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகக் கூறப்படினும், காட்டப்படினும் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் அவர்களின் கைகளுக்கு இன்னும் வந்து சேரவில்லை என்பதே யதார்த்தம்; உண்மை. அவர்களுக்கு உரித்தான வாழ்விடங்களில், வடக்கு, கிழக்கில் ஜனநாயக ஆட்சி என்ற கம்பளத்துக்குக் கீழ் ஆகக்குறைந்தது 40 சதவீதம் ராணுவ நிர்வாகம் என்ற கூரான ஆணிகள் இடையீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலைமையை நீக்குவதற்கு தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய ஆட்சி வடிவங்கள் தேவை. மியான்மரின் தேர்தல் முடிவுகளுக்குப் பிந்திய காலத்துக்கான எதிர்வு கூறல்கள் அதனையே ஒப்படை உதாரணங்களாகக் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றன.

# பெரும் நெருக்கடிக்கு மத்தியில் வட மாகாண வைத்தியத்துறை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

வடமாகாணத்தில் போர்க் காலங்களில் எதிர்நோக்கிய சவால்களைப் போல, மேலதிகக் கடமைச்சுமை காரணமாக இன்றும் வைத்திய அதிகாரிகளும், மக்களும் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

வட மாகாணத்திலுள்ள சில நிர்வாக நடைமுறைச்சிக்கல்கள் காரணமாக இந்த நிலைமை மேலும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரும் முறையற்ற நியமனங்களை வழங்குவதோடு, போலி வைத்தியர்களின் செயற்பாடுகளுக்கும் காரணமாக இருக்கிறார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தமது தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பைத் தொடர்ந்து வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வட மாகாணமானது 5 நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. போதனா வைத்தியசாலை ஒன்றையும் நான்கு பொது வைத்தியசாலைகளையும், 6 ஆதார வைத்தியசாலைகளையும், 55 பிராந்திய வைத்தியசாலைகளையும், 28 ஆரம்ப சுகாதார வைத்தியசாலைகளையும், 29 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த மாவட்டங்களில் 468 வைத்திய அதிகாரிகளும், 75 மருத்துவ நிபுணர்களும் கடமையாற்றி வருகின்றனர். இங்கு 10 லட்சத்து 87 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். ஆனால் இங்குள்ள வைத்தியருக்கும் மக்களுக்கும் இடையே உள்ள விகிதமானது 1 இற்கு 2 ஆயிரத்து 323 ஆகக் காணப்படுகிறது. இந்த விகிதமானது ஏனைய பிராந்தியங்களில் 1 இற்கு ஆயிரத்து 300 ஆகக் காணப்படுகிறது.

இங்குள்ள ஒரு சில நிர்வாக நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக நிலைமை மேலும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது.

வைத்திய அதிகாரிகளின் நியமனம் பகிரங்க சேவைகள் ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் வட மாகாண சபையின் சுகாதார அமைச்சின் செயலாளரும், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தன்னிச்சையாக நியமனங்களையும் இடமாற்றங்களையும் வழங்கி வருகின்றனர்.

இவர்களின் முறையற்ற செயற்பாடுகள் பெருமளவு பாதிப்புக்களை உண்டுபண்ணியி ருக்கின்றன.

வட மாகாணத்தில் போலி வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆங்கில மருத்துவம் பயிலாதவர்களும் ஆங்கில மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குகின்றனர். இதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

எனினும் சுதேச மருத்துவ நிலையங்களில் இருந்து மீட்கப்பட்ட ஆங்கில மருந்து வகைகளையும் அவற்றை நோயளர்களுக்கு வழங்குவதற்குரிய அனுமதியையும் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரனின் உத்தரவால் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். சுதேச மருத்துவர்கள் ஆங்கில மருந்து வகைகளை நோயாளர்களுக்கு வழங்கக் கூடாது என்ற அடிப் படையையேனும் ரவீந்திரன் தெரிவித்திருக்கவில்லை. இதனைக் கண்டிக்கிறோம்.

தொழில் சார் விடயங்களில் அது தொடர்பான அறிவில்லாதோர் தேவையற்ற விதத்தில் தலையிடுவதையும் நாம் கண்டிக்கிறோம் - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# பிரதம மதுவரிப் பரிசோதகராக 48 பேருக்கு பதவி உயர்வு

## வடக்கு-கிழக்கில் 6 பேர்

யாழ்ப்பாணம்,ஏப்.4

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மதுவரிப் பரிசோதகர்கள் 6 பேர் பிரதம மதுவரிப் பரிசோதகர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். நாடு பூராகவிருந்தும் 48 பேர் இவ்வாறு பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான தலைமைத்துவம், முகாமைத்துவம்,சட்டம், உளப்பயிற்சி சம்பந்தமான பயிற்சிகள் நேற்றுடன் நிறைவு பெற்றதோடு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் இவர்களுக்கான பயிற்சிகள் கடந்த 14 நாள்களாக நடைபெற்றன.

மதுவரி ஆணையாளர் நாயகம் எம்.வி.ஹப்புஆராச்சி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சியை ஆரம்பித்து வைத்தார். மனித வள பிரதி மதுவரி ஆணையாளர் யாமல்லவ பயிற்சி நெறிகளை வழங்கியிருந்தார்.

'மதுவுக்கு முற்றுப்புள்ளி' என்னும் திட்டத்தைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதே இதன் நோக்கம் எனக் கூறப்பட்டது.காலை 6.30 மணி தொடக்கம் 7.30 வரை உடற்பயிற்சியும், காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை துறைசார் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

யாழ்.மதுவரிப் பரிசோதகர் என்.கிருபாகரன், சங்கானை மதுவரிப் பரிசோதகர் ரி.நந்தகுமார், மன்னார் மதுவரிப் பரிசோதகர் ஆர்.எஸ்.றாஜு, கல்முனை மதுவரிப் பரிசோதகர் டி.பி.குமார், மட்டக்களப்பு மதுவரிப் பரிசோதகர் எஸ்.றஞ்சன், அம்பாறை மதுவரிப் பரிசோதகர் எஸ்.தங்கராஜா ஆகியோரே வடக்கு கிழக்கில் பிரதம மதுவரிப் பரிசோதகர்களாக பதவி உயர்வு பெற்றனர். (த-4)

# கொக்குவிலில் இளைஞர் குழு அடாவடி

யாழ்ப்பாணம் செப்.04

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியிலுள்ள ''பொற்பதி அறிவாலயம்'' நீர் குழாய், மின்குமிழ் ஆகியன இளைஞர் குழுவொன்றால் அடித்து உடைக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையம் கடந்த மாதம் 25 ஆம் திகதி உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் இந்தநிலையத்தின் கட்டடத்தில் முன்பள்ளி ஒன்றைத் திறந்து வைத்திருந்த நிலையில் முதல்நாள் இதன்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பொற்பதி அறிவாலய நிர்வாககுழுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (த-03)

# கூட்டுறவுத் துறையிடம் இருந்து சமுர்த்தியை நீக்கவேண்டாம்

## அமைச்சர் பஸிலிடம் கோரிக்கை

கொழும்புத்துறை,ஏப்.4

கூட்டுறவுக் கிளைகளூடாக சமுர்த்தி விநியோகத்தை மேற்கொண்டுவரும் நடைமுறையை நீக்கிவிட வேண்டாமெனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் பந்துரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசினால் செயற்படுத்தப்படுகின்ற வறுமை ஒழிப்பு வேலைத் திட்டங்களில் ஒன்றாகிய சமுர்த்தி நிவாரண உதவிப் பொருள்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்தியையடுத்து இக்கோரிக்கை கடித மூலம் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைப் பொருளாதார அபிவிருத்திகளில் மௌனமான பங்களிப்புடன் அரச வேலைத்திட்டங்களில் முன்னின்று பணியாற்றி மக்கள் சேவைபுரியும் கூட்டுறவுத் துறையின் பங்களிப்பு நோக்கத்தக்கது.

306 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிளைகள் 390 கூட்டுறவு நகர்கள் கொண்ட கட்டமைப்பு வலைப் பின்னலுடன் கூட்டுறவுத்துறை இயங்குகிறது.

அரச வேலைத்திட்டங்களுக்கு தோள் கொடுத்து உதவிய கூட்டுறவிலிருந்து சமுர்த்தி நிவாரணம் பகிர்ந்தளிக்கும் பணிகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள செய்திக்கமைவாக அனேக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தேசிய கூட்டுறவுச் சபை இதில் தலையிட வேண்டுமென கோரியுள்ளன.

எனவே மக்களின் வசதிகளையும் சங்கங்களின் ஸ்திரத் தன்மையையும் கருத்திற் கொண்டு சமுர்த்தி பொருள் விநியோகத்தை கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நீக்க வேண்டாமெனக் கோருகிறோம் என்றுள்ளது. (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத் திட்டங்கள் மாத இறுதிக்குள் பூர்த்தி

## திட்டப் பொறியியலாளர் தகவல்

கிளிநொச்சி,ஏப்.4

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்கள் இந்த மாத இறுதிக்குள் பூர்த்தியடைந்து விடுமென இந்திய வீடமைப்புத் திட்டப் பொறியியலாளர் ஏ.ஆனந் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் உதவியுடன் காணிகள் அந்தந்த குடும்பங்களுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் 250 வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 250 வீடுகளும் என மொத்தமாக 500 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் கணிசமான அளவு வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. எஞ்சிய வீடுகளின் வேலைகள் இந்த மாத இறுதிக்குள் நிறைவடைந்து விடும். ஏனைய 43 ஆயிரம் வீடுகளையும் பயனாளிகளே அமைப்பதற்குரிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்குத் தேவையான ஒப்பந்தக்காரர்களை இந்திய அரசு தெரிவு செய்துள்ளது. மேலும் ஏனைய 6 ஆயிரம் வீடுகளையும், காணிகள் இல்லாத குடும்பங்களுக்கு அமைத்து வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# சுவாமி வீதியுலாவுக்கு இராணுவத்தினர் தடை

## கனகாம்பிகைக்குளம் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம் ஏப்.4

இரணைமடுக்குளம், கனகாம்பிகை அம்மன் கோயில் சுவாமி வீதியுலாவுக்கு இராணுவம் முட்டுக்கட்டை போட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இதனால் அந்தப் பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்

இரணைமடுக்குளத்தின் நீர்பாயும் இடங்கள் ஊடாக அம்மன் வீதியுலா வருவது வழமை. வீதியுலாவுக்குச் செல்லும் சுவாமி அழகர்வீதி எனச் சொல்லப்படும் இரணைமடுக் குளக்கட்டின் வழியாக கோயிலைச் சென்றடைவது வழக்கம்.

கடந்த ஞாயிறன்று அம்மன் கோயில் சுவாமி அணைக்கட்டு வழியாக வந்த போது இராணுவம் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளது. பின்னர் சுவாமி திருவையாறு ஊடாகக் கோயிலைச் சென்றடைந்தது.

போர் நிறைவுக்கு வந்த பின்னர், கடந்த ஜனவரி மாதம் அம்மனுக்கு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அம்மன் வீதியுலா வந்த போதே இராணுவம் தடுத்து நிறுத்தியுள்ளது.

அம்மனின் வீதியுலாவுக்குத் தடை விதித்த இராணுவம், தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் அந்த வீதியை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கிறது என்று மக்கள் கூறுகின்றனர். (த-3)

### காப்புறுதி நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு,ஏப்.4

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர்களுக்கு தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் கற்றல் உபகரணங்களும், நூலகத்துக்கு தேவையான ஒரு பகுதி நூல்களும் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கல்வி கற்றுவரும் மிகவும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ''ஒரே மக்கள்'' என்ற தனியார் காப்புறுதி நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களையும் இந்த நிறுவனத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இந்த நிகழ்வு கடந்த முதலாம் திகதி மு.ப. 10 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி ஜெனரல் மார்க், இராணுவ அதிகாரியான பிரிகேடியர் விஜயதிலக மற்றும் மேற்படி காப்புறுதி நிறுவன நிர்வாகி விஜயவர்த்தனா ஆகியோர் இவற்றை வழங்கி வைத்தனர்.

நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஏனைய பாடசாலை அதிபர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (க-6)



கிளிநொச்சி கோணாவில் பகுதியில் திடீரெனத் தீப்பற்றி எரிந்த வீட்டின் பரிதாபகரமான காட்சி (6)

# சித்திரைப் பெருவிழா இம்முறை முல்லை நகரில்

முள்ளியவளை, ஏப்.4

இந்த ஆண்டுக்கான 'சித்திரைப் பெருவிழா' முல்லைத்தீவில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை முல்லைத்தீவு நகரிலுள்ள பொது விளையாட்டு மைதானத்தில் விழா இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தினால் இந்த சித்திரைப் பெருவிழா நடத்தப்படுகின்றது.

இனங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒற்றுமையை வெளிக்காட்டப் போகின்ற நிகழ்வாக இது அமையுமென விழா ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

இந்த நிகழ்வில் எல்லா இன மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் சர்வ மதத்தலைவர்களும் பங்குபற்றவுள்ளனர்.

மூவின மக்களும் தத்தமது கலாசார உடைகளை அணிந்து கலை நிகழ்வுகளில் ஈடுபடவுள்ளனர். அத்துடன் தமக்கே உரித்தான பலகார வகைகளைக் கொண்டு வந்து மற்றவர்களுடன் சேர்ந்து உண்ணவுள்ளனர்.

தமிழ், சிங்களப் பாரம்பரியங்களுக்கு ஏற்ப வீடுகள் அமைப்பதுடன் அவற்றில் மற்றவர்களை உபசரித்து ஒருவரையொருவர் மகிழ்விக்கப் போகின்றனர்.

இந்த விழாவுக்கான முழு வேலைகளையும், பாடசாலைகளும் அரச நிறுவனங்களும் படையினரும் முழு வீச்சில் மேற்கொண்டு வருகின்றனர். (க-433)

### மாணவர் படையணி

முல்லைத்தீவு,ஏப்.4

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் மாணவர் படையணியை ஆரம்பிக்கும் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற் கட்டப் பயிற்சிக்கென முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலிருந்தும் வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் இருந்தும் 50 மாணவர்கள் தியத்தலாவை பயிற்சி முகாமிற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

பயிற்சிகள் நாளை 5ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலைக்கு அழைக்கப்பட்டு இச்செயற்பாடு தொடர்பாக அறிவுறுத்தப்பட்டதுடன் அவர்களின் சம்மதத்துடனேயே மேற்படி மாணவர்கள் இந்தப் பயற்சிக்காக அனுப்பி வைக்கப் படவுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-433)

# கமக்கார அமைப்புகளை புனரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.4

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள சில கமக்கார அமைப்புக்கள் புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று மக்கள் வலியுறுத்துகின்றனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் வலதுகரை வாய்க்காலின் கீழ் ஏழு கமக்கார அமைப்புகளும், இடதுகரையின் கீழ் 15 கமக்கார அமைப்புக்களும் என மொத்தமாக 22 கமக்கார அமைப்புக்கள் உள்ளன. இதில் பல கமக்கார அமைப்புக்கள் நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

2005, 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகங்களே இன்றும் இருந்து வருகின்றன. புதிய நிர்வாகம் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்படாமல் இருப்பதால் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு உரிமையாளர்கள் இல்லாத காணிகள் சில முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதாகவும் மீளக்குடியமர்வின் போது விவசாயிகளின் தேவைகளுக்கென ஒவ்வொரு கமக்கார அமைப்புக்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்ட இரு சக்கர உழவு இயந்திரங்கள் தனிப்பட்டவர்களின் பாவனையிலிருப்பதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

புனரமைக்கப்படாத இத்தகைய அமைப்புக்களை புனரமைப்புச் செய்யுமாறு பல தடவைகள் விவசாயிகள், இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரைக் கேட்ட போதிலும், இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

எனவே வளங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் இந்த அமைப்புக்களைப் புனரமைக்குமாறு பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்களுக்கு வசதியீனம்

கிளிநொச்சி, ஏப்.4

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் கிளிநொச்சி பொதுச் சந்தையில் வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் தாம் பல்வேறு வசதியீனங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பொதுச் சந்தையின் சுற்றுப்புற வேலிகள் சீராக அடைக்கப்படாமல் காணப்படுகின்றன. சந்தைக்கு மூன்று நுழைவாயில்கள் மட்டுமே இருக்க வேண்டிய நிலையில் பதினொரு இடங்களில் பாதைகள் வெட்டிவிடப்பட்டுள்ளன.

இதனால் வணிக நிலையங்களில் பாதுகாப்பு கேள்விக் குறியாக உள்ளது. கடந்த வாரம் மூன்று வணிக நிலையங்கள் உடைக்கப்பட்டுக் களவு நடத்துள்ளது.

அத்துடன் பொதுச் சந்தை வளாகம் இரவு வேளைகளில் கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது. இதனால் பல வர்த்தகர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதைவிட இங்கு சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், மாலையானதும் போதை தலைக்கேறிய மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகமாகக் காணப்படுவதாகவும் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

இதில் பிரதேச சபை நிர்வாகம் அதிக அக்கறை செலுத்தி சந்தையின் இந்தச் சீர்கேடுகளை நிவர்த்தி செய்து தருமாறு வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

### விபத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

டிப்பர்-மோட்டார் சைக்கிள் விபத்தில் முள்ளந்தண்டில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து இயக்கச்சியில் நேற்றுமுன்தினம் மு.ப. 9.30 மணிக்கு இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி நகரைச் சேர்ந்த யோ.புவிதரன் (வயது-23) படுகாயமடைந்தவர் இவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவராவார். (த-4)

# இந்தியாவிலிருந்து திரும்பியவர்களுக்கு இலங்கைக் குடியுரிமைப் பத்திரங்கள்

நெடுக்குளம்,ஏப்.4

இந்தியாவில் இருந்து வருகை தந்த 196 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டது. ஐ.நா.அபிவிருத்தி திட்ட அனுசரணையுடன் வவுனியா அரச அதிபர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் தலைமையில் வவுனியா செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் குடியுரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இவர்கள் 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் நிலைமைகள் காரணமாக, இந்தியாவுக்குச் சென்று நீண்டகாலமாக அங்கு அகதிகளாக வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குப் பிறந்த பலர் இந்தியாவில் பிறந்ததால் இந்திய பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வைத்திருந்தனர். போர் முடிவுற்ற பின்னர் இலங்கைக்குத் திரும்பிய இவர்களிடம், இலங்கையின் தேசிய அடையாள அட்டைகள் இருக்கவில்லை.

இலங்கை அரசின் காரியாலயங்களில் அரசு சார் உத்தியோகங்களில் இவர்கள் இணைவதற்குரிய வசதியை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

இந்த நிலையில் ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் இவர்களை இனம் கண்டு இதற்கான தனித்துவமான செயற்றிட்டங்களை முன்னெடுத்தது. (க-402)


# ஒன்றியக் கூட்டம்

வவுனியா அந்தணர் ஒன்றியக் கூட்டம் சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள் தலைமையில் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் முன்பாக இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் கருத்துரை வழங்குவார். இந்து கலாசார உத்தியோகத்தர் செல்வி இ.கலையமுதா சிறப்புரை ஆற்றுவார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வை பிரிட்டன் விரைவில் எதிர்பார்க்கிறது

## அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு




நேற்று யாழ்ப்பாணம் வந்த பிரிட்டன் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் லோட் நெசேபி யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

யாழ்ப்பாணம், ஏப்.4

இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று விரைவில் ஏற்படவேண்டும் என்பதையே பிரிட்டன் அரசு எதிர்பார்க்கிறது. இன்னமும் சிறுபான்மை இனத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

இவற்றுக்கான முதல் படியாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதுவே எமது விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

- இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வருகை தந்த பிரிட்டன்நாடாளுமன்ற குழுக்களின் தலைவர் லோட் நெசேபி தெரிவித்தார்.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையை அவரது இல்லத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியபோதே பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் தீர்வை அடைவதாயின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு உரியமுறையில் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதுவே எமது எதிர்பார்ப்பு.

அத்துடன், இலங்கை நிர்வாக மாவட்டங்களில் அரச கருமமொழிகள் அமுலாக்கம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதாக அரசும் அது சார்ந்த அமைச்சு அதிகாரிகளும் கூறிவருகின்றனர். ஆனால் இங்கு வந்து பார்த்தபோது அரச கரும மொழியாக்கம் நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. அதற்கான காரணத்தைக் கேட்டபோது ஆளணி வளம் இல்லை எனக் கூறப்படுகிறது - என்றார் அவர்.

இதேவேளை, வடக்கில் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கான வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும் என யாழ். ஆயர், நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தார்.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று யாழ். மாவட்ட அரச அதிபரையும் சந்தித்துப் பேசினார்.

"யாழ். மாவட்டம்தற்போது எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் இங்குள்ள மக்களின் தற்போதைய நடவடிக்கைகள், தேவைகள் தொடர்பிலும் பிரிட்டன் அரசுக்கு எடுத்துச் சொல்வோம். அத்துடன் இன்னும் இரண்டு வருடங்களில் யாழ். மாவட்டம் நல்ல நிலையை அடையும் என்று எதிர்பார்க்கிறோம் என்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது நெசேபி கூறினார்.

நேற்றுக் காலை யாழ். மாவட்ட செயலகத்துக்கு சென்ற அவர் அங்குள்ள சகல திணைக்களங்களுக்கும் நேரடியாகச் சென்று பணிகளைப் பார்வையிட்டார்.

யாழ். மாவட்டத்தின் மீள் குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பிலும், மக்களுக்கான உதவிகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்து கொண்டார். மேலும் வலி. வடக்கின் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் முடக்கப்பட்டுள்ள பகுதிகளை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வரை படத்தில் அவருக்குக் காட்டினார். அத்துடன் இந்தப் பகுதியினுள் இராணுவத் தலைமையகம் அமைந்துள்ளமையும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எடுத்துக்கூறப்பட்டது.

மக்கள் இன்னமும் மீளக் குடியமர்த்தப்படாமைக்கான காரணம் தொடர்பில் அரச அதிபரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்விஎழுப்பினார். அதற்கு அரச அதிபர், சில இடங்களில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் இன்னமும் முழுமை பெறவில்லை என்றார். அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தால் மாத்திரமே மக்களை மீளக் குடியமர்த்தலாம் எனவும் தெரிவித்தார்.

மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துக்குச் சென்ற லோட் நெசேபி மிதிவெடி அகற்றல் செயற்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் மிதிவெடி செயற்பாட்டலுவலகத்துக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் உதவியாளராகப் பணியாற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதியையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அவரிடம் யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய பிரச்சினையாக நீங்கள் எதனைக் கருதுகின்றீர்கள் என்று கேட்டார். அதற்கு "மிதிவெடி அகற்றப்படாமை தான் மிகப்பெரிய பிரச்சினையாகக் கருதுகின்றேன். இதனால் மீள்குடியமர்வு தாமதமடைகின்றது என்று அந்த வெளிநாட்டுப் பிரதிநிதி" பதிலளித்தார்.

இதன் பின்னர் யாழ். மாவட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக அரச அதிபரினால் எடுத்துக் கூறப்பட்டது. அப்போது "இராணுவத்தினர் யாழ். நகரில் வர்த்தக நிலையங்களை கைப்பற்றி வைத்துள்ளனரா? ஆளுநரின் அதிகாரங்கள் எப்படிப்பட்டவை? இராணுவத்தினருடனான தொடர்புகள் எப்படி?" என்றும் நெசேபி கேள்விகளை எழுப்பினார்.

இறுதியாக புள்ளிவிவரவியல் கிளைக்குச் சென்ற அவர் யாழ். மாவட்டத்தின் சனத்தொகை தற்பொழுது எவ்வளவு? என்று கேள்வியெழுப்பினார். அதற்கு தற்போது இறுதிக் கட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று பதிலளிக்கப்பட்டது. அண்ணளவாக எவ்வளவு சனத்தொகையை எதிர்பார்க்கின்றீர்கள் என்று அவர் மீண்டும் கேட்டார். அதற்கு அதனைத் தன்னால் வெளியிட முடியாதென்றும் கொழும்பிலுள்ள தலைமைப்பீடமே வெளியிட முடியும் என்றும் புள்ளி விவரத்திணைக்கள அதிகாரியினால் பதிலளிக்கப் பட்டது.

மேலும் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக மாதாந்த அறிக்கைகளை பிரிட்டன் தூதரகத்தின் ஊடாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டார். பிரிட்டன் தூதரகம் கேட்டால் மாத்திரமே வெளிவிவகார அமைச்சினூடாக அதனை அனுப்பி வைக்கலாம் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

(த-3-5)

# தனிப் பொலிஸ் நிலையம் காரைநகருக்கு அவசியம்

காரைநகர், ஏப்.4

காரைநகர் பிரதேசத்தில் தொடரும் திருட்டுக்களைத் தடுப்பதற்காக இரவு வேளைகளில் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் காரைநகருக்கு தனியான பொலிஸ் நிலையம் ஒன்றை விரைவில் அமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காரைநகர் கலாநிதி ஆதியாகராசா ம.ம. வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற காரைநகர் பிரதேசத்தின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராயும் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் க.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பொலிஸ், கடற்படை, இராணுவ அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பிரதேச சபை தலைவர் வே.ஆனைமுகன் மற்றும் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் காரைநகரில் தொடரும் திருட்டுக்களைத் தடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் காரைநகரில் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதாகவும் கடந்த சில நாள்களில் நான்கு ஆலயங்களில் இடம்பெற்ற திருட்டு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த-250)

## வரட்சி தணிந்தது

யாழ். நகரிலும் அதனை அண்டிய புற நகரப் பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் பெய்த மழையினால் கடந்த சில தினங்களாக நிலவிய வரட்சி சற்றுத் தணிந்தது.

சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக பெய்த மழையினால் தாழ்ந்த இடங்களில் வெள்ளம் தேங்கிக் காணப்பட்டது. கடும் வரட்சியினால் சிரமப்பட்ட கால்நடைகளுக்கும் இந்த மழை குளிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள தனியார் பஸ்தரிப்பு நிலைய வளாகத்திலும் வெள்ளம் தேங்கி நின்றது. (த-17)

# சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு ரூபா 10 மில்லியனில் கட்டடம்

வலி.வடக்கு ஏப்.4

சுன்னாகம் பஸ் நிலையத்தின் புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு அரசிடம் இருந்து 10 மில்லியன் ரூபாய் கிடைத்தள்ளதாக உடுவில் பிரதேச செயலர் திருமதி சுலோசனா மருகநேசன் தெரிவித்தார்.

சுன்னாகம் நகரப் பகுதியில் அமைந்துள்ள பஸ் நிலையம் கடந்த பல வருடங்களாகக் குறைபாடுகளின் மத்தியில் இயங்கி வருகின்றது. இந்த நிலையில் பஸ் நிலையத்தில் புதிய கட்டடம் அமைப்பதற்கு நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இந்நிதியின் மூலம் விரைவில் இந்தக் கட்டடப் பணிகள் முன்னெடுக்கப் படவுள்ளதாகவும் பிரதேச சபையின் செயலாளர் கூறினார். (த-86)

# தெற்குக்கான கடலுணவு ஏற்றுமதியில் வீழ்ச்சி

## மீன்களின் பெருக்கமும் வெகுவாகக் குறைவு

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ். மாவட்டத்தில் இருந்து தென்னிலங்கைக்கான கடலுணவு ஏற்றுமதி அண்மைக் காலமாகக்கடும் வீழ்ச்சி கண்டுள்ளதாக யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்னிலங்கைக்கான கடலுணவு ஏற்றுமதி மூலம் மீனவர்களுக்கும் கணிசமான இலாபம் கிடைத்து வந்தது ஆயினும் அந்த நிலைமை தற்போது இல்லை எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

குடாக் கடலில் மீன்களின் பெருக்கம் வெகுவாகக் குறைந்துள்ளமையே இதற்குப் பிரதான காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குடாக்கடலில் தொழில் செய்யும் மீனவர்களும் மீன்பாடு மிகவும் வீழ்ச்சி கண்டுள்ளதாகக் கூறுகின்றனர். தற்போது இங்கு பிடிக்கப்படும் மீன் யாழ். மக்களின் நுகர்வுத் தேவைக்கே போதாமல் உள்ளதாகவும் கடற்றொழில் திணைக்களம் கூறியது.

"முன்னர் மேலதிகமாகப் பிடிக்கப்பட்ட மீன் வாகனங்கள் மூலம் தென் பகுதிச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. அங்கு சந்தைகளில் நல்ல விலையும் கிடைத்தது. அதனால் மீனவர்களும் நன்மையடைந்தனர். ஆயினும் நிலைமை தற்போது அவ்வாறு இல்லை. பிடிக்கப்படும் மீன் இங்குள்ளவர்களுக்கே போதாமல் உள்ளது" என்று மீனவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

குடாக்கடலில் 'ட்றோலர்' மூலமான மீன்பிடியை அடுத்தே கடலில் மீனினங்களின் பெருக்கம் குறைந்து செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவகம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இருந்து முன்னர் யாழ்ப்பாணத்துக்குப் பெரும் தொகையில் கடலுணவுகள் வந்து சேர்ந்தன. இப்போது அவை வெகுவாகக் குறைந்துள்ளன. (த-17)

### யாழ். மீனவர்களுக்கான

# 2ஆம் கட்ட எரிபொருள் மானியம் அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ். குடாநாட்டு கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் இரண்டாம் கட்டத்துக்கு மானிய முத்திரைகள் எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

முதலாம் கட்டத்துக்கான மானிய முத்திரைகள் யாவும் இந்த வாரத்துக்குள் உரியவர்களுக்கு விநியோகித்து முடிக்கப்படும்.

இந்த மானிய முத்திரையை பெறாத மீனவர்கள் அவற்றை உடனடியாகப் பெற வேண்டும். தொடர்ந்து ஏப்ரல் மாதத்துக்கான முத்திரைகள் அடுத்த வாரம் முதல் உரியவர்களுக்கு விநியோகிக்கப் படும்.

இரண்டாம் கட்ட முத்திரைகளை மிகக் குறுகிய நாள்களுக்குள் விநியோகித்து முடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிப்பிலியில் 15 குடும்பங்கள் மின்சாரம் இன்றித் தவிப்பு

மானிப்பாய் மேற்கில் மயான வீதி அருகில் உள்ள டச்சு வீதியில் உள்ள 05 குடும்பங்களும், பிப்பிலி மயானத்துக்கு அருகில் உள்ள 10 குடும்பங்களுமாக மொத்தம் 15 குடும்பங்கள் மின்சாரம் இல்லாது இரவு வேளையில் தவிக்கின்றன.

யாழ்ப்பாணம்,ஏப்.4

மானிப்பாய் மேற்கு பிப்பிலி இந்து, கிறிஸ்தவ மயானத்துக்கு அருகில் உள்ள 15 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மக்கள் இதுவரை மின்சாரத்தை பெற முடியாத நிலையில் உள்ளனர் என்று மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.முதலியார் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் மேற்கில் மயான வீதி அருகில் உள்ள டச்சு வீதியில் உள்ள 05 குடும்பங்களும், பிப்பிலி மயானத்துக்கு அருகில் உள்ள 10 குடும்பங்களுமாக மொத்தம் 15 குடும்பங்களே மின்சாரம் இல்லாது இரவு வேளையில் தவிக்கின்றன.

இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதிப் பொது முகாமையாளருக்கும் கொக்குவிலில் உள்ள மின் அத்தியட்சகருக்கும் பல முறை இந்த விடயம் குறித்து அறிவித்தும் எந்த வித பயனும் இதுவரை ஏற்படவில்லை என அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே பிப்பிலி மயானம் அருகே அதாவது இடுகாடு-சுடுகாடு மத்தியில் வாழும் மக்களுக்கு மின்சாரத்தை பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என முதலியார் கேட்டுள்ளார்.

இதேவேளை வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சனும் இந்த மக்களின் மின்சார தேவை குறித்து வடக்கு பிரதிப் பொதுமுகாமையாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## விவரங்களைக் கோரி மீண்டும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன

அழிந்த உடைமைகளுக்கு விண்ணப்பித்த 'உ' பங்கீட்டு அட்டைக்காரர்களுக்கு கடிதங்கள் அனுப்பப் பட்டுள்ளன.

தென்மராட்சி,ஏப்.4

கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரால் அழிந்த உடைமைகளுக்கு விண்ணப்பித்த 'உ' பங்கீட்டு அட்டைகாரர்களுக்கு மேலும் பல விவரங்களைக் கோரி பத்து வருடங்களின் பின்னால் புனர்வாழ்வு அதிகார சபையால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நட்டஈடுகோரி விண்ணப்பித்தவரின் கணவன் அல்லது மனைவி நட்டஈட்டுக்கு விண்ணப்பிக்கவில்லை என்று திணைக்களத் தலைவரின் கடிதம், வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி, விண்ணப்பதாரரினால் விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவு இலக்கமும் வாக்காளர் பட்டியலில் உள்ள கிராம அலுவலர் பிரிவு இலக்கமும் வேறுபட்டுள்ளதால், அதனை நிவர்த்தி செய்து பிரிவுக் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்களையும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு தத்தமது இருப்பிடங்களில் மீளக் குடியமர்ந்த 'உ' பங்கீட்டு அட்டைக்காரர்கள் ஆயிரக் கணக்கான ரூபா செலவழித்து அனைத்துப் படிவங்களையும் பூர்த்தி செய்து சமாதான நீதிவான், கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடனும் திணைக்களத் தலைவரின் சிபார்சுடனும் புனர்வாழ்வு அதிகார சபைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சில விவரங்கள் அனுப்புமாறு கோருவது எந்த விதத்தில் நியாயம் என 'உ' பங்கீட்டு அட்டைக் காரர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (எ-207)

## வீதியைப் புனரமைப்பார்களா?

யாழ்ப்பாணம்,ஏப்.4

கோப்பாய் பலாணை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கும் தேசியக் கல்வியியற் கல்லூரிக்கும் இடைப்பட்ட வீதி வாகனம் செல்ல முடியாத அளவுக்குப் பெரும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் அந்த வீதியூடாகச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத இந்த வீதியில் மக்கள் பயணம் செய்வதைத் தவிர்த்து வருகின்றனர்.

மழைக் காலங்களில் நீர் நிரம்பி இந்த வீதியால் வெள்ளம் பாய்வதால் நடந்து செல்பவர்கள் கூட இந்த வீதியூடாக மேற்கொள்ளும் பயணத்தைத் தவிர்த்து வருகின்றனர்.

இந்த வீதியில் குடியிருக்கும் மக்கள் இந்த வீதியைச் சிரமத்தின் மத்தியில் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து வீதியைப் புனரமைத்துத் தருமாறு கேட்டுள்ளனர். (எ)



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட தையல் அழகியல் பொருள்களின் கண்காட்சி அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் இடம்பெற்றது. (250)

## இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டத்துக்கு உதவுக

யாழ். வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டம் அபிவிருத்தியின்றி அழிவடைந்து வருகின்றது என யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

100 வருடம் பழமை வாய்ந்த இந்த இடிகுண்டு நீர்த்தேக்கம் புனரமைப்பின்றி காணப்படுகின்றது.

மானிப்பாய் பிரதேச சபைக்கு மக்கள் சபை வந்தும் இந்த இடிகுண்டு அபிவிருத்தி இன்றி அழிவடைந்து வருகின்ற ஆபத்தான இடமாக மாறிவிட்டது.

கடந்த 10 வருடங்களாக அதாவது முன்னாள் அரச அதிபர்களான செ.பத்மநாதன், க.கணேஷ் போன்றவர்களிடமும் தற்போதைய அரச அதிபருடனும் இது தொடர்பாக தொடர்பு கொண்டும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. மானிப்பாய் பிரதேச சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் என்பன இத்திட்டத்தை முன்னிறுத்த வலியுறுத்த வேண்டும்.

ஆனால் அவர்களும் இத்திட்டத்துக்கு வலுச்சேர்க்கவில்லை. எனவே இவ்விடயம் தொடர்பாக சம்மந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து இடிகுண்டு அபிவிருத்திக்கு உதவவேண்டும் என முதலியார் கேட்டுள்ளார். (எ)

## காசநோய் இல்லாச் சமூகம் உருவாக்கச் செயற்றிட்டம் தயார்

யாழ்ப்பாணம்,ஏப்.4

2018 இல் தீவகத்தில் காசநோய் இல்லாத சமூகத்தை உருவாக்கும் செயற்றிட்டம் இன்று வேலணைப் பிரதேச சபையின் உப அலுவலக நூலகக் கட்டடத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது என வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் வேலணை சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ப.பரமேஸ்வரன் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கருத்துரையாற்றவுள்ளனர்.

எனவே வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சபை உறுப்பினர்கள், சமுர்த்தி பயனாளிகள், சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள், மக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு சிவராசா கேட்டுள்ளார். (ஏ)

## மின்சாரம் வழங்கும் பணி ஆரம்பம்

கொழும்புத்துறை,ஏப்.4

மணியந்தோட்டம் சந்தியில் இருந்து நாவாந்துறை வரைக்குமான பகுதிக்கு மின்சார விநியோகம் வழங்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

மின்சார சபையின் ஏற்பாட்டில் இந்த மின்விநியோகப் பணிகள் இடம்பெற்று வருவதோடு பிரதான வீதிகளுக்கும் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் ஏற்கனவே மின்சாரத்துக்கு விண்ணப்பித்த மக்களுக்கு இந்த மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது 11 ஆம், 12 ஆம், 13 ஆம் இலக்க குறுக்கு வீதிப் பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. (எ-17)

## உடுபுடைவையின் விலை அதிகரிப்பால் சோபை இழந்த மக்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.4

உடுபுடைவைகளின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு புதிதாக உடுபுடைவைகளைக் கொள்வனவு செய்வதில் மக்கள் பின்னடிக்கின்றனர்.

குடாநாட்டில்சகலபொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது. குறிப்பாக உடுபுடைவைகளின் விலை அதிகரித்துள்ளன.

பொருள்களின்விலைஅதிகரித்ததால் மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது.

சித்திரைப் புத்தாண்டுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களே பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

உடுபுடைவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் எகிறிச் செல்கின்றன.

சாதாரணமாக ஒரு புதிய உடுபுடைவை ஒன்று ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது.

அதனைவிட தென்பகுதியில் இருந்து வருகை தரும் நடைபாதை வியாபாரிகளும் தாம் எடுத்து வந்த உடு புடைவைகளையும் அதிகரித்த விலையிலேயே விற்பனை செய்கின்றனர்.

இவ்வாறு உடுபுடைவையின் விலைகளும் சடுதியாக அதிகரித்திருப்பதால் சித்திரைப் புத்தாண்டுக்கான வியாபார நடவடிக்கைகள் விறுவிறுப்படைந்து களை கட்டவில்லை என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (எ-17)

## இலங்கை வங்கியின் புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளையின் புதிய கட்டடத் திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

இந்தத் திறப்பு விழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

ஊர்காவற்றுறை வங்கி முகாமையாளர் கே.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்தக் கட்டடத் திறப்பு விழாவில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.சி.டி. சுமண சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (எ)

## வினாத்தாள் திருத்திய ஆசிரியர்களின் கொடுப்பனவில் தாமதம்

பரீட்சைத் திணைக்களத்தினரால் திறைசேரியிடம் 30 கோடி ரூபா கோரப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகையை வழங்குவதை திறைசேரி தாமதப்படுத்தி வருவதே இதற்குக் காரணம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

கடந்த 2011 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பத்திர பரீட்சை வினாத்தாள்கள் திருத்திய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் எற்படுவதாகப் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பரீட்சைத் திணைக்களத்தினரால் திறைசேரியிடம் 30 கோடி ரூபா கோரப்பட்டிருந்தபோதிலும் அந்தத் தொகையை வழங்குவதை திறைசேரி தாமதப்படுத்தி வருவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக பரீட்சை நிலையங்களில் கடமையாற்றிய மற்றும் பரீட்சை வினாத்தாள்களைத் திருத்திய 12 ஆயிரம் பேர் வரையிலான ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவது காலவரையறையின்றி பின் தள்ளிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

தமது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ள இவர்களுக்குக் கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான ஆவணங்கள், தயார் நிலையில் உள்ள போதிலும் திறைசேரி பணத் தொகையை வழங்காதிருப்பதால் பரீட்சைகள் திணைக்களமும் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்த ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழமையாக பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாவதற்கு முன்ன் வழங்கப்பட்டு வருவ தாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது. (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றம் இரண்டு மாதத்தில் முடிவுறும் பணிகள் இன்றிலிருந்து முடுக்கிவிடப்படுகின்றன

## வவுனியாவில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, ஏப்.4

நலன்புரி நிலையங்களில் எஞ்சியுள்ள மக்களை மீள்குடியேற்றம் செய்யும் பணிகள் இரண்டு மாதங்களில் பூர்த்தி செய்யப்படும் வகையில் முதற்கட்டமாக இன்று தொடக்கம் கண்ணி வெடி அகற்றும் பணிகள் விரைவுபடுத்தப்படுவதுடன் ஏனைய பணிகளும் முடுக்கி விடப்படுகின்றன என்று தெரிவித்தார் வவுனியா அரச அதிபர் பி.எஸ்.எம். சாள்ஸ்.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பாக நேற்று வவுனியா அரச செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்றைய தினம் (நேற்று) முல்லைத்தீவு அரச அதிபர், முல்லைத்தீவு மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி, வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி உட்பட மீள்குடியேற்ற செயற்பாடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகளுடனான விசேட சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றப்படாத பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ஏற்கனவே ஈடுபட்டுள்ள நிறுவனங்களுடன் மேலதிகமாக 300 இராணுவத்தினர் 4 மிதி வெடி அகற்றும் இயந்திரங்கள் என்பவற்றை இணைத்து அந்த நடவடிக்கையை துரித்தப் படுத்துவது என்றும் இதன் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை 2 மாதங்களுக்குள் மீள்குடியேற்றி அந்தப் பணிகளை முடிவுறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பணிகள் யாவும் இன்று தொடக்கம் நடைமுறைப்படுத்துப்படுகின்றது - என்றார்.

வவுனியா நலன்புரி நிலையத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அனர்த்தம் மற்றும் பேரிடர் காரணமாக பல்வேறு சிரமங்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.இந்த நிலையில் அவர்களை சொந்த இடத்தில் மீள்குடியேற்றுவது என்ற நிலைப்பாட்டில் இந்த அவசர கலந்துரையால் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் உப அதிபராக நீண்டகாலமாக சேவையாற்றிய வித்தியா லய பழைய மாணவர் சங்க உறுப்பினர்

**கந்தையா தேவநேசன்**

யா/கோகிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத் தில் கடமை நிறைவேற்று அதிபராக 04.04.2012 இல் கடமையேற்பதை மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம். பழைய மாணவர் சங்கம்.


## உடுவில் மகளிர் கல்லூரி
## A/L - 2014 பாடத்தெரிவு

நாளை (05.04.2012) காலை 9 மணிக்கு A/L - 2014 பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடத் தெரிவு தொடர்பான அறிவூட்டல் கருத்தரங்கு பேராசிரியர் சிவநாதன் (பொருளியற் துறை யாழ். பல்கலைக்கழகம்) அவர்களால் நடத்தப்பட விருப்பதால் உடுவில் மகளிர் கல்லூரி A/L - 2014 மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு கேட்கப் படுகின்றீர்.

- அதிபர்.

# சிறுமி மீது வன்புணர்வு இணுவில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஏப் 04

பதின்ம வயதுச் சிறுமி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க யாழ். நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இணுவிலைச் சேர்ந்த சந்தேகநபரான 24 வயதுடைய இளைஞனைக் கோப்பாய் பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜாவிடம் முன்னிலைப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உரும்பிராயைச் சேர்ந்த பதின்மவயதுடைய சிறுமி சுமார் 10 நாள்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டார். கோப்பாய் பொலிஸில் சிறுமி காணாமற்போன சம்பவம் தொடர்பாகப் பெற்றோர் முறைப்பாடு செய்திருந்தனர்.

சிறுமி ஐந்து நாள்களுக்கு முன்னர் அநாதரவாக விடப்பட்ட நிலையில் வீடு போய்ச் சேர்ந்தார்.

பெற்றோருக்கு தனக்கு நேர்ந்த கதி பற்றித் தெரியப்படுத்தியதை அடுத்து சிறுமிக்கு என்ன நடந்தது என்ன நடந்தது என்பது தெரிய வந்தது.

இணுவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சிறுமியை அவரது வீட்டிலிருந்து 10 நாள்களுக்கு முன்னர் அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய பின்னர் அவரைக் கைவிட்டுள்ளார். இளைஞரால் கைவிடப்பட்ட நிலையில் சிறுமி தனது வீடு திரும்பியுள்ளார். பெற்றோருக்கு நடந்த சம்பவத்தைத் தெரிவித்ததையடுத்து சிறுமி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிறுமி வழங்கிய வாக்குமூலத்தை அடுத்து இணுவிலைச் சேர்ந்த சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். சந்தேகநபர் கூலி வேலை செய்பவர் என்றும் சிறுமியின் உறவினரல்லாத ஒருவர் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (த-4)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி இராமலிங்கம்

புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரம், காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், லீலா ஸ்டோர்ஸ், மூளாய் றோட், வட்டுக்கோட்டையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி இராமலிங்கம் நேற்று (03.04.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், சேதுலிங்கம் (கனடா), காலஞ்சென்ற யோகலிங்கம் மற்றும் லிங்கேஸ்வரி (லண்டன்), லிங்கநாயகி (சுவிஸ்), பஞ்சலிங்கம், காலஞ்சென்ற தியாகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும், பத்மலோஜினி (கனடா), கோவிந்தராஜன் (லண்டன்), இராஜசேகரம் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான கேதீஸ்வரி, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லீலா ஸ்டோர்ஸ்,
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

தகவல்:
இ.பஞ்சலிங்கம்
(மகன்)



### வரதராஜா மாலினி

காரைநகர், மாப்பானலூரியைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வரதராஜா மாலினி நேற்று (03.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதன் (A.F.C.) - திலகலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், வரதராஜாவின் அன்பு மனைவியும், ஜெகதாம்பிகை, ஜெகதீஸ்வரன், குஞ்சிதபாதன், விக்கி னேஸ்வரன், சிவகுமாரன், குருபரன் ஆகியோரின் சகோதரியும் மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி, தனபாலன், வித்தியலெட்சுமி, வாமதேவன், செல்வலெட்சுமி, கருணாகரன், Dr.K.கிருஸ்ணானந்தசிவம், சுபத்திரா, யாசோதா, கௌரீஸ்வரி, பவானி, சாந்தமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2012) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கிழக்கு, ஆலடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத வீதி,
கோண்டாவில்

தகவல்:
த. வரதராஜா
(கணவர்).

## மரண அறிவித்தல்கள்

### செல்வி இன்பமலர் கணபதிப்பிள்ளை

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இன்பமலர் கணபதிப்பிள்ளை (31.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் மகளும், செவ்வந்திராசா (இ.போ.ச. கோண்டாவில்), செவ்வந்திமலர் (லண்டன்), சுகுமார் (சிவ சக்தி மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்), பானுமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராதேவி, ரவீந்திரா (லண்டன்), கமலராணி, அன்ரன் தேவராஜா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் சுஜித்தா, சிவோதயன், மகி ழன், குணாளன், அங்கஜன் ஆகியோரின் அன்பு மாமியும், வைஷ்ணவி, யாழினி, தாரகா ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2012) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
த. செவ்வந்திராசா
(சகோதரன்).

### நாகன் கந்தையா

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் கந்தையா நேற்று (03.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகன் - நாகம்மா தம்பதியரின் அன்பு மக னும், தம்பையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மரு மகனும், தங்கரெத்தினத்தின் பாசமிகு கணவரும், ரதிகலா, ரதீசன் (ஜேர்மனி), ரோகினி, டயானா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகுமார், சுதாமதி, மோகனதாஸ், நேசநாயகம் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2012) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகலிங்கம் மாசிலாமணி
(மண்டைதீவு - 06)

மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 55ஏ, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் மாசிலாமணி (ஓய்வுபெற்ற இலிகிதர், மண்டைதீவு கிராமசபை) நேற்று (03.04.2012) செவ்வாக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - மாணிக்கம் தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தில்லம்மாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஜோக லிங்கம், சோமசுந்தரம், பராசக்தி, தனலச்சுமி மற்றும் குணரத்தினம் இரத்தினபூபதி, யோகலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கருணாகரன், கிருபாகரன் (இந்தியா), பிரபாகரன் (விரிவுரையாளர், யாழ். கல்வியியற் கல்லூரி), இராயேஸ்வரி (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஸ்ணவேனி (ஆசிரியை, வவுனியா), ஜெகதீஸ்வரி, சுதானந்தராஜா (ஆசிரயர், இணுவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், வருணன், கிந்துஜா, ஹாரணி, கபிலேஸ், பவதாரணி, கனிமொழி, சங்கவி, அபிராம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2012) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 4 மணியளவில் கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

55ஏ, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிரபாகரன் (மகன்),
திருமதி சுதானந்தராஜா (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 03 ★ 01 ★ 1967

மறைவு 17 ★ 03 ★ 2011

அமரர் செல்வன் சிற்றம்பலம் வசந்தகுமார் (வசந்தன்)

திதி: திரயோதசி

04.04.2012 (புதன்கிழமை)

**கதறினோம் பதறினோம் உதறிச் சென்றாய் - எம்மை**
**ஓயாது ஓயாது என்றும் - உன்**
**ஓங்காரமாய் ஒலித்திட்ட ஓசையே!**

பெரிய தம்பிரான் கோவிலடி,
மணப்பாதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.0776071095.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



திருமதி
**பஞ்சலக்ஷ்மி கிருஷ்ணன்**
**(இளைப்பாறிய பிரதி அதிபர், யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்)**

அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வட்டு தென் மேற்கில் வசித்தவரும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சலக்ஷ்மி கிருஷ்ணன் (இளைப்பாறிய பிரதி அதிபர்) அவர்கள் 02.04.2012 அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையா தம்பதியரின் ஏகபுதல்வியும் துரைப்பிள்ளை கிருஷ்ணன் அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்ற ராகவன் ராதாகிருஸ்ணன் மற்றும் கிருஸ்ணவேணி, கிருஸ்ணஜயந்தி, கிருஷ்ணவல்லி, செந்தூரன், யாதவகிருஷ்ணன்,கிருஷ்ண ஜோதி ஆகியோரின் அன்புத் தாயும் சிவசங்கர், ஜெயராஜசிங்கம், சிவகுமார் ஆகி யோரின் அன்புமாமியும். ஆரூரன், ஆதவன், மயூரி, இந்து, யதுகுலன், கோகுலன் ஆகியோரின் அன்புப் பாட்டியு மாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 02.04.2012 மாலை 5 மணியளவில் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
12 2/2, Harmers Avenue, Colombo - 06

(C/522)(6-7-8)



திருமதி **கோபாலப்பிள்ளை பாக்கியலட்சுமி**
*(நயினாதீவு)*

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலப்பிள்ளை பாக்கியலட்சுமி (03.04.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிவசம்பு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும், வாமதாசன், வல்லிபுரம், உருத்திராம்பான், அம்பிகை பாலன், சிவகடாட்சம், திரிபுராம்பாள், ஜெகதாம்பாள், ஆகியோரன் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின் னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ. வாமதாசன்
(மகன்)

7ஆம் வட்டாரம், நயினாதீவு.

## தனியார் மருந்தகத்தில் அரச மருந்து வகைகள்

யாழ்ப்பாணம், ஏப் 04

தனியார் மருந்தகம் ஒன்றில் அரச இலச்சினை பொறிக்கப்பட்ட அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் மருந்துகள் இருந்தமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

யாழ். ஆரியகுளம் பகுதியை அண்மித்துள்ள தனியார் மருந்தகத்திலேயே இவ்வாறு அரச மருந்துகள் இருந்தமை கண்டறியப் பட்டதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப் பட்ட பரிசோதனையின் போது யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனையின் திடீர் குழுவினரால் இவை கண்டறியப்பட்டது.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் அந்த மருந்தக உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அரச வைத்தியசாலைகளில் மருந்துக்கான தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவித்து தனியார் மருந்தகங்களில் கொள்வனவு செய்வதற்காகச் சிட்டை எழுதிக்கொடுக்கும் நிலையில் அரச இலச்சினை பொறிக்கப் பட்ட மருந்துகள் தனியார் மருந்தகத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றமை குறிப் பிடத்தக்கது.

(த-4)

## சமுர்த்தி பயனாளிகளின் புத்தாண்டுச் சந்தை

தென்மராட்சி, ஏப். 4

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட உற்பத்திப் பொருள்களினால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் புத்தாண்டுச் சந்தை எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தியாளர்களின் 'திவிநெகும' விற்பனைச் சந்தை நடத்தப்படவுள்ளது.

இந்தச் சந்தையில் விவசாயத் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம் ஆகியவற்றின் பொருள்களும் விற்பனை செய்யப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு நாள்களிலும் பிரதேச சமுர்த்தி சமூக மன்றங்களின் சிறுவர் பிரிவுகளினால் கலை நிகழ்வுகளும் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி அதிகார அமைப்பின் அனுசரணையுடன் பிரதேச சமுர்த்தி வங்கிகள் ஊடாக சமுர்த்தியாளர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் பல்வேறு உதவிப் பொருள்கள் மானிய அடிப்படையில் கடனாக வழங்கப்பட்டன. இந்த உதவிப் பொருள்கள் மூலம் உற்பத்தி செய்யப் பட்ட பொருள்களே 'திவிநெகும' விற்பனைச் சந்தையில் விற்பனை செய்யப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)


**கணினி திருத்தம் (Computer**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரியமுறையில் திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள் 0779086737 GUNAA BEST PC

**தேவை**

வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு
35-50 வயதுக்குட்பட்ட பெண் தேவை
தொடர்பு: 0722 058760

**காணி விற்பனைக்கு**

மீசாலை புத்தூர் சந்தியில்
(சியாமளா மில் முன்பாக) ஏ- 9
வீதியில், நன்னீர்க் கிணற்றுடன்
கூடிய 4 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
குமரன் சில்க், சாவகச்சேரி.
தொ.பே. 021 720 1115

**காணி விற்பனைக்கு**

அல்லைப்பிட்டியில் 12 பரப்பு
தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: [illegible]


## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிவது 70/14 ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி கிறிஸ்தோத்திரம் எல்சி கிப்பொலிற்றா என்பவர் 1986.08.01இல் பிரசித்த நொத்தாரிஸ் எஸ்.எஸ். பிரான்சிஸ் முகதாவில் நிறைவேறிய 323ஆம் இலக்க நன்கொடை உறுதியால் சண்டுக்குளிஇறை "விளான்குளம்வயல்" என்றநாமமுடைய 70/14 ஈச்சமோட்டை வீதியிலுள்ள நிலப்பரப்பு 2 இற்கு சொந்தக்காரரும் ஆட்சியாளருமானவர் என அறியவருகிறது.

மேற்படி செல்வி. கிறிஸ்தோத்திரம் எல்சி கிப்பொலிற்றா குறித்த ஆதனத்தின் சோலைவரிப் பெயரை தமது பெயருக்கு மாற்ற விண்ணபித்துள்ளார். எனவே, சோலைவரிப் பெயர் மாற்றம் தொடர்பாக எவருக்காவது ஆட்சேபம் இருப்பின் இவ் அறிவித்தல் வெளிவந்த நாளிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் ஆட்சேபனையை யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு தெரிவிக்கும்படி வேண்டுவதுடன், குறித்த காலப்பகுதிக்குள் சோலைவரிப் பெயர் மாற்றம் சம்பந்தமாக எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காவிட்டால், அதன் பின் சோலைவரிப் பெயரை அவர்களது பெயருக்கு மாற்றுவதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ். மாநகர சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்,
02.04.2012

திருமதி. யோ. பற்குணராசா
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

**IRCON INTERNATIONAL LIMITED**

(இந்திய அரசாங்கத்தின ஒப்பந்தத்தில் கீழ்)
56A, Station Road, Vairavapuliyankulam, Vavuniya.
Telephone No. 024-2226784, FAX No. 024-2226533

அறிவித்தல் 01/2012

**நேர்முகப் பரீட்சை**

IRCON International Limited (இந்திய அரசாங்கத்தின ஒப்பந்தத்தின் கீழ்) இலங்கைக்குத் தேவையான புகையிரதத் திட்டத்தை நிறைவேற்றுகின்றது.

### கணரக சாரதிகள் (20 வெற்றிடங்கள்)

(மதவாச்சி - தலைமன்னார், ஓமந்தை, பலாலி மற்றும் காங்கேசந்துறை) புகையிரத தண்டவாள திட்டத்துக்காக வெளியாட்களை சேர்த்துக் கொள்வதற்காக, இதில் ஆர்வமுள்ளவர்கள், நேர்முகப் பரீட்சைக்கும் பயிற்சிப் பரிசோதனைக்கும் தமது சான்றிதழ்கள், சாரதி அனுமதிப்பத்திரம், அனுபவ சான்றிதழ்கள் மற்றும் ஏனைய தகவல்கள் விளக்கங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் IRCON International Limited ன் கீழ்வரும் இடங்களுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. மேலும் Mr. Brian Christy (Mobile No. 0771063522) / Mr. Raja Rajarathnam (Mobile No. 0771063503) ஆகிய கையடக்கத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 06.04.2012 | பிரிவு அலுவலகம், ஓமந்தை. | மு. ப. 10.00 முதல் பி. ப. 5.00 வரை |
| 08.04.2012 | மதுரா ரெஸ்ட் INN, கந்தர்மடம் சந்தி, அரசடி வீதி யாழ்ப்பாணம். | |
| 09.04.2012 | 22, தாழ்வுபாடு வீதி, மன்னார். | |

மேலதிகப் பொதுமுகாமையாளர்/வடக்கு
IRCON International Limited
நிறுவனத்துக்கும்/நிறுவனத்துக்காகவும

Imagination

## மரண அறிவித்தல்



*சந்திரசேகரம்*
*இராமச்சந்திரன் (துரை)*

புலோலியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் இராமச்சந் திரன் (27.03.2012) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் - தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நவசிவாயம் - இராசரத்தினம் தம்பதியரின் மருமகனும், இராதாலஸ்சுமியின் அன்புக் கணவ்ரும், சுதர்சன், சகானா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேந்திரம் , இராஜேஸ்வரி, இராசரத்தினம், காலஞ்சென்ற விக்னேஸ்வரமூர்த்தி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2012) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சூரியப் பிரகாசம்
(மைத்துனர்).

சாரையடி, புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப ஜனாதிபதியை ஒப்படைக்க கட்டாரிடம் ஈராக் வலியுறுத்து

கட்டாருக்குத் தப்பிச் சென்றுள்ளார் எனக் கூறப்படும் உப ஜனாதிபதி தாரிக் அல் ஹஷிமியை ஒப்படைக்குமாறு கட்டார் அரசிடம் ஈராக் அரசு வலியுறுத்தியுள்ளது.

ஈராக் அரசியல் தலைவர்களைக் கொலை செய்வதற்கு கொலைக் குழுக்களுக்கு நிதியளித்தார் என்று ஈராக் ஜனாதிபதி தாரிக் அல் ஹஷிமி மீது குற்றம் சுமத்தப்பட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பின் அவர் சுயாட்சி உரிமை கொண்ட ஈராக்கிய பிராந்தியமான குர்திஸ்தானில் தங்கியிருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் கட்டாருக்குப் பயணம் மேற்கொண்டு அந்த நாட்டு மன்னர் ஷேக் ஹமட் பின் கலீபா அல்தானி மற்றும் பிரதமர் ஷேக் ஹமட் பின் ஜாசெம் பின் ஜப்ர் அல்தானி ஆகியோரையும் சந்தித்தார். இதை உத்தியோகபூர்வ பயணம் என்று ஹிஷிமி கூறினார்.

நட்பு நாடுகளுக்கிடையிலான நிலவரங்கள் மற்றும் பிராந்திய நிலவரங்கள் குறித்து ஹஷிமியும் கட்டார் மன்னரும் கலந்து ரையாடினர் என்று கட்டார் அரச செய்திக்ள் தெரிவித் தன.

இந்தநிலையில் "தேடப்படும் நபர் ஒருவரை கட்டார் உபசரிப்பது ஏற்கொள்ளப்பட முடியாத நடவடிக்கை. அவரை ஈராக்கிடம் கட்டார் ஒப்படைக்க வேண்டும். அவரை ஈராக்கிலிருந்த வெளியேற அனுமதித்ததன் மூலம் குர்திஷ் பிராந்திய அரசு சட்டத்துக்கும் நீதிக்கும் தெளிவான சவாலொன்றை ஏற்படுத்தியுள்ளது" என்று ஈராக் பிரதிப் பிரதமர் ஹுஸைன் அல் ஷாஹ்ற ரிஸ்தானி கூறியுள்ளார்.



எனினும் தனக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலிருந்தும் தீர்ப்பு எதுவும் இல்லை என்றும் ஈராக் அரசின் கோரிக்கை அரசியலமைப்பின் 93 ஆவது ஷரத்துக்கு முரணானது என்றும் அரசியலமைப்பில் தனக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் உப ஜனாதிபதி தாரிக் அல் ஹஷிமி கூறியுள்ளார்.

## ஓசாமாவின் மனைவியருக்கு 45 நாள்கள் சிறைத் தண்டனை

### பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தரவு

இஸ்லாமாபாத்,ஏப்.4

ஒசாமா பின்லேடனின் 3 மனைவிகள் மற்றும் 2 சகோதரிகளுக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் 45 நாள்கள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் மறைந்திருந்த அல்குவைதா த்லைவர் பின்லேடன் அமெரிக்க படையால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதையடுத்து, அவருடன் தங்கியிருந்து மனைவியர் உட்பட உறவினர்களை பொலிஸார் கைது செய்தனர்.

சட்ட விரோதமாகக் குடியேறியதற்காக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அதன் போது சட்ட விரோதமாகப் பாகிஸ்தா னுக்குள் குடியேறித் தங்கி யதற்காக ஒசாமாவின் 3 மனைவியர் மற்றும் 2 சகோதரிகளுக்கு தலா ரூ.10,000 அபராதத்துடன் 45 நாள்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும் சிறைக் காலம் முடிந்தவுடன் சொந்த நாடுகளுக்கு அவர்களை அனுப்பவும் நீதிமன்றம் உத்தர விட்டது.

அபராதத்தை செலுத்தி விட்டதால் தண்டனை முடிந்ததும் அவர்கள். திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தகவல்கள் திருடி ஆய்வு கட்டுரை எழுதியவரின் பட்டம் பறிபோனது

### ஹங்கேரி ஜனாதிபதியான அவர் பதவி துறந்தார்

புதாபெஸ்ட்,ஏப்.4

அடுத்தவரின் கருத்துக்களை திருடி, ஆய்வு கட்டுரை எழுதிய ஹங்கேரி ஜனாதிபதியின் டாக்டர் பட்டத்தை பல்கலைக்கழகம் ரத்து செய்தது. இதனால் ஏற்பட்ட அவமரியாதையால் ஹங்கேரி ஜனாதிபதி நேற்று முன்தினம் ராஜினாமா செய்தார்.



ஹங்கேரி நாட்டின் ஜனாதிபதியாக இருந்த பால் ஷுமிட், சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் நீண்ட நாள் உறுப்பினரும், முன்னாள் ஒலிம்பிக் சம்பியனுமாவார். விளையாட்டுத் துறையில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதினார். அதற்காக புதா பெஸ்ட் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது.

அவரது கட்டுரையில் காணப்பட்ட கருத்துகள், தகவல்கள் வேறொரு கட்டுரையாளரிடம் இருந்து பெறப்பட்டன என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து பல்கலைக்கழகம் நடத்திய விசாரணையில் அது உண்மை என்று தெரிந்ததும் பால் ஷுமிட் பெற்ற டாக்டர் பட்டத்தை பல்கலைக் கழகம் ரத்து செய்தது.

இதையடுத்து, அதிபர் பதவியில் இருந்து ஷுமிட் ராஜினாமா செய்யக் கோரிக்கைகள் எழுந்தன. ஆனால், தனது படைப்புக்கும், அதிபர் பதவிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதால், ராஜினாமா செய்ய முடியாது என்று அவர் மறுத்து வந்தார்.

எதிர்ப்பு அதிகரிக்கவே நேற்று முன்தினம் திடீரென ஷுமிட் பதவி விலகினார். பதவி விலகல் தொடர்பாக அவர், "ஹங்கேரி அரசமைப்பு சட்டத்தின்கீழ் நாட்டின் ஒற் றுமையை அதிபர் உறு திப்படுத்த வேண்டியது அவசியம். ஆனால், கருத்து வேறுபாடுகளுக்கு நானே காரணமாகி விட்டேன். எனவே பதவி விலகுவதே சிறந்தது என்று முடிவு செய்தேன்"- என்றார்.

## பட்டினிப் போராட்டம் நடத்திய பலஸ்தீன பெண் கைதி விடுவிப்பு

ஜெருசலேம்,ஏப்.4

இஸ்ரேல் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பலஸ்தீன பெண் தான் கைது செய்யப்பட்டதற்கு எதிராக 44 நாள்கள் மேற்கொண்ட பட்டினிப் போராட்டத்தைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டு ஹாஸாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தீவிரவாதச் செயலில் ஈடுபட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த பெப்ரவரி 16 ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஷலபி பெகன் என்ற பெண்ணையே இஸ்ரேல் நிர்வாகம் விடுவித்தது. அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படவில்லை. அதை எதிர்த்து அவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

தொடர்ந்து 33 நாள்கள் உணவின்றி இருந்ததால் அவர் கடந்த மார்ச் 19 ஆம் திகதி மருத்து வமனையில் சேர்க்கப்பட்டார். பெகன் 14 கிலோ கிராம் எடை குறைந்ததோடு அவரது உடல் நிலையும் மோசமடைந்தது.


இதனைத் தொடர்ந்து பலஸ்தீன நிர்வாகத்துடனான ஒப்பந்தத்தின் மூலம் மேற்படி பெண்ணை விடுவிக்க இஸ்ரேல் அரசு இணங்கியது. இந்நிலையில் அவர் கடந்த மார்ச் 29 ஆம் திகதி தனது போராட்டத்தைக் கைவிட்டார்.

இதன்படி ஹாஸாவுக்கு அனுப்பப்பட்டுள்ள ஷலபி பெகன் மேற்குக் கரைக்குச் செல்ல இஸ்ரேல் இராணுவம் மூன்று ஆண்டு தடை விதித்துள்ளது. பெகனின் குடும்பத்தினர் மேற்குக் கரையில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலின் சர்ச்சைக்குரிய சட்டத்தின்படி சந்தேக நபர் ஒருவரை இஸ்ரேல் இராணுவத்தினால் குற்றச்சாட்டு எதுவும் பதிவு செய்யாமல் 6 மாதம் வரை தடுத்து வைக்க முடியும்.

இவ்வாறு குற்றச்சாட்டுகள் எதுவும் பதிவு செய்யப்படாமல் இஸ் ரேல் சிறைகளில் 300 க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் உள்ளனர்.

## பூமிக்கு அருகில் விண்கல்



150 அடி அகலம் கொண்ட விண் கல் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பூமிக்கு நெருக்கமாகச் சென்றுள்ளது.

பஸ் ஒன்றின் அளவு கொண்ட இந்த விண் கல்லை கடந்த இரு வாரங்களுக்கு முன்னரே வானியலாளர் கண்டனர்.

இந்த விண்கல் பூமியில் இருந்து 143,000 மைல் தூரத்தில் கடந்து சென்றதாக வானியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விண்கல் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் டைனோசர் இனத்தை அளித்த அளவு தாக்கம் செலுத்தக்கூடியதல்ல. ஆனால் அது பூமியைத் தாக்கும் பட்சத்தில் அணு குண்டு ஒன்று வெடிக்கும் அளவு பாதிக்கக் கூடியது என நம்பப்படுகிறது.

இந்த விண்கல் கடந்த ஞாயிற் றுக்கிழமை பூமியைக் கடந்து சென்றுள்ளது.

இந்த விண்கல்லை மார்ச் மாதம் 13 ஆம் திகதியே வானியலாளர்கள் கண்டனர்.

ஹாவாயிலுள்ள தொலைநோக்கி மூலமே இந்த விண்கல் அவதானிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் உலகப் போரில் பயன்பட்ட ஏவுகணை மீட்பு

இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட ஏவுகணை ஒன்று ஹார்விச் துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை பிரிட்டனைத் தாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கடி நீளமுள்ள இந்த ஏவுகணையின் தலைப் பகுதி மற்றும் இரண்டாயிரம் தொன் எடையுள்ள வெடி பொருள்களை காணவில்லை. இதனால் ஆபத்து எதுவுமில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

றோயல்நேவியின் படைப் பிரிவினர் கடந்த புதன் கிழமை பெலிக்ஸ்டவ் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஏவுகணை ஒன்று புதைந்திருப்பதைக் கண்டனர். ஆராய்ந்து பார்த்த போது அதில் வெடிபொருள் இல்லாததைக் கண்டறிந்த னர்.

இந்த ஏவுகணையை ஜேர்மன் படைகள் பிரிட்டனைத் தாக்குவதற்குப் பயன்படுத்தின.

கடந்த 1944 ஆம் ஆண்டில் பிரிட்டனில் லண்டன் மாநகர் மீதும், பெல்ஜியத்தில் ஆண்ட்வெர்ப் மாநகரின் மீதும் இந்த ஏவுகணைகள் அதிகமாக வீசப்பட்டன.

மணிக்கு 3500 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் இந்த ஏவுகணை நான்கு நொடிகளில் ஏவப்பட்ட இலக்கை அடைந்து விடும். இதன் மூலம் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

## கொலம்பியாவில் கைதிகள் விடுதலை

கொலம்பியாவில் 10 ஆண்டுகளுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருந்த பணயக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொலம்பிய பொலிஸாரும் , படையினருமே இவ்வாறு பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

கொலம்பியாவின் இடதுசாரி கிளர்ச்சி அமைப்பான பார்க் அமைப்பினர் குறித்த நபர்களை பணயக் கைதிகளாக வைத்திருந்தனர்.

விடுதலையான பணயக் கைதிகளை உறவினர்கள் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இதேவேளை பணயக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என்று கொலம்பிய ஜனாதிபதி [illegible] தெரிவித்துள்ளார்.

## கறுப்பு ஆடுகளை பலி கொடுக்கும் சர்தாரி

இஸ்லாமாபாத்,ஏப்.4

தீய சக்திகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள தொடர்ந்து கறுப்பு ஆடுகளைப் பலி கொடுத்துக் கொண்டிருக்கிறார் பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி.

பாகிஸ்தானில் மூட நம்பிக்கைகளுக்குப் பெயர் போனவர் சர்தாரி. அவரது மத நம்பிக்கை குறித்து அந்த நாட்டு ஊடகங்கள் பல்வேறு செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இந்த நிலையில் தீய சக்திகளிடம் இருந்து தன்னைக் காத்துக்கொள்ள சர்தாரி கறுப்பு ஆடுகளை பலி கொடுக்கிறார் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதுபோல ஆடுகளைப் பலி கொடுத்தால், தன்னை தீய சக்திகள் அணுகாது என்று திடமாக நம்புகிறார் சர்தாரி. அவர் அதிபாரனதில் இருந்து பல கறுப்பு ஆடுகள் பலி கொடுக்கப்பட்டுள்ளன என்றும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



இதற்கிடையே, பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலிசர்தாரி எதிர்வரும் 8ஆம் திகதி இந்தியா வருகிறார். அவர் அஜ்மீர் தர்கா செல்லும் முன்பு பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசுவார்.

கடந்த 2005ஆம் ஆண்டுக்குப் பின் பாகிஸ்தான் அதிபர் ஒருவர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும்.

## மீண்டும் உயிர் பெறும் டைட்டானிக் கப்பல்

டைட்டானிக் கப்பல் விபத்தின் நூறாவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு பிரம்மாண்ட கப்பலின் நினைவைக் குறிக்கும் வகையில் அயர்லாந்தின் பெல்ஃபெஸ்ட் எனும் நகரத்தில் முதலாவது அருங் காட்சியகம் கட்டப்பட்டிருக்கிறது.

வருடத்துக்கு 125 ஆயிரத்துக்கும் மேலான பார்வையாளர்கள் ஒன்று கூடும் வகையில், ஆறு மாடிகளும், நான்கு பக்கங்களிலும் கப்பலின் கூர்மையான முகப் பகுதியின் தோற்றம் கொண்டதாக இந்த அருங்காட்சியகத்தை அமைத்துள்ளனர்.

கப்பல் குறித்த பலவிடயங்களை நினைவு அகலா ஆவணங்களாக் கொண்டு கடந்த மாதம் 31ஆம் திகதி தொடங்கப்பட்டிருக்கும் இந்த அருங்காட்சியகத்தின் திறப்புவிழாவில் அயர் லாந்து பிரதம அமைச்சர் மார்ட் டின் மெக்குயின்ச் கலந்து சிறப்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சகாப்தம் தொடங்கும்

## மியான்மரின் ஜனநாயகப் பெண் ஆங் சான் சூகி நம்பிக்கை

இடைத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதன் மூலம் மியான்மரில் புதிய சகாப்தம் தொடங்கும் என்று தான் நம்புகிறார் என்று ஜனநாயகக் கட்சித் தலைவர் ஆங்சான் சூகி தெரிவித்துள்ளார். மியான்மர் நாடாளுமன்றத்தில் கீழ் சபையில் 440 இடங்களும், மேல் சபையில் 224 இடங்களும் உள்ளன.

இந்நிலையின் நேற்று முன்தினம் கீழ்ச் சபைக்கான 37 தொகுதிகளுக்கும், மேல் சபையின் ஆறு தொகுதிகளுக்கும் மற்றும் இரண்டு சட்டசபைத் தொகுதிகளுக்கும் இடைத் தேர்தல் நடைபெற்றது. யாங்கூன் அருகே உள்ள காவ்மு தொகுதியில் போட்டியிட்ட சூகி அமோக வெற்றி பெற்றார்.



ஜனநாயக லீக் கட்சி தலைமை அலுவலகத்தில் தனது வெற்றி குறித்து தொண்டர்கள் மத்தியில் பேசிய சூகி, மியான்மரில் ஜனநாயகம் மேம்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் —என்றார்.

இந்தநிலையில் தேசிய ஜனநாயக லீக் கட்சி தலைமை அலுவலகத்தில் தனது வெற்றி குறித்து தொண்டர்கள் மத்தியில் பேசிய சூகி " எங்களுக்குக் கிடைத்த வெற்றி மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். மக்களின் முயற்சியால் தான் இது போன்ற அரசியல் நட வடிக்கைகள் தொடங்கி யுள்ளன. இடைத்தேர்தலில் நான் வெற்றி பெற்றதன் மூலம் புதிய சகாப்தம் தொடங்கும் என நம்புகிறேன். மியான்மரில் ஜனநாயகம் மேம்பட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றுபடவேண்டும் "- என்றார்.

## இனியொரு பூகம்பம் ஏற்பட்டால் ஜப்பானில் பல தீவுகள் மூழ்கும்

### நிபுணர் குழு எச்சரிக்கை

ஜப்பானில் மீண்டும் 9.0 புள்ளி ரிச்டர் அளவுக்குப் பூகம்பம் மற்றும் 112 அடி உயரத்துக்கு ஆழிப்பேரலைகள் தாக்கும் அபாயம் உள்ளது. அவ்வாறு நிகழ்ந்தால் டோக்கியோ முதல் தென் மேற்குப் பகுதியில் உள்ள குயுஷு தீவு வரை பல நகரங்கள் மூழ்கிவிடும் என்று நிபுணர் குழு எச்சரித்துள்ளது.

ஜப்பானில் கடந்த ஆண்டு பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து ஆழிப்பேரலையின் தாக்குதலில் பல நகரங்கள் சேதமடைந்தன. அதன்போது 9.0 புள்ளி ரிச்டர் அளவில் பூகம்பம்' பதிவானது. இதில் 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

புகுஷிமா நகரில் இருந்த அணு உலைகள் வெடித்துச் சிதறின. பயிர்கள் கருகின. மனிதர் களுக்கு கதிர்வீச்சுப் பாதிப்பு ஏற்பட்டது. ஓராண்டு முடிந்த நிலையில், பூகம்பம், பாதிப்பு குறித்து விரிவான ஆய்வு நடத்த நிபுணர் குழு அமைக்கப் பட்டது. இந்தக் குழு கடந்த ஓராண்டாக பல விடயங்களைஅலசிஆராய்ச்சி அறிக்கை அளித்துள்ளது.

2003ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நிபுணர் குழு, ஆழிப் பேரலைலை கள் 20 மீற்றர் உயரத்துக்குத் தாக்கி னாலும் எந்த நகரமும் மிக மோசமாக பாதிக்கப்படாது என்று கூறியிருந்தது.

ஆனால், தற்போது நிபுணர் குழு, 9.0 புள்ளி ரிச்டர் அளவுக்குப் பூகம்பம் ஏற்பட்டால் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று எச் சரித்துள்ளது. இதையடுத்து பேரிடர் தடுப்பு நடவடிக் கைகள் குறித்து ஜப்பான் அரசு ஆராய்ந்து வருகிறது.

## கடலுக்குள் மாயமான பெண்

பிரிட்டனுக்கும், பிரான்ஸுக்கும் இடையிலான கப்பல் பயணத்தின்போது பெண்ணொருவர் கால்தவறி கடலில் வீழ்ந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

நேற்று முன்தினம் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அபாய மணி அடிக்கப்பட்டு அந்தப் பெண்ணைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டது. நீண்டநேரம் தேடியும் அந்தப் பெண் கிடைக்காததால் தேடும் பணியை நிறுத்தினர்.

## வட கொரியாவில் உயர்மட்டப் பேச்சு

விண்கலம் செலுத்தும் திட்டத்துக்கு முன்னர் வடகொரிய உயர் மட்டத்தினர் முக்கிய கலந்துரையாடல் ஒன்றை மேற் கொள்ளவுள்ளனர். வடகொரியாவின் நிர்வாகம் கிம் ஜோன் உன்னின் கீழ் வந்துள்ள நிலையில் இந்தச் சந்திப்பு முக்கியமானதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரம் 11ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தொழிற்கட்சியைச் சேர்ந்த உயர் மட்ட உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவிண்வெளிக்கு விண்கலம் ஒன்றை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் அனுப்பத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட் டுள்ளது.



வடகொரியாவின் நீண்ட தூர விண்கலம் ஏவும் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை எதிர்ப்பு தெரிவித்து பிரேரணை ஒண்றை ஏற்கனவே நிறை வேற்றியுள்ளது. இந்தப் பிரேரணை 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதே போன்ற விண்கலத்தை அனுப்பியபோது வட கொரி யாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதித் ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெ. கல்லூரியில் சூட்டுச் சம்பவம்

அமெரிக்காவில் கல்லூரிக்குள் நுழைந்த மர்ம மனிதன் சரமாரியாகச் சுட்டதில் பலர் உயிரிழந் துள்ளனர்.

அமெரிக்காவின் ஒக்லாண்ட் மாகாணத்தின் சன் பிரான்சிஸ்கோ புறநகரில் உள்ள ஒகியோ பல்கலை வளாகத்தில் அமைந்திருக்கும் கிறிஸ்டியன் கல்லூரிக்குள் புகுந்த மர்ம மனிதன் சரமாரியாகச் சுட்டதில் பலர் உயிரிழந்தனர். பலர் பணையக் கைதிகளாகத் துப்பாக்கி முனையில் பிடிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதனால் இந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. முதற்கட்ட விசாரணையில், மர்ம மனிதன் கொரியாவைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்துள்ளது.


இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT. HDIT. DIT பட்டம் பெறும் எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

--Year 1,2,3 மாணவர்களும் விரிவுரையாளர்களும் MCS

BIT

கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT, DIT ,HDIT பெறும் எமது நிறுவன மாணவர்களில் சிலர்



N.Vipusany S.Sumathy, V.Vanaja, D.Sheltonm, S.Tharshini, J.Dancy, T.Inparaj, R.Vignamohan, R.Manivannan, S.Kunashanthiny, S.Sangeetha

BIT? கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தகவல்தொழில்நுட்ப பட்டக்கற்கை நெறி.
- A/L 2012-தோற்றுவோரும் விண்ணப்பிக்க முடியும்.(BIO,Maths,Arts,Commerce).
- A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலம் கற்கைநெறியைத் தொடரமுடியும்.
- 1ம் ஆண்டின் முடிவில் DITம் , 2ம் ஆண்டின் முடிவில் HDITம் கொழும்பு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும்.
- கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் பயில முடியும்.
- முழுமையாக பூர்த்தி செய்தோர் மேற்படிப்பை தொடர்வதற்கான Student Visa and Work Permit பெற முடியும்.
- பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய கற்கை நெறிக்கட்டணம்

MCS?
- ஜனா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
- BIT கற்கையை பட்டதாரிகளாலும் கணனி பொறியியலாளர்களாலும் கடந்த 7 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்திவரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
- BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட நிறுவனம்.
- ICDL, MICROSOFT, CISCO, IBM, ORACLE ,CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்

மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் BIT மாணவர்களுக்கு

BIT @ MCS?
* ICDL (International Computer Driving License)
* OCJP (Oracle Java Programmer)
* MCSE (Microsoft Systems Engineer)
* BCS (British Computer Society)
CCNA (Cisco Network Associate)

100% *OFF

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வராச்சந்தி அருகே Bus Route 764

SMS your name & BIT to 0772 395 895 & Get schol.
பதிவுகள் 07.04.2012க்கு முன்னர்



முு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

காலம்: 2012.04.06 (வெள்ளிக்கிழமை)

நேரம்: பிற்பகல் 1.30 மணி

இடம் : கல்லூரி பிரதான மண்டபம்

மேற்படி கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் குறித்த திகதியில் நடைபெற இருப்பதால் அனைத்து பழைய மாணவர் களையும் தவறாது கலந்துகொண்டு கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்
பழைய மாணவர் சங்கம்,
மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி,
முல்லைத்தீவு

(சி/327) (45.6.7)



67 ஆவது பிறந்த நாள் நினைவும் 7ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



மண்ணில்: 04.04.1945

விண்ணில்: 23.03.2005

அமரர்
செல்லத்துரை யோகேஸ்வரநாதன்
(முன்னாள் லிகிதர்,
வ.கி.தெ.ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி)

உங்கள் ஆத்ம சாந்திக்காக நிதம் பிரார்த்திக்கின்றோம்.

V.T.S. லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

உங்கள் மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


(15943) (6,9,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 அணு உலைகள்

## 2035 ஆம் ஆண்டுக்குள் இந்தியா அமைக்கும்

இந்தியாவின் மின்தேவை பெருமளவு அணு சக்தியை சார்ந்தே உள்ளது. தேசிய அனல் மின் கழகத்துடன் சேர்ந்து இந்த அணு உலைகள் அமைக்கப்பட இருக்கின்றன என்கிறார் இந்திய அணு சக்திக் கழக இயக்குநர்.



புதுடில்லி, ஏப்.4

2035ஆம் ஆண்டுக்குள் 60 அணு உலைகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக இந்திய அணு சக்தி கழக நிர்வாக இயக்குநர் எஸ்.கே. ஜெயின் தெரிவித்தார்.

சென்னையில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் அணு சக்தி குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு அவர் தெரிவித்ததாவது:

நாட்டின் மின்தேவை பெருமளவு அணு சக்தியை சார்ந்தே உள்ளது. தற்போது நாட்டில் செயற்பட்டு வரும் 45 அணு உலைகள் மூலம் 60 ஆயிரம் மெகாவாற் மின்சாரத்தை உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2035ஆம் ஆண்டுக்குள் 60 அணு உலைகள் கட்டப்படும். அணு உலைகள் அமைப்பதற்கான இடங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தேசிய அனல் மின் கழகத்துடன் சேர்ந்து இந்த அணு உலைகள் அமைக்கப்படுகின்றன - என்றார்.

ஜப்பானிடம் இருந்து இந்தியா பாடம் கற்க மறுக்கிறது என்று எதிர்ப்பாளர்கள் குரல் கொடுக்கிறார்கள்.

ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காரணமாக புகுஷிமா அணு உலை வெடித்தது. இதனைத் தொடர்ந்து அங்குள்ள அணு உலைகளை அரசு மூடிவருகின்றது. (வ)

## தீவிரவாத தடுப்பு நிலையம் ஏற்க ஜெயலலிதா மறுப்பு

### இந்தியப் பிரதமருக்குக் கடிதம்

சென்னை, ஏப்.4

தேசிய தீவிரவாதத் தடுப்பு நிலையத்தை தற்போதைய நிலையில் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தமிழ் நாடு முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவர் எழுதிய கடிதத்தில் தெரிவித்ததாவது:

**தேசிய தீவிரவாத தடுப்பு நிலையம் குறித்த திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும்.**

இந்தத் திட்டம் தற்போது தேவையா தேவையற்றதா என்று விவாதிக்க தனியாக முதல்வர்கள் மாநாடு கூட்டப்பட வேண்டும். முதல்வர்கள் கூட்டத்தில் ஆக்கபூர்வமான விவாதத்துக்குப் பின்னரே தேசிய தீவிரவாதத் தடுப்பு நிலையம் குறித்த முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். தேசிய தீவிரவாத தடுப்பு நிலையத்தை தற்போதைய நிலையில் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அதில் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய தீவிரவாதத் தடுப்பு நிலையம் அமைப்பதற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உள்ளிட்ட பல்வேறு மாநில முதலமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில், இந்த நிலையம் உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்பு எப்போதும் இல்லாத அளவு அதிக அபாயங்களை நாடு சந்தித்து வருவதாக தெரிவித்த அவர், பழங்கால முறைப்படி செயற்பட்டுவரும் பொலிஸ்துறையால் இதனை சமாளிக்க முடியாது. ஒரு விரும்பத்தகாத சம்பவம் நடந்து முடிந்த பின்னர் அதுகுறித்து வருத்தப்படுவதை விட, முன் கூட்டியே தயாராக் இருப்பதுதான் சிறந்தது-என்றார் அவர். (வ)

## நடிகை சரோஜா காலமானார்



சென்னை, ஏப்.4

மறைந்த நகைச்சுவை நடிகர் தங்கவேலுவின் மனைவியும், திரைப்பட நடிகையுமான எம்.சரோஜா (வயது 82) சென்னையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மரணமடைந்தார்.

சென்னை தியாகராய நகரில் குடும்பத்துடன் வசித்து வந்த அவர், கடந்த சில மாதங்களாகவே உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்தார். இந்தநிலையில், அவர் நேற்றுமுன்தினம் மரணமடைந்தார்.

அவரது இறுதிச் சடங்கு செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. கல்யாணப் பரிசு, அறிவாளி, வணங்கா முடி உள்ளிட்ட படங்களில் அவர் நடித்துள்ளார். தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் 300 இற்கும் அதிகமான திரைப் படங்களில் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## போயஸ் தோட்டம் திரும்பினார் சசி

சென்னை, ஏப்.4

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதாவின் தோழி சசிகலா நேற்றுமுன்தினம் மீண்டும் போயஸ் வீட்டுக்குச் சென்றுள்ளார். சசிகலாவின் இடைக்கால நீக்கம் திரும்பப் பெறப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் மாலை மீண்டும் போயஸ் தோட்ட வீட்டைச் சென்றடைந்தார்.



பிரிந்த இருவரும் தங்கள் பரஸ்பர அறிக்கைகள் மூலம் சமாதானம் ஆகினர்.

சசிகலாவும், அவருடன் இளவரசியும் வந்து சேர்ந்து விட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கடந்த டிசெம்பர் 19ஆம் திகதி முதல்வர் ஜெயலலிதா தனக்கும் தன் ஆட்சிக்கும் எதிராகச் செயற்பட்டு, ஆட்சியைக் கைப்பற்ற சதித்திட்டம் தீட்டினார் என்று தனது தோழி சசிகலா மீது குற்றம் சாட்டி அவரையும், அவரின் ஒட்டுமொத்தக் குடும்பத்தினரையும் அ.தி.மு.கவிலிருந்து நீக்கினார். மேலும், சசிகலாவையும் போயஸ் வீட்டிலிருந்து விரட்டியடித்தார்.

இந்த நிலையில், சசியின் நெருங்கிய உறவினர் மீது பல்வேறு வழக்குகள் பதிவாகியதோடு, சிறையிலும் அடைக்கப்பட்டனர். இதனையடுத்து, திடீரென்று கடந்த 28ஆம் திகதி சசிகலா ஒரு உருக்கமான அறிக்கையை வெளியிட்டார். அதில், அக்கா ஜெயலலிதாவுக்கு துரோகம் செய்பவர்கள் யாராக இருந்தாலும், எனக்கும் எதிரிகளே என்றும், அக்காவுக்காகவே தான் வாழ்ந்ததாகவும், தன் வாழ்வின் மீதி நாள்களையும் அக்காவுக்காகச் செலவிடுவதில்தான் தனக்கு மகிழ்ச்சி, எனவே தனது குடும்பத்தினரை உதறிவிடுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து, சசிகலாவின் அறிக்கையை ஏற்றுக் கொள்வதாக ஜெயலலிதா ஒரு அறிக்கை வெளியிட்டார். இருவரும் தங்களது அறிக்கைகளின் மூலம் சமாதானம் அடைந்துள்ளனர், இதையடுத்து நேற்றுமுன்தினம் மீண்டும் போயஸ் தோட்டத்துக்கு வந்தார் சசிகலா. இதன் மூலம் 24 ஆண்டுகள் ஒரே வீட்டில் வாழ்ந்து, இடையில் விட்டுப்போன உறவு மீண்டும் சேர்ந்தது. (வ)

## பாக். சிறையில் 32 இந்தியர்கள்

டில்லி, ஏப்.4

தண்டனைக் காலம் முடிந்தும் பாகிஸ்தான் சிறையில் இருந்து 32 இந்தியர்கள் விடுதலையாகாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.

தண்டனைக் காலம் முடிவுற்றதால் 32 இந்தியர்கள் உள்ளிட்ட 74 வெளிநாட்டவர்களை விடுவிக்குமாறு லாகூர் உயர்நீதிமன்றம் கடந்த நவம்பரில் உத்தரவிட்டது.

எனினும் ஆவணங்கள் சரி பார்த்தல் உள்ளிட்ட சில சிறிய காரணங்களுக்காக அவர்கள் இதுவரை விடுவிக்கப்படாமல் உள்ளனர்.

இந்தநிலையில் இந்திய அரசு தலையிட்டு அவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறையில் உள்ளவர்களின் குடும்பத்தினர் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)

## உணவில் நஞ்சு 5 பேர் ஆபத்தான நிலையில்

ஜெய்பூர், ஏப்.4

ராஜஸ்தானின் ஜம் தோலி பகுதிக்கு அருகில் நஞ்சு கலந்த உணவைச் சாப்பிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிப்புக்கு உள்ளாகி யுள்ளனர். இவர்களில் 5 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உணவு சாப்பிட்டவர்கள் வாந்தி மற்றும் வயிற்று வலியால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. மருத்துவ குழுவினர் அந்தப்பகுதிக்கு விரைந்து சிகிச்சை அளித்து வருகின்றனர். இதேவேளை உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## கோயிலில் துப்பாக்கிச் சூடு; உத்தரப் பிரதேசத்தில் 3 பேர் சாவு

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் இடாவில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பிரமணி தேவி கோயிலில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராமநவமி விழாவை முன்னிட்டு கோயிலில் 500 இற்கும் மேற்பட்டோர் கூடியிருந்தபோது மது போதையில் இருந்த இரு குழுக்களிடையே கோயிலில் யார் முதலில் கொடியேற்றுவது என்பது தொடர்பாக மோதல் ஏற்பட்டது. (வ)

## மகாத்மா காந்தியின் பொருள்கள் ஏலத்தில்



புதுடில்லி, ஏப்.4

*மகாத்மா காந்தியின் வட்ட வடிவக் கண்ணாடி, நூல் ராட்டை மற்றும் புல் வெட்டும் கத்திகள் உள்ளிட்ட பல்வேறு அரிய பொருள்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஷ்ராப்ஷைரில் ஏலம் விடப்படவுள்ளன.*

*முல்லாக் நிறுவனம் இந்த ஏலத்தை நடத்துகிறது. இந்த ஏலத்தின் மூலம் ஏறக்குறைய 10 ஆயிரம் பவுண்டுகள் திரட்ட முடியும் என்று அந்த நிறுவனம் எதிர்பார்க்கிறது.*

*இந்த ஏலத்தில், 1948 ஆம் ஆண்டு காந்தி சுடப்பட்ட போது அந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட மண், புற்கள் உள்ளிட்ட பொருள்களும் ஏலத்துக்கு வருவது குறிப்பிடத்தக்கது. (வ)*

## மன்மோகனுக்கு வைகோ கடிதம்

### காணமல்போன மீனவர்களை மீட்கக்கோரி

சென்னை, ஏப்.4

காணாமல்போன குளச்சல் மீனவர்களை மீட்டுத் தரும்படி பிரதமர் மன்மோகன் சிங், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி ஆகியோருக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் பகுதியைச் சேர்ந்த 7 மீனவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை.

இதுதொடர்பாக, மீனவர்களில் ஒருவரான மரிய மிக்கேலின் மனைவி சுனாலி குளச்சல் கடற்கரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். தேடுதல் வேட்டையை நடத்திய தங்களால், அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அதிகாரிகள் கைவிரித்து விட்டனர்.



மீனவர்கள் மாயமாகி 50 நாள்கள் கடந்துள்ள நிலையிலும், அவர்களைப் பற்றிய ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

மீனவர்கள் மாயமாகி 50 நாள்கள் கடந்துள்ள நிலையிலும், அவர்களைப் பற்றிய ஒரு தகவலும் கிடைக்கவில்லை, அவர்களை கைபேசியில் தொடர்பு கொண்டால், தொடர்பு எல்லைக்கு அப்பால் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடற்கொள்ளையர்கள் அவர்களைக் கடத்தியிருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மாயமான மீனவர்களது குடும்பத்தினர் ஆதரவு இன்றி கண்ணீர்க் கடலில் தத்தளிக்கின்றனர். கடலோரக் காவல் படைகள் மூலமாகவோ, ஹெலிகொப்டர் மூலமாகவோ தேடுதல் நடத்தி அவர்களை மீட்டு தர வேண்டும் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மானு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## புலிக் கதையில் உள்ள நரித் தந்திரம்

ஜெனிவா தீர்மானத்தின் பின்னர் இலங்கை அரசின் எதிர்வினைகள் தமிழ் மக்கள் விரும்பும்படியோ ஏற்றுக் கொள்ளும்படியோ இல்லை. இனங்களிடையேயான பிளவை மேலும் வலுப்படுத்தும் செயல்களிலேயே அது இறங்கியுள்ளது.

அமெரிக்காதான் உண்மையான பயங்கரவாதி என்று சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். புவி வெப்பமடைதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு என்பவற்றில் அமெரிக்காவின் பங்கு அதிகம் என்பதற்காக அவர் அந்தக் கருத்தை வெளியிட்டார் என்றாலும், ஜெனிவாவில் அமெரிக்கா எடுத்த நிலைப்பாடு மீதான சீற்றமே அது என்பதைப் புரிந்து கொள்வதற்கு அதிகம் சிரமப்பட வேண்டியதில்லை.

இன்று பயங்கரவாதிகளாகத் தெரியும் அமெரிக்கர்கள் மூன்று வருடங்களுக்கு முன்னர் வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அப்படித் தெரியவில்லை என்பதை அவர் மறந்துவிட்டார். விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகள் என்று கூறி அமெரிக்கா தடை செய்தபோது [தடை செய்யச்சொல்லி இலங்கைதான் கேட்டது] ஒரு பயங்கரவாதி எப்படி இன்னொருவரைப் பயங்கரவாதி எனப் பட்டியலிட முடியும் என்று அவர் கேட்கவில்லை.

இவ்வாறு தர்க்க ரீதியான பல ஓட்டைகளைக் கொண்ட விமர்சனங்களை அடிக்கடி முன்வைப்பவர்தான் ஜனாதிபதி என்றபோதும், ஜெனிவா தொடர்பில் அவரும் அவரது அமைச்சர்களும் இப்போது ''ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'' என்ற போக்கில் நடந்து கொள்கிறார்கள்.

அத்தகைய மற்றொரு நகர்வே விடுதலைப் புலிகள் மீண்டும் வந்துவிட்டார்கள் என்று சோடிக்க முடியும் என்ற அரசின் கதை. தமிழகத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற 150 விடுதலைப் புலிகள் இலங்கை திரும்பி இருக்கிறார்கள் என்றும், அவர்களே கிழக்கில் நடந்த ஈ.பி.டி.பி. ஆளின் படுகொலைக்குக் காரணமானவர்கள் என்றும், புலனாய்வாளர்களை மேற்கோள்காட்டி, அரச சார்புப் பத்திரிகையான 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருந்தது.

இலங்கையின் இந்தக் கருத்தை இந்தியா மறுத்துவிட்டது. தமிழக பொலிஸ் உயர் அதிகாரியும், தமிழகத்தில் புலிகளுக்கு எந்தப் பயிற்சி முகாமும் இல்லை, பதிலாக புலிகளின் ஆதரவாளர்களே தீவிரக் கண்காணிப்பில்தான் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்துவிட்டார்.

புலிகள் வந்துவிட்டார்கள் என்பதை ஆதரித்து முதலில் கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர், இந்தியாவின் மறுப்பு வந்ததும் ''புனர்வாழ்வு பெறாது இன்னும் பல புலிகள் இருக்கிறார்கள். அவர்களைத் தேடித்தான் கிழக்கில் சோதனை நடக்கிறது'' என்று தனது கருத்தை மாற்றினார்.

தமிழகத்தையும் புலிகளையும் தொடர்புபடுத்தி அரசு கதைவிடுவது இது ஒன்றும் முதல் தடவையல்ல. ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் யாராக இருந்தாலும் அது விடுதலைப் புலிகள்தான் என்று அரசு முத்திரை குத்துகிறது. அவர்களைத் தவிர யாராலும் தமிழர் நலனில் அக்கறை கொள்ள முடியாது என்று அரசு அவ்வளவு உறுதியாக நம்புகிறது.

இதனடிப்படையில் ஐ.நா. தீர்மானம் வருவதற்கு சில நாள்கள் முன்பாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் காரியவசமும் இப்படியான கருத்தை வெளியிட்டார். தமிழகத்தில் உள்ள அரசியல்வாதிகளுக்கும், புலிகளுக்கும் தொடர்பிருக்கிறது என்று தெரிவித்த தனது கருத்துக்காக அவர் பின்னர் மன்னிப்புக் கேட்டார்.

அரசின் இந்தப் புலிக் கதைகளுக்குப் பின்னால், ஒரு நரித் தந்திரம் உள்ளது. ''பயங்கரவாதிகள்'' என்ற பதத்தைப் பயன்படுத்தி இன்னமும் உலகை ஏமாற்ற முயற்சிக்கும் தந்திரமே அது. 9/11, அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் வீச்சுப் பெற்ற இந்தத் தந்திரமே போரில் புலிகளை ஒழிக்க அரசுக்கு உதவியது.

ஆனால், பின்லேடனின் கொலையுடன் ''பயங்கரவாதத்துக்கு எதிரான போர்'' வலுவிழந்துவிட்டது. இப்போது அது அரச பயங்கரவாதத்துக்கு எதிரான போராகத் திசை திரும்பியுள்ளது. எகிப்தில், லிபியாவில் நடந்ததும் சிரியாவில் நடந்து கொண்டிருப்பதும் அதுவே. இதைப் புரிந்து கொள்ளாமல் இன்னும் நரித்தந்திரங்களை நம்புகிறது அரசு.

# நல்லதோர் வீணை செய்தே...

■ செந்தூரி

ஒற்றை வார்த்தையில் அவர்களைச் சொல்ல வேண்டுமாயின் ''இரண்டுங்கெட்டான் வயசு''! ஒளிமயமான எதிர்காலத்துக்கான அத்திபாரகாலத்தையும், பாழடைந்து தூர்ந்து போகின்ற கடும் எதிர்காலத்துக்கான கால்கோள் நேரத்தையும் சம வாய்ப்புடன் சுமக்கும், பதின்ம வயதுகளின் இறுதி மூன்று வருடங்கள் அவை!

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையின் சாதாரண நிலை தடை தாண்டல் முடிந்த கையோடு, புதிதாக அறிமுகமாகும் பலவகை சமூக முகங்களை எதிர்கொள்ள வேண்டிய தேவையைச் சுமக்கும் இன்னுமொரு பட்டாளம், பரீட்சை முடிவுகளின் ஆரவாரிப்போடு கிளம்பியிருக்கின்றது எப்போதும் போலவே இப்போதும்!

உடல்சார் மாற்றங்களுக்கு மேலதிகமாக, கையில் புழங்கும் பணநோட்டுக்களும், பாடசாலைகளுக்கு மேலதிகமான 'அத்தியாவசிய' தனியார் வகுப்புகளும், வசீகரிக்கும் வகை வகையான ஆடைகளும், ஊருக்கு மேலதிகமான புதுப் புது நட்பு வட்டாரங்களும், வீட்டுக்கு வெளியே செலவிடும் நேரத்தின் அசாத்திய அதிகரிப்பும் பன்மடங்கான மாற்றச் சூழல்களுக்குள் இவர்களை ஆட்படுத்துகின்றன.

இதுவரையான, ஏறத்தாழ பதினொரு வருடங்கள், தனியே பாடசாலைக் கல்வியையும், வீட்டுச் சுய கற்றலையும், அயலோடு இணைந்த தனியார் நிலைக் கல்வியையும் அன்றாடக் கடமைகளாகக் கைக்கொண்டு வந்தவர்கள், வலிந்த, தவிர்க்க முடியாத தனியார் கல்வி நிலையங்களின் பிரசன்னங்களுக்கு நகரை மையப்படுத்தி குவியத் தொடங்குவதில் தொடங்குகின்றது சிக்கல்களின் தோற்றுவாய்!

உயர்தரப் பாடப்பிரிவுகளில் எதைத் தெரிவு செய்பவர்களாயினும், 'டவுனுக்கு' ரியூசன் போவதில் இருக்கும் கௌரவம் கலந்த நிர்ப்பந்தம் எம்மூர்ப் பாடசாலைகள் தந்த சாபம்!

பாடசாலைகளின் செயற்பாடு நேரத்தை இணைப்பதால் வருகின்ற, கல்விக்கான காலம், பாடவிதானங்களைப் பூரணப்படுத்தப் போதுமானவை இல்லை என்கின்ற ஒற்றைக் குறைபாடு அல்லது குற்றச் சாட்டு மட்டுமே அத்தனை வகையான 'கட்டணக் கல்விக் கூடங்களின்' மிகையெழுச்சிக்கும் காரணம்!

இதைத்தவிர வேறெந்த வலிதான காரணத்தையும் முன்வைத்து விட முடியாத இந்தக் ''காலம் கடந்த ஞானத்தின்'' மீது குறை சொல்வதோ, எம் நிலப்பரப்பின் ஆளுகைக்குரிய பாடசாலைகளின் இயலாத்தன்மையை விவரிப்பதோ, ஏட்டுக் கல்வி மேல் சத்தியமாக இந்தப் பத்தியின் நோக்கம் இல்லை!

ப்பாடசாலை ஓய்வு தினங்களில் (இறுதி வருடங்களில் பாடசாலை நேரங்களிலும் கூட) பெரும் திரளாக, ஆரவாரிக்கும் இந்த இளைஞர் பட்டாளத்தின் வகுப்பு நேரத்தின் முன், பின்னான பொழுதுகளில் 'அங்குசம்' யாரிடம்? என்பது மட்டுமே என் கேள்வி

'பயண நேரங்கள்', 'வகுப்புகளுக்காக காத்திருப்பது' ,'வேண்டுமென்றே கட் அடிப்பது', 'பயண ஆயத்த நேரங்கள்', 'உணவு இடைவேளைகள்', 'தேநீர் இடைவேளைகள்' என எல்லாமுமாகச் சேர்த்து தகா வேலிகளுக்கு உள்ளே செலவிடும் நேரத்துக்கு சற்றும் குறையாத நேரம் இவர்களுக்கு காவல்காரனில்லாத கனித்தோட்டத்திலும் கிடைக்கின்றது செலவிட!

பெற்றோரின் கண்களுக்கு மறைக்கப்பட்ட, தனியார் நிறுவன நிர்வாகங்களினால் மறுக்கப்பட்ட அநாமதேய சுதந்திரம் ஒன்றை இப்படை ஆசுவாசமாகச் சுவாசிக்கின்றது என்பது எவராலும் புதைத்து விட முடியாத உண்மை! நிறுவனங்களின் நிர்வாக குழுவினராலோ, ஆசிரியர் குழாத்தினாலோ, காவல் (?) கடமையிலீடுபடும் பணியாளர்களினாலோ தெரிந்திருந்தாலும் கட்டுப்படுத்தி விட முடியாத ''தவறுகளின் ஒற்றையடிப் பாதைகளைக் கூட'' சுலபமாக மோப்பம் பிடித்து நடந்து பார்க்க ஏங்கித் துடிக்கின்றது எம்மிளஞ் சமூகம்!

இவ்வகையான ''தெரிந்தே சீரழியும் செய்முறைக் கூடங்களை'' எட்டிப் பார்க்கும் மாணவக் குழுக்களைக் கட்டுப்படுத்தத் தவறியவர்கள் என்று எவரையாவது விரல் நீட்டிப் புறஞ்சொல்வதும் சம்பாத்திய வழியை மட்டுமே நெறியாகக் கொண்டு நடப்பவர்கள் என்று தூற்றுவதும் இந்த வியாதிக்கான தற்காலிக வலி நிவாரணி மட்டுமே!

''வாசலோடு எங்கள் கடமை முடிந்தது; கற்க வந்தவனின் கண்ணியம்தான் மீதி வழிக்கு காவல்'' என்கின்ற அவர்களின் வாதத்தில் உரிமையோடு தலையிட்டு எதிர்க்கும் வினாவல்லமை எந்தப் பெற்றோருக்கும் இல்லை! அப்படியே தவறிக் கேட்டு விட்டாலும்கூட, அவமானத்துடன் நாவடக்கியபடி வெளியேற வேண்டிய ''கொதி மொழி'' ஒன்றைப் பதிலாக சட்டைப் பையில் நிரப்பி அனுப்பி வைத்து விடுவார்கள் என்கிறது அனுபவம்!

இந்தக் குழுக்களில் ஏதோவொரு மூலைக்குரிய ஆண் மாணவர்களாயின் புகைப்பழக்கமும், மதுப்பழக்கமும், போதைவஸ்துப் பாவனை வந்து தானே குடியேறிவிடும் அனைத்திலும், அதிவிஷேசமாக விலை மகளிர் தொடர்பும், பெண்மாணவிகளாயின் கைப்பேசிப் பாவனையும், சமூக வலைத்தளங்களின் அறிமுகமும், புதிய வகைப் பொய் பேசும் பழக்கமும் காரணங்களில் தாமதித்தலும் சாதாரணமாக ஆட்கொள்ளும் அவலம் இன்றைய யாழ்ப்பாணத்து இளைய தலைமுறையினரின் உண்மை நிலை.

இவைக்கு மேலதிகமாக பால் வேறுபாடின்றி பருவக் கவர்ச்சியின், ஓமோன் குளறுபடிகளும், ஆபாச ஊடகங்களின் அறிமுகமும், பாவனையும் சர்வசாதாரணமாக வியாபித்து வேரோடிக் கிடக்கின்றன. இன்று நேற்றல்லாது, மேற்படி கலாசார பிறழ்வுகளுக்கு எதிரான கூக்குரல்கள், அன்று தொடங்கி ஒலிக்கின்ற போதிலும், மடங்குக் கணக்கில் பெருகி வரும் இவற்றின் அசுர வளர்ச்சி சிறிதும் தளம்பியதாய்த் தெரியவேயில்லை.

கட்டுப்படுத்திவிட முடியும் என்கின்ற நம்பிக்கை சுடர்விடுகின்ற இந்த வயதுக்குரியவர்களின் 'உறள் தன்மைக்கு' பெரும்பான்மையான நேரம் கிடைப்பது, தனியார் வகுப்புக்களை சாட்டாகக் கொண்டு விதிக்கப்படும் கால அட்டவணைகளில் தான்.

இது எழுந்தமானமான கூற்றென்றில்லாது, எவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் உண்மையாக மாறுவதாயின், தனியார் கல்வி நிறுவனங்கள் சமூக அக்கறை கொண்ட கலாசார காவற் கோபுரங்களாகவும் மாற்றப்பட்டதன் பிற்பாடு மட்டுமே!

தம்மேல் வீசப்படும் குற்றச்சாட்டு என்றெண்ணி, சட்ட விளக்கம் கொடுத்து மறுத்துரைப்பதை விடுத்து போதுமான அக்கறையுடன், சமூக வெளிக்கு வந்து ஒரு முறை பார்க்கும் எந்தவொரு நிறுவனம் சார் மனிதனாலும், யதார்த்தத்தை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

பால்நிலை வேறுபாட்டுக்குரிய தனித்தனியான பாடசாலை கட்டமைப்புக்கள், தனித்தனியான போக்குவரத்து வசதிகள், சீருடையுடன் இலகுவில் வெளித்திரியமுடியாத இறுக்கம், பெயரளவிலேனும் ஆசிரியர்களுக்கும், பாடசாலை நிர்வாகத்தினருக்கும் அச்சப்படுதல், பெற்றோருடனான நேரடித் தொடர்புகள் போன்ற ஏதுக்களால் சம வயதுக்குரிய யௌவனர்கள் பாடசாலைகளையொட்டிய சூழல்களில் தவறிழைப்பதென்பது ஒப்பீட்டளவில் மிகமிகக் குறைவே! ஆனால் மூடாமல் திறந்தே கிடக்கும், பலவகைக்குரிய கரும்புள்ளிகளுள் வெகு சுலபமாக உள்ளீர்க்கப்படுவது பாடசாலைக்கு வெளியே என்பதைத் திறந்த மனதுடன் ஒப்புக்கொள்ளும் புறக்கல்விச் சமூகமே அதிமுதற் தேவை இப்போது!

''ஆம்! எங்களுடைய கவனக் குறைவு அல்லது கவனப்பற்றாக் குறை அவர்களை தவறிழைக்கத் தூண்டுகின்றது'' என்றோ, ''போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மாணவர்களைக் கையாள முடியவில்லை'' என்றோ, ''இதை விட இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் இந்த வயதினரைக் கண்காணிக்க வேண்டும்'' என்றோ திறந்த தன்னிலை விளக்கமளிக்கத் தயங்கும் புறக்கல்விக் கூட நிர்வாகிகளிடம் ஒருமித்த மாற்றம் தேவை. என்பது தான் காரில் கொண்டு வந்து மகளையோ, மகனையோ இறக்கிவிட்டுக் காத்திருக்கும் வைத்தியத் தந்தையினது கோரிக்கை மட்டுமல்லாது, ஐம்பத்திச் சொச்ச ரூபாக்களை அதிகாலைகளில் எண்ணிக் கொடுத்து பஸ் பயணம் பத்திரம் பிள்ளை, என்று பயணமனுப்பும் வாழைத் தோட்டக்காரனினதும் இரங்கலும்கூட!

''அகில இலங்கை அளவிலான முதல் பத்து இடங்களுக்குள் எந்தத் தமிழ் மாணவனும் இல்லை'', ''வட பகுதிக்கான முடிவுகள் இந்த முறை அண்மைய வருடங்களிலும் பார்க்க அதீத வீழ்ச்சி'', ''முன்னிலைப்பாடசாலைகளிலும் கூட பெருமளவு பேர் உயர்தரம் கற்கத் தகுதி பெறவில்லை'', ''இரண்டு மொழி மூலங்களினால் ஏற்பட்ட குழப்பநிலை'' எனப் புள்ளி விவர ரீதியான செய்திகள் நிற்குறி காட்டியிராத, கவலைக்கு மேலதிகமாக, இன்னுமொரு உயர்தர வகுப்பு கற்கும் அணி நகருக்குள் புகுவதை கவலையுற்ற கண்களுடனே நோக்கும் சமூக ஆர்வலர்களின் நம்பிக்கைகள் அவ்வளவு ஆழமாய் இல்லை!

''அவர்கள் சொன்னால் கேட்கும் வயதில் இல்லை'', ''பெற்றவர்களின் கண்காணிப்பு எல்லை எப்படியும் இல்லை'', ''உருட்டி மிரட்டியாயினும், பண்பாடு காக்கும் படைக்காவலர்களும் ஊரில் இல்லை'' கெட்டு விடக்கூடாது இவ்வினம் எனும் அக்கறையாவது ஆன்றோருக்கு இல்லை'' என கையறு நிலையில் பிச்சை வேண்டாம், நாயைப்பிடி என்கின்ற பெரு ஞான நிலையை எய்துவதற்கு தள்ளப்பட்டுள்ளோம்.

''எண்ணி வாங்குவதிலும், எடுத்துத் தெளிப்பதிலும்'' மட்டும் சிரத்தை தொனிப்பதைக் குறைத்து, ''கண்ணியம் காக்கும், களங்கமிலாத் தலைமுறை முளைக்க'' இணைந்துழைப்போம் இனி! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மஹிந்த பாதயாத்திரை சென்ற 20ஆவது வருடம் நடக்கிறது; இதை அவருக்கு

# யார் நினைவுபடுத்துவது?

**பழ.நெடுமாறன்**

**‘நிரஞ்சலா ஆரியவன்ச: துரோகியா தேசபற்றாளரா?’ என்ற தலைப்பில் ‘சன்டே லீடர்’ பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம்.**

மனித உரிமைகள், பிரேமதாச ஆட்சியில் நசுக்கப்படுவதை எதிர்த்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரை சென்றவர் மஹிந்த ராஜபக்ஷ. அதே உரிமைகளுக்கு இன்று என்ன நேர்ந்துள்ளது?

மஹிந்த ராஜபக்ஷ அப்பொழுது எதிர்க்கட்சியில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். 1990 மற்றும் 1991ஆம் ஆண்டுகளில் பிரேமதாச ஆட்சிக் காலத்தில், ஆள்கள் கடத்தப்படுகிறார்கள் என்பதைப் பற்றி முறையிடுவதற்காக ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவைக்குச் சென்றார்.

ஜே.வி.பியினர் மீதான கடும் நடவடிக்கைகளின் காரணமாக, காணாமல் போனவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றைத் தயாரித்து சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அனுப்பி வைத்தார். அத்துடன் நிற்கவில்லை, பிரேமதாச அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கச் செய்வதற்கு அணி திரட்டுவதற்காக தாமே நேரில் போகவும் தீர்மானித்தார்.

விமான நிலையத்தில் அவர் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டார். ஊடகங்கள் அது பற்றி பெரிதாக விமர்சித்தன. அவர் ஜெனிவா போவதற்கு அனுமதிக்கப்பட்டார். அவர் திரும்பி வந்தபோது மனித உரிமைகள் போராளி என்று போற்றிப் புகழப்பட்டார். அன்று அவர் மக்களின் உரிமைப் போராட்ட வீரராகக்கணிக்கப்பட்டார்.

ஆனால் இன்று அவருக்கு மாறாக ஜெனிவாவுக்கு செல்பவர்களை துரோகிகளாகப் பார்க்கின்றார். இன்று ஜெனிவாவுக்கு செல்பவர்களை துரோகிகளாக கணிப்பதென்றால், மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அந்தப் பட்டம் பொருந்தத்தானே வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பெரிய அரசியல் நகர்வு 1992 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்குப் பாதயாத்திரையொன்றை அவர் அப்போது ஆரம்பித்தார். இன்றைய அரசைப் போல அன்றும் ரணசிங்க பிரேமதாசவின் அரசு குறித்து மக்கள் அச்சம் கொண்டிருந்த காலம் அது. 1987/89 ஆம் ஆண்டு காலத்தில் ஜே.வி.பி போராட்டத்தின் போது, ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போனமைக்கு பிரேமதாச அரசே பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறி இந்த பாதயாத்திரை நடத்தப்பட்டது. தனியார்மயப் படுத்தல், தாக்குதல்களை நிறுத்துதல், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை காணுதல் மற்றும் விலைவாசிகளைக் குறைத்தல் என்பன அப்போதும் கோரிக்கைகளாக முன் வைக்கப்பட்டிருந்தன. மஹிந்த ராஜபக்ஷவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாதயாத்திரைக்கு, சிறிலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் ஆதரவளிக்கவில்லை.

என்றாலும் ஐ.தே.கவுக்கு எதிராக பெரும் எண்ணிக்கையில் மக்கள் தெருவில் இறங்கியது அதுவே முதல் சந்தர்ப்பம். பிரேமதாசவின் அரசாங்கம் என்னதான் ஒடுக்குமுறைகளைக் கையாண்ட போதும், 19 நாள்கள் நடைபெற்ற பாதயாத்திரையை நிறுத்தும்படி பொலிஸாரை அனுப்பவில்லை. அதுபோலவே கண்ணீர்ப்புகைக் குண்டுகளைத் தீர்க்கவில்லை. குண்டர்களைக் கொண்டு பாதயாத்திரை சென்றவர்கள் மீது கற்களை வீசித் தாக்கவில்லை. பாத யாத்திரை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதனைத் தடுப்பதற்கு நீதிமன்ற கட்டளையைப் பெற முயலவில்லை. பொலிஸ் அல்லது ராணுவம் வீதித்தடைகளை நடத்தவும் இல்லை. எனவே ராஜபக்ஷ எதுவித தடையும் இல்லாமல் கதிர்காமத்துக்கு பாதயாத்திரை போக முடிந்தது.

பாதயாத்திரை மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. வருடக்கணக்கில் அச்சத்தில் வாழ்ந்த எதிர்க்கட்சியினரால் மீண்டும் செயற்பட முடிந்தது.. இந்தப் பின்னணியில் வெலியாத்தையில் ஒரு மாகாண அரசியல்வாதியாக இருந்த ராஜபக்ஷ தேசியத் தலைவராக உயர முடிந்தது.

அந்தப் பாதயாத்திரையின் 20ஆவது நினைவு வருடம் இதுவாகும். ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசியல் வெற்றியைக் குறிப்பிடும் வகையில் இந்த வருடத்தை வழமைபோல் " தமாஷா" க்களுடன் அரசு கொண்டாடுமா என்பது தெரியவில்லை. ஜனாதிபதி எவ்வாறு ஒரு ஜனநாயக வாதியாக இருந்து சர்வாதிகாரியாக மாறினார் என்பதை இது காட்டுவதாக இருக்கும். இதன் உண்மை நிலை என்னவென்றால் 1992 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குப்பின்னர், ராஜபக்ஷ எதை எதிர்த்துப் போராடினாரோ, அதே பயபீதியான நிலைமை இன்று அவரது நிர்வாகத்தின் கீழும் நிலவுகின்றது என்பதுதான்.

சிவராம், லசந்த விக்கிரமதுங்க மற்றும் பலர் கொல்லப்பட்டார்கள், டஸின் கணக்கானவர்கள் தாக்கப்பட்டார்கள்: துன்புறுத்தப்பட்டார்கள்: இவரது ஆட்சிக் காலத்தில் பட்டப்பகலில் நீதிமன்ற வளவுகளில் வைத்து ஆள்கள் வெள்ளைவான்களில் கடத்தப்படுகிறார்கள்: குற்றப்பின்னணிகளைக் கொண்ட அமைச்சர்களும் மாகாண அமைச்சர்களும் அவரது ஆட்சியில் இருந்து வருகிறார்கள். மிகப்பெரிய போதைப் பொருள்கள் கடத்தல்காரர்கள் சிலர் அவரது கட்சி உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது பகிரங்க இரகசியமாகும். ஒரு காலத்தில் மனித உரிமை சம்பியனாகத் திகழ்ந்த ஒருவரின் ஆட்சியின் கீழ் நீதித்துறையின் சுதந்திரம், பொலிஸ் மற்றும் ஊடகம் போன்ற மற்றைய துறைகளின் சுதந்திரங்கள் முன்னெப்பொழுதையும் விட மோசமாகச் சீரழிந்திருப்பது முரண்பாடான நிலைமையாகும்.

வரலாற்றில் முதல் தடவையாக சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசாங்கம் ஒன்று போர்க் குற்றச்சாட்டுக்குள்ளாக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை. அதனால் பாத யாத்திரையின் 20 ஆவது ஆண்டு நினைவு நாளை அரசு மெதுவாக மறந்துவிடக்கூடும்.

ஆனால் ராஜபக்ஷ காட்டிய அந்த முன் உதாரணத்தை கையில் எடுத்துக் கொண்டு, அவர் பாணியில் அரசுக்கு எதிராக கதிர்காமத்துக்கு பாத யாத்திரை செல்லக்கூடிய அரிய சந்தர்ப்பம் ஒன்று எதிர்க்கட்சியினருக்கு வாய்த்திருக்கிறது. 20 வருடங்களுக்கு முன் ராஜபக்ஷ கிளப்பிய அளவிலேயே பிரச்சினைகள் இன்றும் இருக்கின்றன.

ராஜபக்ஷ அனுமதிப்பாரா, பொலீசை? அல்லது தமது பாதாள உலகப் பேர்வழிகளை அனுப்பித் தடுப்பாரா என்பதை இதன் மூலம் சோதித்துப் பார்க்கலாம்.

அரசியல் பின்னணியாகவோ அல்லது தன்னிச்சையாகவோ, எந்தவகை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டாலும் அவை தகர்த்தெறியப்பட்டதே வரலாறாக இருக்கிறது. எனவே வரலாறு ராஜபக்ஷவை பிடித்தாட்டிக் கொண்டுதான் தொடர்ந்து இருக்கப்போகிறது.

✱

---

# கிறீஸ்பூதமும் ரத்தக் காட்டேரியும்

**ரங்கன்**
*(சென்னை, ராணிப் பேட்டையிலிருந்து)*

**அதன் நிறம் என்ன, உருவம் என்ன என்றும் தெரியாது. ஆனால் அது ‘‘தமிழ் காட்டேரி’’ என்பதை மட்டும் சரியாகத் தெரிந்துவைத்துள்ளனர். ‘‘இன்று போய் நாளை வா(ராய்)’’ என்று தமிழில் எழுதி வைத்தால் அதைப் படித்துவிட்டு காட்டேரி அந்த வீட்டைவிட்டுப் போய்விடுகிறதாம்.**

ஆயிரம்தான் சொல்லுங்கள், தமிழன் என்ற இனத்துக்குத் தனிக் குணமும் பண்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. செய்தித் தாள்களைத் திறந்து நூறு செய்திகளைப் படித்தாலும், அதில் ஒன்றிரண்டாவது தமிழ் இனத்தின் பெருமையைப் பறைசாற்றுவதாக அமைந்துவிடுவதே இந்த இனத்தின் சிறப்பு.

யாழ்ப்பாணத்திலும், நாட்டின் கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலும் 'கிறீஸ் பூதம்' கிளம்பி ஒரு கலக்குக் கலக்கி அடங்கிய நிலையில் தமிழகத்தில் இப்போது 'ரத்தக் காட்டேரி' பீதி ஆரம்பித்திருக்கிறது.

காதல், வீரம், கொடை ஆகிய மூன்றிலும் 'பேர் போனவன்' தமிழன். இந்தக் காதலிலும் நல்ல காதல், கள்ளக் காதல் என்று ரகம் பிரித்து அனுபவிப்பவன். காதல் எப்படியோ போகட்டும், நாம் 'ரத்தக் காட்டேரி' விவகாரத்துக்கு வருவோம்.

சென்னை ஜோலார் பேட்டையில்தான் முதலில் 'ரத்தக் காட்டேரி' தனது சேட்டையைக் காட்டியது. 'கிறீஸ் பூதம்' மாதிரியே இந்த 'இரத்தக் காட்டேரி'யும் ஒரு இடத்தில் தங்கமாட்டேன் என்கிறது. கட்டுரை எழுதப்படுகையில் ஆம்பூரில் அது மையம் கொண்டிருக்கிறது.

சுமார் 40 கிராமங்களில் ஒரே நாளில் வீடுகளில் உள்ள தட்டுமுட்டு சாமான்களையெல்லாம் எடுத்து வீசியிருக்கிறது. அதைச் செய்தது ரத்தக் காட்டேரிதான் என்று அரச அதிகாரிகள் எவரும் உறுதிப்படுத்தவில்லை. என்றாலும் உள்ளூர் மந்திர வாதிகள் சான்றுரைத்துள்ளனர். பரிகாரங்களையும் அறிவித்துள்ளனர்.

ஒவ்வொரு ஊரிலும் ஒரு டாக்டர், ஆசிரியர் இருக்கிறாரோ இல்லையோ மந்திரவாதியும் ஜோதிடரும் குறிசொல்பவரும் இருப்பார்கள். [illegible]

வீடுகளில் இரவு நேரத்தில் திடீரென்று சூறைக் காற்றைப் போல ஏதோ வீச, தட்டுமுட்டு சாமான்கள் எல்லாம் அலுமாரியிலிருந்தும் சமையலறை மேடைகளிலிருந்தும் கீழே விழுந்து சிதற, வீட்டிலிருப்பவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் தூக்கத்திலிருந்து விழித்து அலற வைத்து ஊரையே அலைக்கழிக்கிறதாம் இந்த 'இரத்தக் காட்டேரி'.

''வீதிக்கு வந்தால்தான் தெரிகிறது, அதே போல பல வீடுகளிலும் காட்டேரி நுழைந்திருக்கிறது'' என்று ஒருவரை ஒருவர் ஆசுவாசப் படுத்திக் கொள்கிறார்கள் மக்கள்.

உடனே வீட்டு வாசலில் மஞ்ச(ள்) தண்ணியால் வாசல் படிகளை மெழுகி, குங்குமம் மஞ்சள் வைத்து, எலுமிச்சை, பூசணிக்காயில் பூத உருவம் போன்று வரைந்து கட்டி தற்காப்பு ஏற்பாடுகளைச் செய்கின்றனர்.

அத்துடன் மந்திரவாதியை அழைத்து ஆடு, கோழி [illegible] பலி [illegible]. முத்தாய்ப்பாக "இன்று போய் நாளை வா'' என்று தமிழில் எழுதி திரிசூலம் படமும் வரைந்து வைக்கின்றனர். (இராவணன் மாதிரி சிவ பக்தன் இந்தக் காட்டேரி போலிருக்கிறது.)

இந்த இடத்தில்தான் தமிழனின் பகுத்தறிவு, பண்பாடு அனைத்தும் பட்டொளி வீசிப் பறக்கிறது!

அந்தக் காட்டேரி ஆணோ - பெண்ணோ, சிங்கிளோ - தம்பதியோ, சைவமோ - அசைவமோ தெரியாது.

அதன் நிறம் என்ன, உருவம் என்ன என்றும் தெரியாது. ஆனால் அது "தமிழ் காட்டேரி'' என்பதை மட்டும் சரியாகத் தெரிந்துவைத்துள்ளனர். "இன்று போய் நாளை வா(ராய்)'' என்று தமிழில் எழுதி வைத்தால், அதைப் படித்துவிட்டு காட்டேரி அந்த வீட்டைவிட்டுப் போய்விடுகிறது என்று இந்தத் தமிழன் நம்புகிறான்.

(காட்டேரியை இப்படி தினமும் ஏமாற்றினால் ஒரு நாள் கோபத்தில் அது வீட்டுக் கதவில் இருப்பதைப் படிக்காமலேயே ஏதாவது செய்துவிடப் போகிறது.)

தமிழ்நாட்டில் கல்வியறிவு வளர்ந்திருப்பது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். இல்லாவிட்டால் வீட்டுக்கு வீடு இப்படி எழுதுவார்களா? கிராம மக்கள் மட்டும் அல்ல, காட்டேரி கூடப்படித்திருக்கிறது பாருங்களேன்.

தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோள். எவ்வளவோ இலவசங்களை மக்களுக்குத் தந்து அவர்களை ''விலையில்லா தமிழர்களாக'' வளர்த்து வருகிறீர்கள். "இன்று போய் நாளை வா'' என்பதை நெடுஞ்சாலைத் துறை அல்லது உள்ளாட்சித் துறை மூலமாகவே ஒவ்வொரு வீட்டிலும் இலவசமாக எழுதிக் கொடுத்தால் என்னவாம்?

எதற்கெதற்காகவோ எல்லாம் தீக்குளிப்பேன் என்று ஆவேசப்படுபவர்கள், (தற்செயலாக உங்களுக்குப் புரியாமல் போனாலும், அண்ணா நூல் நிலைய விடயத்தில் கருணாநிதிதான் அப்படிச் சொன்னார்) குறைந்தபட்சம் ஜோலார்பேட்டை, ஆம்பூர் பகுதிகளில் பகுத்தறிவுப் பிரசாரம் செய்தால்தான் என்ன? சும்மாதானே இருக்கிறார்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா – கோ

# அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் –

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசியுரை



வவுனியா நகரத்தில் கோயில்குளம் என்ற கிராமத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மனித நேயத்துடன் வாழ்வதற்கு ஆன்மீக வாழ்க்கை இன்றியமையாதது. இதனை எமக்குத் தருவது சமயமும் சமயம் சார் ஆலயங்களும். இதனை அடிப்படையாகக் கொண்டே ஆலய விழாக்கள் அமைந்துள்ளன. அந்த வகையில் மகோற்சவத்தில் சிறப்பு பெறுகின்ற அழித்தலுக்குரிய விழாவாக தேர்த்திருவிழா அமைந்துவருகிறது. தத்துவார்த்த சிந்தனைகளைப் பெருக்கும் இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இறையாசி பெருக பிரார்த்திப்போமாக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்.

### குருக்களின் ஆசி உரை



எல்லாம் வல்ல அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேஸ்வரர் சுவாமியின் பாத கமலங்களைப் பணிந்து பாலில் நெய்யாக இருக்கும் இறைவனை ஆன்மாக்கள் வழிபடும் பொருட்டு வவுனியா நகரின் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கோவிற்குளப்பதியில் அருளாட்சி செய்துவருகின்ற அகிலாண்டேஸ்வரப்பெருமானுக்கு மஹோற்சவம் என்று சொல்லப்படுகின்ற பெருவிழாவிலே ரதோற்சவம் தேர்த்திருவிழாவில் இறைவனின் ஐந்தொழில்களில் அழித்தல் தொழிலை உணர்த்தும் உற்சவத்தை கண்டுகளித்து ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை நீக்கி இப்பூவுலக மக்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்றுவாழ எம்பெருமானை என்றென்றும் வணங்கி எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிவஸ்ரீ. இரகுநாத. கமலேஸ்வரக்குருக்கள் - திருக்கோவில் பிரதமகுரு

### அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



வவுனியா நகரத்தில் கோயில்குளம் என்ற கிராமத்தில் எழுந்ருளி அருளாட்சி புரியும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிாண்டேஸ்வரர் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா மிகச் றப்பாக நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

அனைவரும் சகல செல்வங்களும் பெற்றுவாழ ம்பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ருமதி இமெல்டா சுகுமார், அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்

### அவனி நலன்காத்தருள அகிலாண்டேஸ்வரர் தேரேறி வருகிறார்



வவுனியா கோவில்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்டவரப்பெருமான் சிவசக்தி வடிவம் தாங்கி அழகிய திருத்தேரில் ஆரோகணித்து அன்பர்களின் மல பந்தங்களை நீக்க நல்லருட் பேற்றினை அருள சங்காரத்தொழிலை நிறைவேற்ற பவனி வருகின்ற திருக்காட்சி சிவனருள் பொழியும் கண்கொள்ளாக்காட்சியாக அமைந்துவிடுகின்றது.

வயலும் வயல் சார்ந்த மருதநிலப்பரப்பில் கோயில் கொண்டருளி வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் ஈயும் ஈசனை வணங்கினால் எல்லாப்பேறும் எல்லோருக்கும் கிடைத்துவிடும். இறைவனது திருவடிப்பேறு கிடைக்குமானால் மனிதப்பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே என்றார் அப்பரடிகள். கிடைத்தற்கரிய பிறவி எடுத்த நாம் இறைவனை வணங்குவோம். இன்னருள் பெறுவோம். அகிலாண்டேஸ்வரனின் திருவருள் அவனியெங்கும் பெருக பிரார்த்திப்போமாக

வர்ணனைக்கலாநிதி மதுரகவி.காரை.எம்.பி. அருளானந்தன்
பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்

## விளம்பர அனுசரணை




சாய்ராம் கோல்ட் ஹவுஸ்
உங்கள் எண்ணம்போல் புதுப்புது அழகிய டிசைன்கள்
22 கரட் தங்கநகைகளை ஓடருக்குச் செய்துதரப்படும்
32, மில்றோட், வவுனியா.
தொ.பே: 024 4923594



பிரசித்தி பெற்ற நகைத் தெரிவுகளுக்கும் ஓடர் நகைகளை உங்கள் எண்ணம்போல் புதுப்புது அழகிய டிசைன்களில் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள
நர்மதா நகைமாடம்
169, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
அரச அங்கீகாரம் பெற்ற நாணய மாற்றுநர் - கொழும்பு பெறுமதிக்கு வெளிநாட்டு நாணயங்கள் மாற்றிக் கொடுக்கப்படும்.



லாவண்ஜா ஜுவல்ரி
22 கரட் தங்கநகைகளை குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் ஓடருக்குச் செய்துதரப்படும்
இல.60, தர்மலிங்கம் றோட், வவுனியா. தொ.பே: 024 222 2484



ரவி ஜுவல்ரி
22 கரட் தங்கநகைகளை குறித்த தவணையில் புதிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் ஓடருக்குச் செய்துதரப்படும்
இல.20, மில் றோட், வவுனியா. தொ.பே: 024 222 1038



ஆதி திருமண மண்டபம்
வவுனியா நகரத்திலிருந்து 1Km அளவில் பிரதான வீதி (ஹொரவப்பொத்தான, திருகோணமலை வீதி) யில் அமைந்த (600) அறுநூற்றிற்கும் மேற்பட்ட ஆசனங்களை உள்ளடக்கிய விஸ்தீரண திருமணமண்டபம். சைவ, அசைவ உணவுடன் கூடிய அறுசுவை உணவும், முத்துமணவறை, பூமணவறை, குருக்கள், மங்களவாத்தியம், போட்டோ வீடியோ, கோலம் மற்றும் திருமண கார் போன்ற சகல வசதிகளையும் உள்ளடக்கிய எழில் மிகு தோற்றமுடைய திருமண மண்டபம். திருமணத்தைத் தொடர்ந்து நடைபெறும் திருமணப்பதிவுகளையும், இரவு விருந்துபசாரங்களையும் தங்களின் வசதிகளுக்கேற்ப சிறப்பாக ஒழுங்குகள் செய்துதரப்படும். (திருமணத்தைத் தொடர்ந்து நடைபெறும் உபசாரங்களுக்குக் கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது) வாகனத்தரிப்பிடமும் உள்ளது.
ஹொரவப்பொத்தான வீதி, சின்னப்புதுக்குளம், வவுனியா.
தொ.பே: 024 2221153, 024 2221344, 077 1372137



கரன் ஜுவல் ஹவுஸ்
புதுப்புது அழகிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட் தங்கநகைகளை ஓடருக்குச் செய்துதரப்படும்
17 A, மில்றோட், வவுனியா.
தொ.பே: 024 222 5489



பழமுதிர்சோலை
பல்பொருள் வாணிபம்
சந்தை உட்புறம்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

WESTERN UNION MONEY TRANSFER
கோபி ஏஜென்சி
Western Union
33, மில்றோட், வவுனியா.
கிளை: பரந்தன் றோட், புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு
தொ.பே: 024 222 2411



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோயில்குளம் ண்டேசுவரர் திருக்கோ

# 04.04.2012







## வவுனியா கோயிற்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலின் தலவரலாறு

(அருள்மிகு மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் பூசகர் பரம்பரை யில் அநாதியாக விளங்கிய பட்டர் மரபில் வந்தவரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூணி அம்மன் தேவஸ்தானத்தின் பரம்பரைத் தர்மகர்த்தா வாகவும், ஆதிப்பூசகராகவும் விளங்கிய நயினாப்பட்டரின் வழிவந்த ஸ்ரீமான் முத்துக்குமாருவின் மகனான காசிப்பிள்ளை ஆறுமுகம் அவர்களின் ஐந்தாவது தவப்புதல்வராக உதித்தவரும், வவுனியா கோயில்குளம் ஸ்ரீ அகிலாண் டேஸ்வரி உடனுறை அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலின் பரம்பரைத் தர்மகர்த்தா வாகவும், கௌரவ செயலாளராகவும் விளங்கும் உயர் திரு. ஆ. நவரெத்தினராசா அவர்கள் எழுதியது இத்தலவரலாறு).

வவுனியா மத்திய பஸ்நிலையம், புகையிரதநிலையம் இரண்டு பாதைவழியும் வந்திறங்கியவர்கள் அதிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் வீதியில் முதலாம் கட்டையை அடைந்தால் (இத்தூரம் நடந்து செல்லலாம்) தென்படுவது மூன்று பாதைகள் கொண்ட முச்சந்தி இதிலிருந்து பிரிந்து செல்வது தான் அந்தத் தவப்பேறு பெற்ற கோயில் குளக் கிராமம். இந்தக் கிராமத்தின் முகப்பிலே தென்படுவது தான் அண்டசராசரங்களைத் தன் வயப்படுத்தும் அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில்.

ஆலயமுகப்பில் வழிப்பிள்ளையாராகக் காட்சி கொடுத்துக்கொண்டு இருப்பவர் சித்தி விநாயகர். அந்த ஆலயம் தான் அங்கு வாழ்ந்த மக்களின் மனதைக் குடிகொண்டு இன்று வானளாவிய தூபிகளையும் மாடங்களையும் கொண்டு பார்ப்போர் பரவச நிலையடையும் வண்ணம் அருள்பாலிக்கும் அருள் மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலாக விளங்குகின்றது. முடிக்குரியவர்களால் அன்றைய கால கட்டத்தில் சைவ ஆலயத்துக்காக வழங்கப்பட்டது இந்தக் காணி. காணியின் விஸ்தீரணம் 3 ஏக்கர் 6 பேர்ச்சாக இருந்து. தற்போது 2 ஏக்கர் 6 பேர்ச்சாக உள்ளது. இந்தக் காணியில் 1956 ஆம் ஆண்டு அளவில் தற்போது வழிபட்டு வரும் விநாயகரை ஸ்தாபித்து ஆராதித்து வந்துள்ளார்கள். இவர்களில் சின்னத்தம்பி ஐயா அவர்கள் தான் ஆலயத்தைப் பராமரித்தும் பூசை செய்தும் வந்துள்ளார் (ஆலய குடமுழுக்கு வரை).

சித்திவிநாயகர் பரிபாலனத்தை 1987 ஆம் ஆண்டளவில் பொறுப்பேற்ற நாங்கள் இந்தப் பணியைப் பரிசீலனை செய்து '' சிவாலயத்திருப்பணி என்றபோதே பின்னடைவு எய்திய உறுப்பினர்களை விடுத்து. தனிமனித முயற்சிதான் இதற்கு வேண்டும் என்ற பேராவலுடன் அடியேனும் மறைந்த திரு.நா. இராமநாதன், திரு. இரா. சண்முகம், திரு.ஆறுமுகம் உமாதேவன் ஆகியோர் முன்னிற்க அடியார்கள் ஊக்கமும் ஒத்தாசையும் வழங்கிவர. காஞ்சிப் பெரியவரின் பூரண ஆசீர்வாதத்தின் மத்தியில் 18.08.1989 அதிகாலை 4 மணியளவில் எனது மூத்த சகோதரரும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத்தலை வரும், தீவுப்பகுதி உதவி அரச அதிபருமான ஆறுமுகம் தியாகராசா அவர்களால் சங்குஸ்தாபனம் செய்விக்கப்பட்டது. இந்தப்பணி சிறப்புற நடந்துவரும் நிலையில் 1993 ஆம் ஆண்டு மார்கழி மாதம் காஞ்சிப் பெரியவரின் ஆஞ்ஞைப்படி காசியில் இலிங்கம் பெற்று வரும்போது 1994 ஆம் ஆண்டு தை மாதம் 6 ஆம் திகதி வாரணாசியில் நா. இராமநாதன் அவர்களுக்குச் சிவபதப் பேறு வாய்க்கப் பெற்றது. அதைத் தொடர்ந்து திருப்பணி சிறப் பாக நாளுக்கு நாள் புதுப்புது மெருகுடன் நடைபெற்று வந்தது. இதற்கான மற்ற மூலவிக்கிரகங்களை தமிழ்நாடு ஸ்ரீரங்கம் பழனியப்பன் ஸ்தபதியாரும், உற்சவ விக்கிரகங்களைச் தமிழ்நாடு சுவாமிமலை தேவசேனாபதி ஸ்தபதியாரும் தங்கள் கைவண்ணங்களைச் சிலைவண்ணங்களாக வார்த்துத் தந்தார்கள். அவையாவும் மனதைக் கொள்ளைகொள்ளும் பொலிவு கொண்டவை இவற்றை எல்லாம் நாங்கள் எப்படிச் செய்கின்றோம் என்று கூட நாங்கள் இடைக்கிடை வியப்படைவது உண்டு. எல்லாம் அவனருள்தான் என்று சாந்தி அடைவோம். இவற்றை நானும் இந்தக்கோயிலின் தர்மகத்தாவும் தலைவருமான உயர் திரு. இரா. சண்முகம் J.P. அவர்களுமாக இந்தியாவுக்குச் சென்று எடுத்து வந்தோம். இவற்றுக் கான பூரண ஒத்துழைப்பை வவுனியா அரச அதிபர்களாக இருந்த திரு. லங்காநேசன், திரு. தில்லைநடராசா, திரு.கே.கணேஷ் ஆகியோரும், இந்துக் கலாசார அமைச்சராக இருந்த கௌரவ பி.பி. தேவராஜ். அமைச்சுச் செயலாளராக இருந்த கா. தயாபரன், தற்போதைய கலாசார அமைச்சின் செயலாளர் திரு. யோகநாதன் இந்து சமயத்திணைக்களப் பணிப்பாளர் திரு.க.சண்முகலிங்கம், உதவிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், திறைசேரி அதிகாரி சண்முகலிங்கம் போன்றோர் பெருந்துணை புரிந்தார்கள். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து குடமுழுக்கைச் செய்வதற்காக கும்பாபிஷேகக் குழு ஒன்றை, சிவனடி யார்களையும், திருப்பணிக்கு வாரி வழங்கிய கொடை வள்ளல்களையும், அனுபவமிக்க ஆலயபரிபாலன சபையினரையும், தத்துவநூல்களைக் கற்றுணர்ந்த கல்விமான்களையும் ஒருங்கு கூட்டி அமைத்து அதன்படி மகாகும்பாபிஷேக பிரதம குருவாக நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ் வராக் குருக்களைக்கொண்டு கடந்த 01.05.1996 இல் ஆவர்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகத் தையும் இனிதே நடத்தி முடித்தோம். இவையாவும் '' முன்னவன் முன்னின்றால் முடியாதது ஒன்றுமில்லை'' என்பது போல் கருணைக்கடலாம் சித்தி விநாயகர் பேரருளோடும், அம்மையப்பனின் கருணைக் கடாட்சத்தாலும் தான் இனிது நிறைவெய்தின என்பதில் எமக்கு எள்ளளவேனும் சந்தேகமில்லை.

எனக்குப் பக்கபலமாக இருந்த என் உடன்பிறவா அண்ணர் இரா. சண்முகம் ஜே.பி. அவர்களும் உடன்பிறப்பான திரு. ஆறுமுகம் உமாதேவனும், மறைந்தும் மறவாமல் என்னிடத்தே வந்து நினைவூட்டி வரும் திரு.நா. இராமநாதனும் அவர் குடும்பத்தினரும், நிலையங்கள் எடுக்கும்போது ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து ஊக்கமளித்த திரு. சின்னத்தம்பி ஐயா இவர்கள் துணையோடு இந்தச்சிவன்கோயில் திருப்பணியைத் தொடர ஒரு கைகொடுப்பதை மற்றக்கை கூடத்தெரியக் கூடாது என்ற மனநிலையில் வாரிவழங் கினார்கள் புண்ணிய சீலர்கள். அந்த நிதியில் உயர்ந்தது தான் இந்த சிவாலயம், இதை இங்கு வரும் அடியவர்கள் யாவரும் அறிவார் கள். அப்படி அவர்கள் வழங்கிய நிதியைக் கொண்டு ஆலயத்தை அமைத்து, தற்போது காலப்பூசை செய்வதற்கான ஒழுங்குகளும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் துணையுடன் மேற்கொண்டுள்ளோம். ஏனைய திருப்பணிகள் (கோபுரங்கள், தீர்த்தம், திருத்தேர்கள், உள்வீதிக் கூரைத் தள நிர்மாணங்கள், நால்வர் சந்நிதி உட்பட அறுபத்துநால்வர் திருவுருவச்சிலைப் பிரதிஷ்டை, வாகனசாலை நிர்மாணம், பூந்தோட்டம், அமுதசுரபி மண்டபம், திருக்கல்யாண மண்டபம், திருமுறை மண்டபம்) பற்றியும் தங்கள் முன் விரைவில் அறியத் தருவோம். தாங்கள் அவற்றிற் பங்குகொண்டு நாம் பிறந்த பிறப்பின் பயனை உணர்ந்துசெயற்படுவீராக. (1996 ஆம் ஆண்டு 'சிவதத்துவ மலரில்' வெளியிடப்பட்டது)

(சி/311) (2-6-7)



காலை 8.00 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதி காலை 9.00 மணிக்கு ஆரோகணிப்பார்

மலர் அமைப்பு:- கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம்

அடிக்கடி கோபப்படாதே என்று சொல்கிறீர்களே. அது எப்படி முடியும்? என்று சொல்லிக் கோபப்படுபவர்கள் சிலபேர் உள்ளனர். இது நியாயமான கோபம் தான். ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொள்வதற்கு முதலில் இந்தக் கோபத்தைப் பற்றி சொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும்.

கோபம் வருவது இயற்கை. அதைப் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்துதான் நல்லது செய்வதும் கெடுதல் செய்வதும். சரி இன்றைக்கு அறிவியல் ரீதியாக அந்தக் கோபத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோம். அதாவது அறிவியல் பார்வையில் கோபத்தைப் பற்றி ஓர் ஆராய்ச்சி.

இயல்பூக்கம் என்பதில் கோபமும் ஒன்று. ஒரு சிறந்த நோக்கத்தோடு கோபத்தை இயற்கை எமக்கு கொடுத்திருக்கிறது. அதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். விஞ்ஞானத்தைப் பொறுத்த வரைக்கும் கோபம் என்பது ஒரு சக்தி. ஒரு தற்காப்புக்கு உபயோகப்படுத்துவதற்கு உயிரினம் எல்லாவற்றுக்கும் இயற்கை இந்தக் கோபத்தைக் கொடுத்திருக்கிறது. முள்ளம் பன்றி சிலிர்க்கிறது, பாம்பு சீறுகிறது, தேள் கொட்டுகிறது, புலி உறுமுகிறது, சிங்கம் கர்ச்சிக்கிறது, கழுதை பின்னங் காலை உதறுகிறது. இவையெல்லாம் கோபம்தான். எதற்காக இந்தக் கோபம்- தற்காப்புக்காக.

எறும்பில் இருந்து மனிதன் வரைக்கும் சகல உயிரினமும் அதன் பாணியில் கோபத்தைக் காட்டிக் கொண்டுதான் இருக்கின்றன. கழுதை உதைக்காது, மாடு முட்டாது, தேள் கொட்டாது, புலி பாயாது என்றால் இந்த உலகத்தில் எல்லாம் அழிந்து போய்விடும் இயற்கையின் பாதுகாப்பு விதிப்படி அது தனது முறைப்படி கோபத்தைக் காட்டித்தான் தீர வேண்டும். தேள் மிகவும் சாது, ஒருத்தரையும் கொட்டாது என்றால் அது இறப்பர் தேள் என்று அர்த்தம்.

மற்றைய உயிரினங்களுக்கும் மனிதனுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. இவனுக்கு ஆறாவது அறிவு ஒன்று இருக்கிறது. அதுதான் பகுத்தறிவு. அதனால் இவன் தற்காப்புக்காக மட்டும் இல்லாமல் வேறு ஒரு காரணத்துக்காகவும் கோப உணர்ச்சியைப் பக்குவமாகப் பயன்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறான்.

நியாயத்துக்காகக் கோபப்படுங்கள். நீதியை நிலைநாட்டுவதற்காக கோப உணர்ச்சியைப் பயன்படுத்துங்கள். மகான்களுடைய கோபம், காந்தியடிகள் சத்தியாக்கிரகம், கடவுள் நெற்றிக் கண்ணைக் காட்டினார் என்று சொல்கிறோம். அதெல்லாம் இந்த வகையைச் சேர்ந்த கோபம். கோபம் ஒரு சக்தி, ஊற்று என்று விஞ்ஞானம் சொல்கிறது. அதற்கு அடையாளம் தெரியுமா? நெஞ்சு படபடக்குது . உதடு துடிக்கிறது பல் நற நறவென்று கடிக்கிறது. கண் சிவக்கின்றது . இரத்தம் வேகமாக ஓடுகின்றது. மூச்சுத் திணறுகின்றது உடம்பு முழுவதும் அந்தச் சக்தியின் வெளிப்பாட்டைத் தாங்க முடியாமல் நடுங்குகின்றது. சராசரி மனிதனுக்கு கோபம் வெளிப்படும் விதம் இப்படி. மகான்கள் கோப சக்தியை இப்படி வெளிப்படுத்துவதில்லை. அது நெற்றிக் கண்ணால் வரும். சத்தியாக்கரகமாக வரும். தண்ணீரை அணைகட்டி வெளிப்படுத்துவது போன்று நிர்மாணசதியாக அது வெளியே வரும். நாம் கோபத்தை வெறுப்புணர்சியாக மாற்றி வருகிறோம். அதனால்தான் கோபத்தைப் பாவம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள் .

கோபமும் வெறுப்பும் சேர்ந்தால் பாவம். கோபமும் அன்பும் சேர்ந்தால் புண்ணியம். அநீதி என்ற பெயரில் கோபம் வருகிறது. அதனுடன் அன்பு என்கிற உஷ்ணத்தைச் சேருங்கள். அதுதான் சத்தியாக்கிரகம். அந்த அற்புதத்தை செய்து காட்டியவர் காந்தி. அதனால் கோபத்தை வெறுக்காதீர்கள், அதைப் புரிந்து கொள்ளுங்கள்.

கோபமும் அன்பும் சேர்ந்தால் புண்ணியம். அதனால் தான் பல தம்பதிகள் புண்ணியம் செய்த தம்பதிகளாக இருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தர் கோபம்; இன்னொருத்தர் அன்பு.

ஒருத்தர் எதைக் கொடுத்தாலும் அர்த்தம் இல்லாமல் கோபப்படுவார். அவருக்கு மற்றவர்கள் 'சிடு மூஞ்சி' என்று பெயர் வைத்து விட்டார்கள். ஒரு நாள் அவரைத்தேடி ஒருத்தர் வந்தார். 'இந்த ஊரில் சிடு மூஞ்சி இருக்காமே! யார் வந்து எதைக் கேட்டாலும் எனக்குத் தெரியாது, எனக்குத் தெரியாது என்று கத்துமாம், அதை உங்களுக்குத் தெரியுமா?'' என்று விசாரித்தார் அந்தப் பெயருக்குரியவரிடம். அவர் கோபமாகத் தெரியாது என்றார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# இளைஞர்கள், யுவதிகளுக்கு தொழில் வழங்கும் சதாவதானி

(கடந்த வாரத் தொடர்ச்சி)

சமூக சேவையாளராகத் தெரிவு செய்யப்பட்ட இளைப்பாறிய தமிழ் ஆசிரியை திருமதி பொன்னம்மா இரத்தினசோதி தொடர்ந்து தான் பிறந்து வளர்ந்த பிரதேசத்தின் பிள்ளைகளுக்கு கல்விப் பணியாற்றுவதற்காக பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்குத் தொழில் மாற்றம் பெற்று வந்து 1996 ஆம் ஆண்டு வரை 26 வருடங்கள் சிறந்த தமிழாசிரியராகக் கடமையாற்றி தமிழுக்கும், சைவத்துக்கும் அளப்பரிய தொண்டாற்றி பாடசாலை ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.




கடந்த ஆண்டு நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் சதாவதானி சிக்கனகடனுதவு கூட்டுறவுச் சங்கத்தலைவர் கே.தங்கராசா அங்கத்தவர்களுக்கான உச்சக்கடன் எல்லை ஒரு லட்சம் ரூபாவாக அதிகரித்துள்ள தீர்மானத்தை வாசிக்கிறார்.

**கர்ணன்**

ஆசிரிய பணியிலிருந்து ஓய்வுபெற்றாலும், சைவத்துக்கும், தமிழுக்கும் இவர் ஆற்றிவரும் பணி தொடர்ந்து செல்கிறது. அத்துடன் இவர் பொதுப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி பல சமூகத் தொண்டுகளைப் புரிந்து வருகின்றார்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக, செயற்குழு உறுப்பினராக, அறநெறிப் பாடசாலை அதிபராக, சனசமூக நிலைய செயற்குழு உறுப்பினராக, காப்பாளராக மேலைப் புலோலி ஆலடிப் பிள்ளையார் கோயில், மாயக்கை சித்தி விநாயகர் கோயில், புலோலிமத்தி மகா வேலாந்தெனிப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றின் நிர்வாகங்களில் முக்கிய உறுப்பினராகவும் இருந்து தான் சார்ந்த பிரதேசத்துக்கு உத்தம பணியாற்றி வருகின்றார்.

சமூக சேவையாளர் விருதுக்கு சங்கத்தால் முதன் முதல் தெரிவான பெண்மணி திருமதி பொன்னம்மா இரத்தினசோதி. அந்த வேளை யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவராக இருந்த க.சிவசுப்பிரமணியம் பொன்னாடை போர்த்தி, சான்றுப் பத்திரம், நினைவு விருது என்பன வழங்கிக் கௌரவித்தார்.

இவரைத் தொடர்ந்து இன்னும் பல சமூக சேவையாளர்கள் அடுத்தடுத்த ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் வைத்து கௌரவிக்கப்பட்டனர். சமூக சேவையாளர்களைத் தொடர்ந்து சங்க எல்லைப் பரப்புக்குள் வாழும் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். கலைஞர் கௌரவிப்பு வரிசையில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல சிற்பக் கலைஞர் கலாபூஷணம் கோ.வேலுப்பிள்ளை 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கௌரவிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து கடந்த வருடம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் காத்தவராயன் கூத்து நாடகத்தில் புகழ்பெற்ற கலைஞரான சோ.ஜெயவசிகரன் கௌரவிக்கப்பட்டார்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கத்தின் 24 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த வருடம் ஜூன் மாதம் 19 ஆம் திகதியும், விசேட பொதுக்கூட்டம் இதே ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதியும் நடைபெற்றன.

இந்தக் கூட்டத்தில் விபத்துநிதி, மகப்பேற்று நிதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த 3 ஆயிரம் ரூபாநிதி உதவியை 5 ஆயிரம் ரூபாவாகவும், அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் மொத்தக்கடன் எல்லை 75 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டது. அத்துடன் செயற்குழுக் கூட்டங்களுக்கு வருகை தரும் செயற்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 50 ரூபா அலவன்ஸ் கொடுப்பனவு 100 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டது. சங்கத் தலைவருக்கு விசேட படியாக மாதாந்தம் 500 ரூபா அலவன்ஸ் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

> செயற்குழுக் கூட்டங்களுக்கு வருகை தரும் செயற்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 50 ரூபா அலவன்ஸ் கொடுப்பனவு 100 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டது. சங்கத் தலைவருக்கு விசேட படியாக மாதாந்தம் 500 ரூபா அலவன்ஸ் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் மொத்தக் கடன் எல்லை ஒரு இலட்சம் ரூபாவாக மேலும் அதிகரிக்கப்பட்டது. புதிய அங்கத்தவர் பிரவேசப்பணமும் 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

சங்கத்தின் மேல் மாடிக் கட்டடத்துக்கு ஜன்னல்கள், கதவு,சீற்கள் என்பன பொருத்தப்பட்டு நிலத்தையும் செப்பனிடுவதற்கு இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தினால் கயிறு உற்பத்தியை இயந்திரப் பொறி முறைமூலம் ஆரம்பித்து கிராமத்து, இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்குவது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் சரியாக ஆராயப்பட்டது. கூட்டத்துக்குத் தலைமை வகித்த கே.தங்கராசா கருத்துத் தெரிவிக்கையில்; மின்பொறி முறையிலான கயிறு உற்பத்திக்கு பத்து லட்சம் ரூபா முதலீடு தேவை எனவும் இந்தப் பணத்தை வங்கியில் சுய தொழில் கடனாகப் பெறலாம் எனவும் கருத்துக் கூறினார். கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இது பற்றிய சாதக, பாதகங்களைச் சபையோருக்கு விளக்கினார். முன்னாள் தலைவர் செ.விக்னேஸ்வரனும் இந்த விடயம் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்தார். இறுதியில் கயிறு உற்பத்தி பற்றிய சாத்தியக் கூற்று அறிக்கை பெற்று அதனைப் பொதுச்சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும், கொள்கையளவில் பத்து லட்சம் ரூபாவை வங்கியிலிருந்து கடனாகப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு, அவர்கள் 18 வயதை அடையும் போது நிதி ஒன்றை வழங்குவதற்காக சங்கத்து நிதியிலிருந்து ஆயிரம் ரூபாவும், அங்கத்தவரிடம் இருந்து ஆயிரம் ரூபாவும், சங்கத்திலிருந்து ஆயிரம் ரூபாவும் பெற்று வங்கியில் வைப்பிலிட்டு, குறித்த வயது வரும் போது அந்தப்பிள்ளைக்கு வழங்கலாம் எனவும் இந்தக் கூட்டத்தில் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்துக்கென வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வது தொடர்பாக அடுத்தடுத்த கூட்டங்களில் முடிவுகள் எடுக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கம் நடத்திய பொது அறிவுப் போட்டியில், வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இந்தக் கூட்டத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தின் போது வெளியிடப்பட்ட 2009-2010 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில், இந்த ஆண்டுக்கான இலாபமாக 4 இலட்சத்து 3 ஆயிரத்து 262 ரூபாவைப் பெற்றிருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு,ஏப்.4

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றுடன் மிரிஹான பகுதியில் வைத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நபருக்கு நவ சிலை உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திர துப்பாக்கியை விற்பனை செய்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இது தொடர்பில் சரத் மனமேந்திரவிடம் விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பேரிடர் சேவைகள் அமைச்சு அலுவலக திறப்பு விழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்கின்றார்.

## 50 மில்லியன் ரூபா தேவாலய விருத்திக்கு

கொழும்பு,ஏப்.4

கிறிஸ்தவ தேவாலயங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசு 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக பிரதமர் தி.மு. ஜயரத்ன தெரிவித்தார்.

கல்வாரி தேவாலயத்தின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன் தினம் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பௌத்த விகாரை புனரமைப்பு நடவடிக்கைகள் போன்றே ஏனைய சமயங்களின் அபிவிருத்திக்கும் புனரமைப்புக்காக அரசு நிதி ஒதுக்கியுள்ளது என்று அவர் கூறினார்.

சகல சமயங்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி நாட்டில் நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிப்பதே அரசின் இலக்காகும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## அமெரிக்க தூதரகம் கவலை

### தொழிற்சாலையை மூடியதற்கு

கொழும்பு,ஏப்.4

சொத்துக்களை புனரமைத்தல் சட்டத்தின் கீழ் அரசால் பொறுப்பேற்கப்பட்ட செவனகல சீனி தொழிற்சாலை வளாகத்தினுள் அமைந்துள்ள பழங்கள் பதனிடும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளமைக்கு கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் கவலை வெளியிட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை பற்றிய நடப்பு விடயங்கள் குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தன்னிடம் விசாரித்ததாக செவனகல சீனி தொழிற்சாலையின் முன்னாள் தலைவர் தயா கமகே தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலை எப்போது மீண்டும் திறக்கப்படும் என்று தூதரகம் கேட்டதாக அவர் குறிப்பிட்டார். இந்தப் பழங்கள் பதனிடும் தொழிற்சாலை யூ.எஸ்.எயிட் நிதிப்படுத்தப் பட்டதனால்தான் அமெரிக்கா இது தொடர்பில் அக்கறை காட்டுவதாக அவர் தெரிவித்தார்.

செவனகல தொழிற்சாலை வளாகத்தினுள் இந்த பழங்கள் பதனிடும் தொழிற்சாலை அமைந்துள்ளமையினால் ஊழியர்கள் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படுவதில்லை.

இதனாலேயே தொழிற்சாலை வலுக்கட்டாயமாக மூடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

# மொத்த வெளிநாட்டுப் பொருள்களையும் இலங்கையர் புறக்கணிக்க வேண்டும்

## அமைச்சர் பஸில் ஆவேசம்



அமெரிக்க உற்பத்திப் பொருள்களை மட்டுமல்ல ஏனைய அனைத்து நாடுகளின் உற்பத்திப்பொருள்களின் பாவனையையும் நாம் தவிர்க்கவேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவா மாநாட்டில் இலங்கை மீதான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளை நாம் எதிர்க்கவில்லை. சர்வ தேசத்துடன் ஒத்துழையாமல் அதனை எதிர்த்துக்கொண்டு எம்மால் தனித்து வாழமுடியாது

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள பல விடயங்களை நாம் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அத்துடன், அவற்றுள் சில சிபாரிசுகள் முடிவடையும் நிலையிலும் உள்ளன.

எனவே, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பிலோ அல்லது நாட்டில் இடம்பெற்று வருகின்ற நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பிலோ நாம் புதிதாக சொல்வதற்கோ, செய்வதற்கோ ஒன்றுமில்லை.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால் நாம் அமெரிக்க உற்பத்திப் பொருள்களை மட்டுமல்ல ஏனைய அனைத்து நாட்டு உற்பத்திப்பொருள்களின் பாவனையையும் தவிர்க்கவேண்டும். அது மட்டுமின்றி, ஆடம்பரப் பொருள்களின் பாவனையையும் குறைத்துக்கொள்ள வேண்டும். இந்த விடயத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளுடன் நாம் பகைமை உணர்வையோ அல்லது வைராக்கியத்தையோ ஏற்படுத்திக்கொள்ளத் தேவையில்லை.

எமது நாட்டிலுள்ள குறைகளையும் ஏனைய நாடுகளிடம் உள்ள குறைகளையும் இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்து நாடுகளுக்கிடையிலான நட்புறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஜெனிவா விவகாரத்திற்கும் உள்நாட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் எதுவித சம்பந்தமுமில்லை. நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நாம் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

குறிப்பாக மும்மொழிக் கொள்கை, மீளக்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இன்னோரன்ன பல விடயங்களை நாட்டில் சாதகமான முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம் - என்றார். (ச)

## இன ரீதியான சிந்தனையிலிருந்து அரசு முழுமையாக விடுபட வேண்டும்

### ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.4

இன ரீதியான சிந்தனைகளிலிருந்து அரசு முழுமையாக விடுபட வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லிணக்கம் தொடர்பில் அரசு உண்மையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும்

நிலையான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு ஆளும் கூட்டணி கட்சிகளுக்கு இடையில் பொதுவான இனக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்கள் வெளியிட்டு வரும் மாறுபட்ட கருத்துக்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு வருகின்ற போதிலும், நீண்டகாலமாக அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு எதிராக உடனடியாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.- என்றார். (ச)

## முன்னாள் போராளிகளுக்கு தொழில் வழங்க ஆர்வம்

தொழிற்பயிற்சிகளுடன் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குவதில் வணிக நிறுவனங்கள் ஆர்வம் காட்டியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

புலிகளின் முன்னாள் போராளிகள் 105 பேரை தனியார் நிறுவனமொன்று மேசன்துறையில் பயிற்சியளித்துள்ளது என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சந்தன ராஜகுரு தெரிவித்தார். இராணுவத்திடம் சரணடைந்த 12000 முன்னாள் போராளிகளில் 11000 இற்கும் அதிகமானோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் ஜீவனோபாயத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு புனர்வாழ்வு அதிகாரிகள் தொடர்ந்தும் உதவியளிக்கவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## காலியில் ரின்மீன் தொழிற்சாலை

கொழும்பு,ஏப்.4

இலங்கையின் முதலாவது அரச ரின்மீன் தொழிற்சாலை காலி மீன்பிடித்துறை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

84 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலையில் முதற்கட்டமாக நாளொன்றுக்கு 10 ஆயிரம் ரின்மீன்கள் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டதன் மூலம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெற்கில் மாசித் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (ச)

# கஞ்சா வளர்ப்போர் அரசியல்வாதிகளானதால் நாடு அதலபாதளத்தில்

### இதனாலேயே நாடு அதலபாதாளத்துக்குச் செல்கிறது என்கிறார் ஹர்ஷா டி சில்வா எம்.பி.

கொழும்பு,ஏப்.4

போதைப்பொருள் கடத்துவோர், கஞ்சாச்செடி வளர்ப்போர் அரசியல்வாதிகளாகும் போது நாடு அதல பாதாளத்துக்குத்தான் செல்லும் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா தெரிவித்தார்.

3 பேர் கொண்ட குடும்பம் ஒன்று 7500 ரூபா மாத வருமானத்துடன் வாழ முடியும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்த கருத்துப் பற்றி விமர்சித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

[illegible] வருமானத்துடன் வாழ முடியும். நாளாந்த வருமானம் 128 ரூபாவிலும் குறைவாக உள்ளோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவராக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் 83 ரூபாவுடன் வாழ முடியும் என்ற அமைச்சரின் கருத்து அர்த்தமற்றது.

2500 ரூபா மாத வருமானத்தில் உணவு விலைகள் ஏறிவரும் நிலையில் வைத்தியச் செலவு, மின்கட்டணம், பாடசாலைச் செலவு, போக்குவரத்துக் கட்டணம் என்பவற்றையும் செலுத்தி எவ்வாறு வாழ முடியும் என நாட்டுக்கு விளக்க வேண்டியது அமைச்சரின் பொறுப்பு" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுய மதிப்பீடல்

③

நல்ல பானையின் கேலியை நினைத்து ஓட்டைப் பானை வருத்தம் கொண்டது. ''ஒரு காலத்தில் நானும் நல்ல பானையாகத்தான் இருந்தேன். இப்போது ஓட்டையாகிவிட்டேன். என்னால் எந்த உபயோகமும் இல்லையே!'' என்று வருந்திய ஓட்டைப் பானை கிழவியிடமே அது பற்றிக் கூறி வருந்தியது.

அதைக் கேட்ட கிழவி, ''நீயேன் வருத்தம் கொள்கிறாய்? உன்னால் எனக்கு எந்த உபயோகமும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? நான் தினமும் நீர் இறைத்து வரும்போது உன்னிடமிருந்து ஒழுகிய நீர் சிந்தும் இடங்களில் எல்லாம் நான் சின்னஞ் சிறிய பூச்செடிகளில் விதைகளைத் தூவி வைத்திருந்தேன். உன்னிடமிருந்து ஒழுகும் நீரினால் அந்த விதைகள் முளைத்து வழியெங்கும் நல்ல பூச்செடிகள் முளைத்திருப்பதையும் அவற்றில் அழகான பூக்கள் பூத்திருப்பதையும் நீ பார்க்கவில்லையா? இனியும் உன்னை உபயோகமற்றவனாக நினைத்துக் கொள்ளாதே!'' என்று கூறினாள். கிழவி சொன்னதைக் கேட்ட ஓட்டைப் பானை பூமியைப் பார்த்தது. அது செல்லும் வழியெல்லாம் பூக்கள் சிரித்துக் கொண்டிருந்தன. அதன் தாழ்வு மனப்பான்மையும் மறைந்தது.

உங்களைப் பலரும் பலவேளைகளில் கேலி செய்யலாம். ஒரு நிமிடம் பிறரது கேலி எதற்காக என்று யோசித்துப் பாருங்கள். உங்களைக் கேலி செய்தவர்கள் உங்கள் மீது அக்கறை கொண்டவர்களா? பொறாமை கொண்டவர்களா? என்று பரிசீலித்துப் பாருங்கள். இந்தப் பரிசீலனையை மிகச் சுலபமாகச் செய்வதற்கான வழியை அறிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு ஒரு வேலையைப் பற்றிய அறிவு இல்லை என்று பிறர் கூறுவதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கருத்தை நீங்கள் இரண்டு வகையாகப் பிரித்துக் கொள்ளலாம்.

ஒன்று உங்களால் செய்ய முடியாத வேலை!

மற்றொன்று அந்த வேலையை எப்படிச் செய்ய வேண்டும் என்று உங்களுக்குத் தெரியவில்லை!

நீங்கள் ஒரு டாக்டராக இல்லாத நிலையில், உங்களுக்கான சிகிச்சையை உங்களால் செய்ய இயலாது. இது முதலாவது நிலை. அந்த வேலையைப் பற்றிய அறிவு இல்லையே என்று நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை.

ஆனால், நீங்கள் கணினித்துறையில் பணியாற்றுகிறீர்கள் அந்தத் துறையில் ஒரு வேலை உங்களுக்குத் தெரியவில்லை என்றால், அது பற்றி தெரிந்தவர்களிடம் கேட்டு அறிந்து, அந்தப் பணியை நீங்கள் கற்றுக் கொள்ள முடியும்.

அதாவது, உங்களால் மாற்ற இயன்ற சூழ்நிலை மாற்ற முடியாத சூழ்நிலை என்ற இரண்டு நிலைகளையும் எப்போதும் பட்டியலிட்டுக் கொள்ளுங்கள். உங்களைப் பற்றிய குறையும் நிறையும் தெரியவரும். உங்கள் தாயோ, தந்தையோ, குடும்பத்தாரோ, உங்கள் நலனை விரும்புபவர்களோ, உங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டோ, குற்றம் சுமத்தவோ செய்தால் - அது உங்கள் நலனுக்காக இருக்கலாம். அந்த நேரத்தில் நீங்கள் அவர்கள் கூறுவதில் உண்மை இருந்தால் உங்களைத் திருத்திக் கொள்ளலாம்.

ஆனால், உங்கள் மீது பொறாமை கொண்டவர்கள்கூட உங்களைப் பிறரோடு ஒப்பிட்டோ, குற்றம் சுமத்தியோ பேசலாம். அப்படி நீங்கள் உணர்ந்தால், அவர்களின் பேச்சை வெறுமனே குப்பையில் போட்டுவிட்டுச் செல்வத்தைத் தவிர வேறெதையும் நீங்கள் செய்ய வேண்டாம்.

நீங்கள் ஒப்பிட்டுக் கொள்ள வேண்டுமென்றால், உங்களை உங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்த நிலைமையோடு இப்போதுள்ள நிலைமையை ஒப்பிட்டுக் கொள்ளுங்கள். அப்படிச் செய்வதால் இன்னமும் உங்களிடம் ஒட்டிக் கொண்டுள்ள பலவீனங்களை அறிந்து கொள்வதற்கு அது உதவும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட நீங்கள் உங்கள் ஆற்றலில், திறமையில் முன்னேறியிருந்தால், அந்தத் தெளிவு உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும்; கூடவே மேலும் உற்சாகத்தோடு செயலாற்றத் தூண்டும்.

நீங்கள் ஒருபோதும் உங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுக் கொள்ளாதீர்கள்.

உங்களை உங்களோடு ஒப்பிடுங்கள். அதாவ்து பத்து வருடத்திற்கு முன்பு நீங்கள் இருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளும்போது, நல்ல நிலையை எட்டிப் பிடித்திருக்கிறீர்களா? என்று மட்டும் பாருங்கள்.

வேறு மனிதர்களோடு ஒப்பிட்டு, ''நான் முன்னேறாமல் கிடக்கிறேன்'' என்று நினைத்து மனம் தளர்ந்து போகாதீர்கள்.

உங்கள் முந்தைய நிலையோடு, இப்போதுள்ள நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நீங்கள் அடைந்துள்ள உயரம் உங்கள் தன்னம்பிக்கையை நிச்சயம் வளர்க்கவே செய்யும்!

**தீர்மானிப்பவராய் விளங்குங்கள்!**

நீங்கள் பல ஆண்டுகள் உங்களைத் தன்னம்பிக்கை அற்றவராய் நினைத்துவிட்டீர்கள். பரவாயில்லை. இனியேனும் உங்கள் தனித்தன்மையை உணரக் கற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் எழுத்தாளராக வேண்டும் என்று நினைத்தால் எழுதத் தொடங்குங்கள். மற்றவர்களுடைய அபிப்பிராயத்தை விட உங்கள் ஆர்வம் முக்கியம் என்று உணருங்கள். பிறர் என்ன சொல்வார்களோ? என்று காலம் தாழ்த்திவிட்டோ, சந்தர்ப்பங்களைத் தவற விட்டுவிட்டோ பின்னால் நீங்கள் வருந்துவதால் எந்தப் பயனும் இல்லை.

நீங்கள் முடிவு எடுங்கள்; எடுக்கிற முடிவில் உறுதியாயிருங்கள் இதனையே ஆங்கிலத்தில் 'determination' என்கிறார்கள்.

-ஷிவேந்த்ரா (தொடரும்)



# தலைமை தாங்கும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பல

### வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் கருத்து

**இன்று பல குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டுள்ளன. போர் முடிவுற்ற நிலையில் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளில் இதுவும் ஒன்று. இந்தப் பெண்கள் தனிப்பட்ட ரீதியிலும், சமூகத்திலும் பல சவால்களை எதிர்கொண்டு வாழ்கின்றனர்.**

யாழ்ப்பாணம், ஏப்.4

இன்று பல குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமரகக் கொண்டே வாழ்கின்றன. போர் முடிவுற்ற நிலையில் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளில் இதுவும் ஒன்று. இந்தப் பெண்கள் தனிப்பட்ட ரீதியிலும், சமூகத்திலும் பல சவால்களை எதிர்கொண்டு வாழ்கின்றனர் என வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்தார்.

வட்டு. வடக்கு கற்பகச் சோலை நன்மை விருத்திச் சங்கத்தில் நடைபெற்ற வலி.மேற்குப் பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான சுயதொழில் முயற்சி ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே திருமதி ஐங்கரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சபையின் வேலைத் திட்டங்களில் ஒன்றாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களை மேம்படுத்துவது தொடர்பான சுயதொழில் முயற்சியில், பெண்களை ஊக்கப்படுத்தி, குடும்பங்களை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம். இவ்வாறான குடும்பங்களை இனங்கண்டு பயிற்சிகளையும் உதவிகளையும் வழங்குவது எமது கடமையாகும்.

அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக நன்மைதரும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுயதொழில் திட்டங்களினூடாகப் பெண்கள் பயன்பெறுவது அவசியம். இந்தத் திட்டங்களினூடாகக் கிடைக்கும் வருமானம் வாழ்க்கைக்குத் திருப்தியாக உள்ளதா என்பதை நீங்கள்தான் அறியத்தர வேண் டும்.

குறைகள் ஏதும் இருப்பின் அவற்றை நிறைவு செய்ய முயற்சி எடுப்பேன்- என்றார். (எ-13-29)



கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் பிரிவின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தினவிழா கிராம அலுவலர் வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் இறைவணக்கம் இடம்பெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளரும் எழுத்தாளருமான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.கிழக்குப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஈ.நிர்மலன், கிராம அலுவலர் எஸ்.உதயகுமார் உள்ளிட்ட விருந்தினர்கள் எழுந்து நிற்கின்றனர். (எ-3)

## சேவையில் இருந்து இளைப்பாறினார்

யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடமையாற்றிய மூத்த சனசமூக அபிவிருத்தி அதிகாரி வே.கந்தசாமி சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளார்.

அவரது சேவையைப் பாராட்டி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சக அதிகாரிகளால் சேவை பணி நயப்பு விழா இடம்பெற்றது. இவர் பட்டதாரி அலுவலராக நியமனம் பெற்று 38 ஆண்டுகள் பணியாற்றி தலைமை அலுவலக மூத்த சனசமூக அபிவிருத்தி அதிகாரியாக இளைப்பாறியுள்ளார்.

கடந்த காலங்களில் விசேட ஆணையாளராகப் பணியாற்றிய இவர், யாழ். மாவட்டத்தில் உள்ள 10 இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளில் மூத்த சன சமூக அபிவிருத்தி அதிகாரியாகப் பணியாற்றியவர்.

மேலும் முன்பள்ளி ஆசிரியர்களின் வேதன உயர்வு, சிறுவர்களின் கல்வி அபிவிருத்தி, சனசமூக நிலையங்களின் முன்னோக்குத் திட்டம் தொடர்பாக பல எண்ணக்கரு பத்திரங்களை முன்வைத்து சேவையாற்றியவர். (எ)

# சமூகத்துக்கு ஒவ்வாத செயல்களை இல்லாதொழிக்க ஒன்றுபடுவோம்

### அரியாலை ஐக்கிய கழகத் தலைவர் தெரிவிப்பு

**நாம் எல்லோரும் சிந்தித்து விளையாட்டுத் துறையிலும், சமூக நலனோம்புத் துறைகளிலும் இளையோரை ஈடுபடுத்தி வழிப்படுத்த வேண்டும்.**

யாழ்ப்பாணம், ஏப்.4

இன்றைய சமூகத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளை இல்லாதொழிக்க நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என அரியாலை ஐக்கிய கழகத் தலைவர் பொ.பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

அரியாலை சமூக அபிவிருத்திச் சங்க லண்டன் கிளையின் ஆதரவுடன் அரியாலை ஐக்கிய கழகம் அண்மையில் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடத்திய இறுதிச் சுற்றுப் போட்டியில் கலந்துகொண்டு தலைமையுரை ஆற்றிய போதே பஞ்சலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்குமேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தோடு அரியாலையில் உள்ள அனைத்து மக்களையும் ஒன்று சேர்த்து பல்துறைசார் வீரர்களை உருவாக்கி பல ஆண்டுகாலம் பணி செய்து வருகிறது அரியாலை ஐக்கிய கழகம்.

எமது பிரதேசத்தில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்களும் இதில் அங்கத்துவம் வகிக் [illegible] [illegible] படுத்திய பெருமைக்குரியவர் அமரர் ஈ.கே. குமரையா. பல்துறைசார் விளையாட்டு வீரராகக் கொடிகட்டிப் பறந்து சாதனைகள் படைத்து, எமது பிரதேசத்துக்கு அரும் பணியாற்றினார்.

பல நூற்றுக்கணக்கான தேசிய வீரர்களை உருவாக்கிய பெருமை அரியாலைக்கு உரித்தானது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. தற்போதைய காலத்தில் மாணவர்கள் மட்டத்திலும் இளைஞர், யுவதிகள் மட்டத்திலும், விளையாட்டுக்களில் ஈடுபடும் ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றது. அதுவே தான் எமது பிரதேசங்களில் பூதாகரமாக உருவெடுத்துள்ள கலாசாரத்துக்கு ஒவ்வாத செயற்பாடாகக் காணப்படுகின்றது. இது மிகவும் வேதனை தருகின்ற விடயம். இதனை நாம் எல்லோரும் சிந்தித்து விளையாட்டுத்துறையிலும், சமூக நலனோம்புத் துறைகளிலும் இளையோரை ஈடுபடுத்தி வழிப்படுத்த வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன்.

இதைவிட வயது முதிர்ந்த காலங்களில் இளையோருக்கு இடம் கொடுத்து இளைஞர்களையும், யுவதிகளையும் சமூகத்தின் முன்னோடிகளாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## குளவி கொட்டியதில் மாணவர்கள் வைத்தியசாலையில்

கேகாலை,ஏப்.4

கேகாலை காமினி வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் மூவருக்கு குளவி கொட்டியதால் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளனர்.

இரண்டு கழுகுகள் குளவிக் கூட்டில் மோதியதால் குளவிகள் கலைந்து மாணவர்களை தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ச)

## விலங்குகளைப் பாதுகாக்க விசேட திட்டம்

மட்டக்களப்பு,ஏப்.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் வனவிலங்குகளை பாதுகாப்பதற்காக குளங்களைப் புனரமைப்பு செய்யும் விசேட செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் ஆர்.ருசாங்கன் தெரிவித்தார்.

யானைகள் மற்றும் மான்கள் நீர் அருந்துவதற்காக கிராமங்களுக்குள் செல்வதனைத் தடுப்பதற்காகவே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதற்காக மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களிலுள்ள ஐந்து குளங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(ச)

# மட்டு. மாவட்டத்தில் மீண்டும் விவசாயிகளுக்கு துப்பாக்கி

மட்டக்களப்பு,ஏப்.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது பயிர்களை காட்டு மிருகங்களிடம் இருந்து பாதுகாப்பதற்காக விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயிர்ச்செய்கைகளை பாதுகாப்பதற்காக துப்பாக்கி கோரி விண்ணப்பம் செய்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை பிரதேச செயலகங்களில் நடத்துமாறு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

துப்பாக்கிக்கு விண்ணப்பிப்பவர் விவசாயம் மேற்கொள்ளும் காணியின் உறுதி விண்ணப்பதாரியி னுடையதாக இருத்தல் வேண்டும். அல்லது மனைவியின் பெயரில் காணியிருப்பின் விவாகச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

விவசாயம் செய்யும் இடத்தின் விஸ்தீரணம் 5 ஏக்கருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும். பயிர்ச்செய்கை பற்றியும் எவ்வகை மிருகத்தினால் பயிர்ச்செய்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றதென்பது பற்றியும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

இந்த விடயங்களை உறுதிப்படுத்தி கிராம உத்தியோகத்தரின் சிபாரிசுக் கடிதம் போன்ற ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது அது பரிசீலிக்கப்படும்.

இந்தத் தகைமைகளை துப்பாக்கி கோரி விண்ணப் பித்துள்ள விவசாயிகள் கொண்டுள்ளார்களா என் பதைப் பரிசீலித்த பின்னரே அவர்களுக்கு துப்பாக்கி வழங்கலாமா இல்லையாஎன்பதுமுடிவு செய்யப்ப டும் என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருடங்களாக மட்டக்களப்பு விவசாயிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்படுவதில்லை. போரால் அது தடைசெய்யப்பட் டிருந்தது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

(ச)



ஒரு கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு முன்னால் செல்லும் சுனாமி வீடமைப்புத்திட்டத்துக்கான வீதிக்கு கொங்கிறீட் இடும் ஆரம்பநிகழ்வில்அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம். நௌபல், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நாணயக்கார உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (31)

# இனவாதத்தை தூண்டுபவர்களை மக்கள் ஓரம் கட்ட வேண்டும்

### கல்முனை மாநகர முதல்வர் தெரிவிப்பு

எருவில்,ஏப்.4

இனவாதத்தையும் பிரதேசவாதத்தையும் மக்கள் மத்தியில் தூண்டிவிட்டு அரசியல் பிழைப்பு நடத்துபவர்களை மக்கள் ஓரம் கட்ட வேண்டும் என்று கல் முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையில் நீண்ட காலமாக நாளாந்த சம்பள அடிப்படையில்வேலை செய்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றபோது சில அரசி யல்வாதிகள் இனவாத மற் றும் பிரதேசவாத சிந்தனை யால் அதனைத் தடுப்பதற்கு பல முயற்சிகளை எடுத்துள் ளனர்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வானது மாநகர சபையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. கல்முனை, பிரதேச சபையாக, நகர சபையாக பின்னர் மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டது. ஆனால் தேவையான ஆளணி வழங்கப்படாமல் மிக நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வந்துள்ளது. இதனால் இங்கு கடமையாற்றி நிரந்தர நியமனம் பெறும் ஒவ்வொரு ஊழியரும் பதினைந்து வருடகாலம் நாளாந்த சம்பள அடிப்படையில் வேலை செய்யவேண்டிய நிலை யேற்பட்டது.

இந்த நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றபோது சில அரசியல்வாதிகள் இனவாத மற்றும் பிரதேசவாத சிந்தனையால் அதனைத் தடுப்பதற்கு பல முயற்சிகளை எடுத்துள்ளனர். அவை அனைத்தையும் முறியடித்து இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு கடமையாற்றிய ஊழியர்களின் சேவை மூப்பு, கல்வித் தகைமை அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனவே நியமனம் பெற்றுள்ள ஊழியர்கள் அனைவரும் மாநகர சபையின் வளர்ச்சிக்கு விசுவாசத்துடன் கடமையாற்ற வேண்டும் - என்றார்.(ச-31)


# மரண அறிவித்தல்



மண்கும்பான் 4 ஆம் வட்டாரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல. 87, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை குணரத்தினம் (31.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நாகம்மா, சுப்பையா, செல்லம்மா ஆகியோரின் அன்பு பெறாமகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - புள்ளமுத்து தம்பதியரின் சிறிய மகனும், ஞானமிர்தம் (மாதா) அன்புக் கணவரும், பிரபாகரன் (ஜேர்மனி), சுதாகரன், கௌதமி (ஹொலண்ட்), கௌதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் ஞானேஸ்வரி, பரமேஸ்வரி, சர்வேஸ்வரன், காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் சொர்ணம்மா, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் புஸ்பவதி, லில்லிமலர், பரமேஸ்வரி, வனிதமலர், சத்தியவதி ஆகியோரின் சகோதரரும், சிவறஞ்சினி (ஜேர்மனி), கவிதா மனோகரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனும், குணபாலசிங்கம் , காலஞ்சென்ற செல்வமணி ஆகியோரின் மைத்துனரும், லில்லிமலர், காலஞ்சென்ற அரியரட்ணம் ஆகியோரின் சகலனும், சியானி, நிறோஜன், ஷரோன், ஷபிரா, கபிஷா, மிஷான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2012) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு மண்கும்பான் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(16345) (45-6-9)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 30*04*1979

மறைவு 05*03*2012



திருமதி
## சுஜீவன் சிவலோஜினி (வாசுகி)

கடந்த (05.03.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் சுஜீவன் சிவலோஜினியின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.04.2012) புதன் கிழமை காலை 6.00 மணியளவில் நயினாதீவு, கங்காதரணி தீர்த்தக்கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1ஆம் வட்டாரம், நயினாதீவு.

(16346) (6,9,10)

குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03.08.1945
மறைவு: 17.03.2011
திதி: 04.04.2012



அமரர்
## மனோன்மணி நாகராசா

அன்பின் உருவே பண்பின் பிறப்பிடமே
ஓராண்டு சென்றாலும் உம்பிரிவால் எம் நெஞ்சம்
நெஞ்சுருகி கண்ணீர் சிந்துகின்றோம் அம்மா
தூய வாழ்க்கை நடத்தி வாழ்ந்திருந்தீர் அம்மா
நீமக்கெல்லாம் ஓர் உற்ற துணையாய்
நம்மை இணைக்குமோர் பாலமாய் இருந்தீர்
கால்மெல்லாம் உமக்காக
கண்ணீர்ப் பூக்கள் சொரிந்திடுவோம்.

V. நாகராசா
இல. 61/10, மில்லேன்,
[illegible] கொக்குவில் மேற்கு,
கொக்குவில். 0212052306

குடும்பத்தினர்.

(16358)(6-9,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சேவைகள் கிழக்கில் விரிவுபடுத்தப்பட வேண்டும்

## முதல்வர் சந்திரகாந்தனின் விருப்பு இது

மட்டக்களப்பு,ஏப்.4

கிழக்கு மாகாணத்தில் கிராமப்புறங்களிலும் சுகாதார சேவைகள் விரிவுபடுத்தப்படவேண்டும். இதற்கமைய பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செங்கலடியில், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புதிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் கிராமப் புறங்களில் வாழ்கின்ற மக்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்துள்ளனர். கிராமப்புறங்களில் பல கர்ப்பிணித் தாய்மார்கள் சுகாதார சேவைகளைப் பெறுவதற்காக நீண்ட தூரம் பயணம் செய்து வெய்யிலிலே அலைந்து திரிகின்ற நிலைமை இருந்துள்ளது.

அவ்வாறான நிலை இனிமேலும் மக்களுக்கு ஏற்படக்கூடாது. இதில் நாமும் உறுதியாக இருக்கின்றோம். மக்களுக்காக சுகாதாரத்துறை சார்ந்த பல திட்டங்களை ஜனாதிபதி செயற்படுத்தி வருகின்றார்.

நகரப் புறங்களில் எவ்வாறு சுகாதார சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றதோ அதேபோன்று கிழக்கு மாகாணத்தின் கிராமப் புறங்களிலும் சுகாதார வசதிகள் விஸ்தரிக்கப்பட வேண்டும்- என்றார். (ச)



அக்கரைப்பற்று பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எச்.ஜே.எம். இன்ஹாமின் சொந்த நிதியில் பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசங்களில் திண்மக் கழிவு அகற்றும் திட்டத்தில் பிரதேசசபை உறுப்பினர்கள் பொது இடங்கள், வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களிலும் உள்ள திண்மக் கழிவுகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## வெஹெரகல நீர்த் தேக்க வான் கதவுகள் திறப்பு

மொனராகலை,ஏப்.4

மொனராகலை - வெஹெரகல நீர் தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த கடும் மழையால் நீர் தேக்கத்தின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதை அடுத்து வான் கதவு களைத் திறக்க நடவடிக்கை எடுத்ததாக மொனராகலை மாவட்ட பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலைய பிரதிப் பணிப்பாளர் ரவீந்திரகுமார தெரிவித்தார்.

வான் கதவுகள் திறக்கப் பட்டுள்ளதால் மாணிக்ககங்கையின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது.

அதனால் மாணிக்க கங்கை நீரை பயன்படுத்தும் பொது மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (ச)

## சொறிக்கல்முனைக் கிராமத்துக்கு குடிதண்ணீர் வசதி வேண்டும்!

### பிரதேச மக்கள் கோரிக்கை

நாவிதன்வெளி, ஏப். 4

நாவிதன்வெளிப் பிரதேசசபைக்குட்பட்ட சொறிக்கல்முனைக் கிராமத்துக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட சொறிக்கல்முனைக் கிராமத்தில் மழை பெய்யும் காலங்களிலும், வாய்க்கால்களில் நீர்வரும் காலங்களிலும் மாத்திரம் கிணறுகளில் நீரைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஏனைய காலங்களில் குளங்களுக்கும், நீர்நிலைகளுக்கும் பொதுக் கிணறுகளுக்கும் குடிதண்ணீரைப் பெறுவதற்காக சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியிருக் கிறது என்று மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

> குடி தண்ணீரைப் பெறுவதற்காக சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது.

இதனைக் கருத்திற்கொண்டு சொறிக்கல்முனைக் கிராமத்துக்கு சம்பந்தப்பட்டவர்கள் குடிதண்ணீருக்காகக் குழாய் நீர் வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## இரட்டைக் கொலை சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

இரத்தினபுரி,ஏப்.4

இரத்தினபுரி, கஹவத்தை - கொட்டகெதென பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பெல்மடுல்ல நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர்களுடைய வங்கிக் கணக்கு தொடர்பான அறிக்கையும் சமர்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் கொடகவெல பிரதேச சபை உறுப்பினர், அவருடைய சகோதரர் மற்றும் சகோதரரின் மனைவி ஆகியோர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


**வலி.வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை**

**விசேட பொதுக்கூட்டம்**

மேற்படி எமது சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் (06.04.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி பாடசாலை மண்டபத்தில் திரு. கனகர் செல்வராசா தலைமையில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இ.செல்வகுமார்
செயலாளர்.

(16361) (6,9,10)

**உங்களுக்கு சுத்திகரிப்புத் தேவைகளில் பிரச்சினையா?**

உங்களுக்கான எமது சேவைகள்
நிறுவனங்கள், வீடு, ஹோட்டல், Tiles, அல்ஹபோன் பார்டிஷன், ஷோ றூம், Show Room Glass, Floor Polishing / Vaccine / Carpet Shampoo போன்ற சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**Specialized Janitorial Services**
தொடர்பு: இல. 536/1 கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தி,யாழ்ப்பாணம்.
T.P: 021 4921108, 0777286069

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் கோழிகள் தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்த புறொயிலர் ரூ.450 மட்டுமே.
நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.இல.021 222 6944

**O/L DAY CLASSES**

ஏப்ரல் 04
ஆரம்பமாகின்றன
The Express Institute
Irupalai, Kopay.

**Physics - A/L 2014**

சிறுகுழு, தனிப்பட்ட வகுப்புக்கள் M.Sc பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும்.
தொடர்பு : 077 6184713

**வாகன (கார்) சாரதி தேவை**

நற்குணமுள்ள தீய பழக்கவழக்கமற்ற 45 வயதுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள வாகன (கார்) சாரதி தேவை. மாதச் சம்பளம் வழங்கப்படும். தொடர்பு:- 077 6560003

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
சம்பளம் 10,000/=
தொடர்பு - 077 1392137

**நல்லூர் அரிமாக்கழகம் ஆண்டு விழா - 2012**

இன்று (04.04.2012) நல்லூர் லயன்ஸ் கழகம் தனது 23ஆவது ஆண்டு விழாவைக்கொண்டாடும் நன்னாளில் இக்கழகத்தால் இதுவரைகாலமும் பலவிதமான சேவைத்திட்டங்களை நிறைவேற்றிய தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், பணிப்பாளர்கள், சபை உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் இக்கழக ஆரம்பகால உறுப்பினர்கள் என்ற வகையில் எங்கள் நன்றிகளைத் தெரிவித்து வாழ்த்தி வணங்குகிறோம்.

வாழ்த்துபவர்கள்
லயன் வல்லிபுரம் பரமசிவம்.ஜே.பி.
லயன் ஐ.அ.மகேஸ்வரன்
(முன்னாள் கழகத் தலைவர்கள் - நல்லூர்)

**சமூக சேவைக்கான அங்கீகாரம்**

கடந்த ஐம்பதாண்டுக்கு மேலாக அர்ப்பணிப்புணர்வுடனும் மனித நேயத்துடனும் சமூகசேவையை ஆற்றிவரும்

**லயன். வல்லிபுரம் பரமசிவம்**




அவர்களுக்கு கண்டியில் உள்ள ஸ்ரீமத் ஒல்கொட் பட்டம் வழங்கும் நிறுவனமானது அவர் ஆற்றிவரும் சமூக சேவையைக் கருத்தில் கொண்டு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்குவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். அவர் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக ஓய்வின்றி ஆற்றிவரும் சமூக சேவைக்கான அங்கீகாரமாக இந்தப் பட்டம் வழங்கல் அமைகின்றது.

நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவராக, வலயத் தலைவராக, லியோ கழகங்களின் ஆலோசகராக, செஞ்சிலுவைச்சங்க செயலாளராக, சமாதான நீதிவானாக சிறப்புடன் கடமையாற்றி பல்வேறு விருதுகளைப் பெற்றவர் லயன் வ. பரமசிவம் அவர்கள். நல்லூர் ஓய்வூதியர் சங்கப் பேரவை மற்றும் சட்டநாதர் ஆலய பரிபாலன சபை செயலாளர் ஆகவும், செங்குந்தா இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கத் தலைவர் மற்றும் கல்வியங்காடு சத்தியசாயி சேவை நிலையத்தின் தலைவராகவும் அவர் ஆற்றிய பணிகள் பல. செம்மணி மயான அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்பான பதவிகளை வகித்து அதனைச் சிறப்பாக வளர்ச்சிப்படுத்தியவர். பொதுச் சேவையைத் தன் மூச்சாகக்கொண்ட லயன் வ. பரமசிவம் அவர்கள் மனிதப்பண்பாளன், இன்சொல்லினன், கடமைவீரன், எளிமையான தோற்றம்; பொறுமையின் மறுவடிவம்; இறைபக்தியாளன்; ஆன்மீகவாதி; குடும்ப நண்பர் இப்படி அவர் பெருமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

லயன். வ. பரமசிவம் ஆற்றிய உன்னதமான சேவைகளை கருத்திற் கொண்டு அவரின் 83 ஆவது அகவையில் ஸ்ரீமத் ஒல்கொட் பட்டம் வழங்கும் நிறுவனம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிப்பதை இட்டு மிக்க மகிழ்வடைகின்றேன். பொருத்தமான சமூக சேவையாளர் ஒருவரைச் சரியாக இனங்கண்ட அந்நிறுவனத்தை மனதாரப் பாராட்டுகின்றேன். லயன் பரமசிவம் அவர்களின் சேவைகள், தொடரவும், நிறைவாழ்வு வாழவும் எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றேன்.

**பேராசிரியர்: சத்தியசீலன்** M.A,Ph.D.
பீடாதிபதி,
உயர் பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

GATEWAY CICT ICDL




Java PHP
C++ HTML
C # VB
F # .net

புதிய பிரிவுகள் ஆரம்பம் 06.04.2012

Gateway Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 [illegible]
E - mail : gatewayjfn@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 32°c | 26°c | |
| மன் | | 32°c | 26°c | |
| வவு | | 33°c | 23°c | |
| முல் | | 31°c | 25°c | |
| கிளி | | 31°c | 25°c | |

ஓரளவு மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# குடிதண்ணீர் தட்டுப்பாடு

## சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட மக்கள் ஏக்கம்

யாழ்ப்பாணம்,ஏப். 4

சாவகச்சேரி பிரதேச சபை -சாவகச்சேரி நகர சபை என்பன சாவகச்சேரி மக்களின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட உள்ளூராட்சிசபைகள் ஆகும். எனினும் மேற்குறித்த நகர சபைக்குட்பட்ட மக்கள் நன்னீர் குடிதண்ணீருக்காக காத்திருக்கின்றனர்.

இவ்வாறு சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார் .

சாவகச்சேரி நகர குடிதண்ணீர் தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் நகரபிதா இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசிய நகரசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி மேலும் கூறியதாவது:-

வடக்கு யாழ் -பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் கொண்டுவருவதற்காக

**சாவகச்சேரி நகரபிதா இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற குடிதண்ணீர் தொடர்பான அபிவிருத்திக் கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.**

கடந்த 10 ஆண் டுகளாக ஆய்வு மேற்கொண்டு வருவதுடன், இதற்கான திட்டத்தை வடிவமைத்து நிதியைப் பெற்றுத்தந்துள்ளார் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன். அத்துடன் முன்னாள் தேசிய நீர்வழங்கல் வடிகால்அமைப்புசபை அமைச்சர் ஏ.ஏல்.எப் அதாவுல்லா ,அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் ஒப்புதல்களைப் பெற்று இரணைமடுத் திட்டத்தை மேல் எடுத்துச் செல்ல உறுதியான திட்டத்தை முன் வைத்து 2016 இற்குள் குடிதண்ணீர் கிடைத்திட வழி சமைத்துள்ளனர்.

எனவே அவரது திட்டம் வடக்குக்கு கிடைத்திட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என நகரசபை செயலாளர் சு.புத்திசிகாமணி கேட்டுள்ளார் .

இந்தக் கூட்டத்தில் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன், சர்வதேச கெயர் திட்ட முகாமையாளர் திருமதி ஞா.ஜோய் மோஸ் ,வேலணை பிரதேச சபைச் செயலாளர் செ.ரமேஷ், சாவகச்சேரி நகராட்சி மன்ற உப முதல்வர் கு.சதாசிவமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். (ந)

# கட்டாக்காலி மாடுகளை பராமரித்து அபிவிருத்தியை முன்னெடுக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.4

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட தீவகத்தில் உள்ள கட்டாக்காலி மாடுகளை முழுமையான பராமரிப்புக்குள் கொண்டு வருவதன் ஊடாக பால் பதனிடும் அபிவிருத்தியை முன்னெடுக்கலாம்.

கட்டாக்காலியாக 5000 க்கும் மேற்பட்ட மாடுகள் திரிகின்றன. அவற்றை சிறந்த முறையில் பராமரிக்க பிரதேச செயலகம் முன்வர வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட தேச வள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் கே.முதலியார் தெரிவித்தார்.

புங்குடுதீவில் கமநல சேவைகள் திறப்பு விழாவில் கலந்து கொண்ட அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

இன்று மாடுகளின்தொகை பெருகிக்கொண்டே போகிறது.

இந்த மாடுகளை பண்ணை அபிவிருத்தி முறையின் கீழ் கொண்டு வருவதன் ஊடாக ஒவ்வொரு குடும்பங்களும் மேல் நிலைக்கு செல்லலாம்

அபிவிருத்தி நோக்கிச் செல்ல திட்டமிடலாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் இதற்கு உதவ வேண்டும்

இதன் மூலம் பால், பசளை, இறைச்சி மற்றும் தேவைகளை முன்னிலைப்படுத்தலாம் - என்றார். (எ)

# எமது உள்ளம் எத்தகையது

''இத்தகைய சிறு பிள்ளைகளுள் ஒருவரை என் பெயரால் ஏற்றுக்கொள்பவன் எவனும் என்னையே ஏற்றுக் கொள்கிறான். என்னை மட்டுமல்ல, என்னை அனுப்பிய வரையே ஏற்றுக்கொள்கிறான் (மாற்கு 9:37)

வறுமையில் வாழும் குடும்பம் அது, தந்தையோ கடனாளி ஆகிவிட்டார். ஒரு நாள் தாம் கொடுத்த பணத்தை வாங்குவதற்காக ஒருவர் அந்த வீட்டிற்கு வந்திருந்தார். அவர் வீட்டிற்கு வருவதை அறிந்த தந்தை பயந்து மறைந்துகொண்டு தனது சிறிய மகளிடம் கூறுகிறார். ''அப்பா இங்கு இல்லை'' என்று வருபவரிடம் கூறும் படியாக. அவரோ வந்து வீட்டிலிருந்த அந்தச் சிறு மகளிடம் வினாவுகிறார் ''அப்பா எங்கே?'' என்று, அதற்கு மகள் கூறும் பதில் ''அப்பா இங்கு நிற்கிறார். ஆனால் தாம் இல்லை என்று கூறும்படியாகச் சொன்னார்'' என்பதாகும். இதேபோன்ற சம்பவங்களை பாடசாலைகளிலும் வேறு பொது இடங்களிலும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

கள்ளமில்லா வெள்ளை உள்ளம் கொண்டவர்களே சிறுவர்கள். இவர்களுடைய வயதிலே அல்ல இவர்களின் உள்ளங்கள் போன்று அனைவரும் இருக்க வேண்டும் என்பதே இறைமகன் இயேசுவின் விருப்பமாகும். அதாவது பொய், களவு, வேண்டப்படாத நடத்தைகள் போன்ற பாவச் செயல்களைச் செய்யாமல் இருத்தலேயாகும். ஆனால், பெரியோர்களாகிய நாம் செய்வதென்ன? எமது எண்ணங்கள் தான் என்ன? மனிதனை மனிதன் பழிவாங்கும் எண்ணம், மனித மாண்பைப் பற்றிய சிந்தனையே எம்மிடம் இல்லை. நீதி இல்லை, நேர்மை இல்லை. பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடு, பட்டம், பதவி, பணம், பொருள் இவைதான் எமது அணிகலன்களாக அமைகின்றன. எம்மைப் போன்று தான் மற்றவர்களும், அனைவரும் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டவர்கள் என்பதை நாம் மறந்து விடுகின்றோம். மதங்கள் அனைத்தினதும் நோக்கம் ஒன்றுதான்.




எனவே தான் எம்மிடம் இருக்கும் தீய செயல்களை, வேண்டாத நடத்தைகளை எம்மிடமிருந்து அகற்றி விடுவோம். எமது சிந்தனை, சொல், செயல் அனைத்துமே இறைவனுக்குரியவையாக அமைய, எமது மனங்களை மாற்றுவோம். இத்தனை காலம் புத்துணர்வு பெற்ற காலமாக எமக்கு அமையட்டும். எப்பொழுதும் சிறு பிள்ளைகளின் உள்ளங்கள் போன்று வாழ முயற்சி செய்வோம். இதன்மூலம் நாம் தேடும் அமைதி வாழ்வைக் கண்டுகொள்வோம்.

திருமதி செல்வராணி ஞானரட்ணம்,
யா/திருஞான சம்பந்தர் வித்தியாசாலை.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணுக்கு வரமாக
30.06.1941

மண்ணுக்கு உரமாக
05.03.2012

## அமரர் செல்லையா நடேசன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ஞானாசாரியார் கல்லூரி)

நெற்றியிலே நீண்ட திருநீற்றுப் பூச்சும்
குற்றியளவு சந்தனப் பொட்டும்
புன்முறுவல் பூத்த சுந்தர வதனமும்
வெண்மையான மனமும் கொண்ட
எம் குடும்ப விடி விளக்கே
எங்கு சென்றீரோ ஒளி கொடுக்க
எமை இருளில் ஆழ்த்தி விட்டு
அழுதழுது தேறுகிறோம் அப்பா
ஆண்டவனிடம் போயிருப்பீர் என்று
அசையாத உணர்வுடன்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



அன்னாரின் துக்க நிகழ்வில் கலந்து கொண்டும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டில் இருந்தும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு 04.04.2012 அன்று காலை 8.00 மணியளவில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி தீர்த்தக் கரை மண்டபத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

துன்னாலை மத்தி, கரவெட்டி. - குடும்பத்தினர்.


### உயர்தர மாணவருக்கு கருத்தரங்கு

தென்மராட்சி,ஏப்.4

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் சாவகச்சேரி,மீசாலை, நுணாவில் ஆகிய பொது நூலகங்கள் இணைந்து மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகளை நடத்தவுள்ளன.

முதலாவது கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. தமிழ்ப் பாட கருத்தரங்கை தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அலுவலர் சி.முகுந்தன் வளவாளராக கலந்து கொண்டு நிகழ்த்தவுள்ளார்.

சாவகச்சேரி பொது நூல் நிலைய நூலகர் வே.வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை கலந்து கொள்வார். (வ-9)


### வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

**உடற் கோப்பு அமைப்பதற்கான கூறுவிலை கோரல்**

எமது கொத்தணியினால் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட TATA LPT 1109 EX (19') வாகனத்துக்கு முழு உடற் கோப்பு அலுமினியத்தால் அமைப்பதற்குத் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 11.04.2012 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியில் கூறுவிலையைச் சமர்ப்பித்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

03.04.2012
சங்கானை வீதி,
மானிப்பாய்.

பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச்
சங்கங்களின் கொத்தணி.



### மனோதத்துவ வைத்தியம்

(General Psychotherapy)
பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr . P. ஆறுமுகம்**

T.P. 0719315664 , 0777569205

யாழில் 05.04.2012 முதல் 10.04.2012 வரை

**பதிவுக் கட்டணம் ரூபா 300/=**

ஆரம்பநிலை மனநோயை விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு. இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு, மனப்பாண்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புகளால் (பிறவியில் ஆண்மை அற்றவர்களைத் தவிர) எந்த விதமான மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகி உள்ளனர். குழந்தைப்பேறின்மை, ஆண் உயிர் அணுக்களில் குறைபாடு உள்ளவர்களுக்கு திறமான மூலிகை சிகிச்சை அளிப்பதால் பல பேருக்குக் குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன் (பழைய கமால் ரூறிஸ்ற் இன்)
392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குண்டு

கணேஸ்வரம், அளவெட்டியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 5946046

(16403))(6-9-8)



## தவறிவிட்டது

பசுபதி மயூரன் என்பவருடைய தே.அ. அட்டை 30.03.2012 அன்று கிளிநொச்சி கச்சேரிக்கும் ஜெயந்திநகர் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 0773923267, 0774211579

No.75 D 8, உருத்திரபுரம், கிளிநொச்சி.





சரவணை கிழக்கு

## மயிலப்புலம் திருப்பொலி கட்டுவன்வான் அருள்மிகு ஐயனார் திருக்கோயில் பாலஸ்தான கும்பாபிஷேகம் - 2012

பூரணை புஷ்கலை சமேத ஹரிகர புத்திர ஐயனாரின் பாலஸ்தான கும்பாபிஷேக பூர்வாங்கக் கிரியைகள் 04.04.2012 புதன்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி 06.04.2012 வெள்ளிக்கிழமை காலை 8-10 மணிவரையுள்ள சுபவேளையில் பாலஸ்தான கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

ஐயனார் அடியார்கள் அனைவரும் வருகைதந்து ஐயனாரின் திருவருளைப் பெற்று உய்யும் வண்ணம் அழைக்கின்றோம்.

**- ஆலய அறங்காவற் சபையினர்.**

(16344) (2-6-7)


## அனுமதிப்பத்திரமின்றி மினிபஸ் செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஏப்.4

வீதி அனுமதிப்பத்திரமின்றியும், மிதிபலகையில் பிரயாணிகளை நிற்கவைத்தும் பயணம் செய்த மினிபஸ் உரிமையாளருக்கு யாழ்.நீதிமன்றம் 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளருக்கு எதிராகவே இந்தக் குற்றசாட்டின் அடிப்படையில் யாழ். நகரில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். நேற்றுமுன்திம் யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் சந்தேகநபர் முன்னிலைப் படுத்தப் பட்டார். விசாரணையின் போதுதான் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

(வ-4)


## புது வருட மலிவு விற்பனை

யாழ்நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் Japan Sony Wega Flat TVகள் 21", 25"-13500/=, 29"-16000/=,12" Box - 12000/= குளிர்சாதனப் பெட்டிகள் - 19000/= DVD- 4250/=

தொடர்புகளுக்கு: 077 0440570

சொனி ரேட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி முன்பாக, 56, K.K.S. வீதி, சுன்னாகம். (16336) (45-7-9)





## மிருசுவில் படித்த மகளிர் திட்டம் "துர்க்காபுரம்" அருள்மிகு ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் தேவஸ்தான மணவாளக்கோல தின சகஸ்ர (1008) கலச சங்காபிஷேகம்

நிகழும் மங்களகரமான கரவருடம் பங்குனி மாதம் 23 ஆம் நாள் (05.04.2012) நாளை வியாழக்கிழமை பங்குனி உத்தர நன்நாளில் அம்பிகைக்கு மகாசங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி விசேட பூசைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாவரும் போது ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட் கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். சங்காபிஷேகத்தில் அனைவரும் பங்குகொண்டு எல்லாம் வல்ல ஞானதுர்க்கை அம்மனின் திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

"இறைபணியே இன்பப்பணி"

"துர்க்காபுரம்" படித்த மகளிர் திட்டம் மிருசுவில்

ஆலய தர்மகர்த்தா சிவத்திரு சி. நவரத்தினம் ஐயா

(16451))(6-9-8)



## பாராட்டி வாழ்த்துகிறோம்



செல்வன் பரமேஸ்வரன் சுதர்சன்

(யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்)

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் 6A, 2C, 1S பெறுபேற்றைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் கல்வியில் மேலும் பல சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

(16408))(6-9-8)



## திருத்தி வாசிக்கவும்

உதயன் பத்திரிகையில் 31.03.2012 இல் 24 ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தில் வடமராட்சியில் London of Achievers என்று வரும் பகுதியை London College of Achievers எனத் திருத்தி வாசிக்கவும். - விளம்பரதாரர்.



## தவறிவிட்டது

பரமேஸ்வரன் சுஜீவன் ஆகிய எனது தே.அ.அ. (871233888V), சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ் ஆகியன புத்தூருக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

தொடர்பு:- 077 9238633, 011 4990183



## டிப்பர் விற்பனைக்கு

LB xxxx இலக்கமுடைய 3CUBG TATA டிப்பர் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 075 0403681

(C/325))(6-9-8)



## விற்பனைக்கு

NP - GL xxxx தொடரிலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள Splendor மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 2508751



## வீடு வாடகைக்கு உண்டு

முல்லைத்தீவு, முள்ளியவளை தண்ணீரூற்றுச் சந்தி அருகில் (600 m) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக் குண்டு.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது

தொடர்புகளுக்கு : 077 1614313

(16393))(6-7-8)



## தவறிவிட்டது

இல. 55, இராஜ வீதி, நல்லூர் எனும் முகவரியுடைய பொன்னையா புஸ்பராஜன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (701682033V) மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் என்பன 01.04.2012 அன்று சாவகச்சேரிக்கும், நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரிக்கோ அல்லது 075 0403204 எனும் தொ.பே. இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளவும்.



## மணமக்கள் தேவை

★ யாழ். இந்து கௌரவ குடும்பம் 1973 ஆம் ஆண்டு பிறந்த உள்ளூராட்சி மன்றத்தில் வேலை பார்க்கும் மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை. நட்சத்திரம் - பூரட்டாதி கிரகபாவம் – 18

★ யாழ். இந்து கௌரவ குடும்பம். 1975 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பிறந்த பூசம் நட்சத்திரம் கிரகபாவம் 10 லண்டன் P.R உள்ள மணமகனுக்கு சைவபோசன மணமகள் தேவை. மணமகன் தற்போது வந்துள்ளார்.

★ யாழ். இந்து கௌரவ குடும்பம் உயர் கல்வி கற்பதற்கு லண்டன் சென்றுள்ளார். 1988 ஆம் ஆண்டு சதய நட்சத்திரம் உடைய மணமகனுக்கு லண்டன் P.R உள்ள அசைவ போசன மணமகள் தேவை.

தொடர்பு: 078 301 7290, 021 321 2961

(14620) (45.6.7)



## சேவை நலன் பாராட்டு



திருமதி செந்தில்ராணி முத்துலிங்கம்

*அதிபர்: யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம் இலங்கை அதிபர் சேவை S.L.P.S 2-I*

எமது பாடசாலை அதிபர் திருமதி செந்தில்ராணி முத்துலிங்கம் அவர்கள் ஆசிரியராக 29 வருடங்களும் அதிபராக 12 வருடங்களும் மொத்தம் 41 வருடங்கள் சேவையாற்றி இன்று (04.04.2012) இனிதே ஓய்வுபெறுகின்றார். கஷ்டமான சூழ்நிலையிலும் கூடத் தமது சேவையைத் திறம்பட நடத்திய அதிபரைச் சகல செல்வங்களும் பெற்று நீடூழி காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம். இவர் யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவி ஆவார்.

**சேவை விவரம்**

1. யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாலயம்
   - ஆசிரியர், 25.10.71 - 14.01.74
2. யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
   - ஆசிரிய மாணவி, 15.01.74 - 31.12.75
3. க/கலஹா தமிழ் மகா வித்தியாலயம்
   - ஆசிரியர், 01.01.76 - 02.03.80
4. க/மகியாவ தமிழ் வித்தியாலயம்
   - ஆசிரியர், 03.03.80 - 31.12.81
5. யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
   - ஆசிரியர், 01.01.82 - 01.01.95
6. யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்
   - ஆசிரியர், 02.01.95 - 03.08.2000
   - அதிபர், 04.08.2000 - 16.06.2010
7. யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
   - அதிபர், 17.06.2010 - 06.07.2010
8. யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்-
   - அதிபர், 07.07.2010 - 04.04.2012

**வாழ்த்துவோர்:**

**ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.**

(16407) (6,9,10)



## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**குறிப்பு:** எம்மிடம் புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்பவர்களிடம் திரும்பவும் இறைச்சிக்கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085



## கிளாலி வியாகுலமாதா செபக்கூடம் 50 ஆவது ஆண்டு பெருவிழா



"எல்லாம் நிறைவேறிற்று" என்று யேசு உயிர் விட்டார் பெரியவெள்ளி (06.04.2012) இல் கிளாலி வியாகுலமாதா பதியில் முற்பகல் 10 மணி தொடக்கம் 1 மணிவரை சிலுவைப் பாதை தியானமும் செபவழிபாடும், அன்னதானமும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து

## நிறுவனரின் 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண் 19 ★ 05 ★ 1936



விண் 20 ★ 03 ★ 2007

"நானே உயிர்ப்பும் உயிரும்....." - யேசு

அமரர் **துரையப்பா பிரான்சீஸ் மைக்கல்**

(கலைஞர், ஞானசிருஷ்டி வைத்தியர், யேசுவின் தாயின் ஊழியன்)

**குறிப்பு:** யாழ்ப்பாணம் தனியார் பஸ் நிலையத்திலிருந்து கிளாலி எழுதுமட்டுவாள் பஸ் அன்று காலை 6.45 மணிக்குப் புறப்படும்.

அருள் நேசன் மைக்கல் (மகன்), திருமதி மரிய செபமாலை மைக்கல் (மனைவி), குடும்பத்தினர்.

வியாகுலமாதா செபக்கூடம், கிளாலி.

(16405) (45..)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் சுகாதார வேலைத் திட்டம் 8 மாகாண சபைகளால் நிராகரிப்பு

**சர்வதேச நிதியுதவியின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் தொடர்பான கல்வியை வழங்கும் நோக்கில் சுகாதார அமைச்சால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.**

பாலியல் சுகாதாரம் தொடர்பாக மாணவர்களைத் தெளிவூட்டும் வகையில் சுகாதார அமைச்சால் தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை எட்டு மாகாண சபைகள் நிராகரித்துள்ளன.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியை சப்ரகமுவ மாகாண சபை மாத்திரம் வழங்கியுள்ளது என்று சுகாதாரப் பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நிதியுதவியின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் தொடர்பான கல்வியை வழங்கும் நோக்கில் சுகாதார அமைச்சால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்களுக்கு பாலியலுடன் தொடர்புபட்ட விடயங்களை இங்கிதமாக கற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான விசேட பாடத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தன.

எனினும் இந்த வேலைத் திட்டத்தை எட்டு மாகாண சபைகள் நிராகரித்துள்ளதை அடுத்து, இந்தக் கல்வித் திட்டத்தின் ஊடாக எவ்வித பயனும் இல்லை-என்றார் அவர்.

# இலங்கையருக்கு குவைத்தில் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை

குவைத்தில் எண்ணெய் வளம் மிக்க வளைகுடா மாநில தொழிலாளர் அதிகாரிகளின் எதிர்ப்பால் இலங்கைப் பணியாளர்களுக்கு இதுவரை சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் உள்ள வீட்டுப் பணியாளர்களுக்கு புதிய சட்டதிட்டங்களுக்கு அமைய இந்த மாதம் தொடக்கம் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என குவைத் தூதரகம் அறிவித்துள்ள போது, குவைத் ஜனநாயக தொழிலாளர் அலுவலகம் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் புதிதாகப் பணிபுரிய வரும் இலங்கைப் பணியாளர்களுக்கு 75 குவைத் தினாரும் இரண்டு வருடங்களுக்கு மேல் பணிபுரிந்துள்ளவர்களுக்கு 85 தினாரும் வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தப் புதிய சட்டத்துக்கு ஜனநாயக தொழிலாளர் அலுவலகம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் ஏற்கனவே சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே சம்பள அதிகரிப்புத் திட்டத்தை கைவிடுமாறு குவைத் ஜனநாயக தொழிலாளர் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ந)

## முதலாம் தவணை விடுமுறை நாளை

அனைத்து அரச பாடசாலைகளும் முதலாம் தவணைப் பரீட்சைகள் முடிவடைந்த நிலையில் நாளை வியாழக்கிழமை விடுமுறைக்காக மூடப்படவுள்ளன.

நாளை விடுமுறைக்காக மூடப்படும் அனைத்துப் பாடசாலைகளும் மீண்டும் இரண்டாம் தவணைக்காக 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. (த-86)

## அ.உப அலுவலகம் கீரிமலையில் திறப்பு

கீரிமலை உப அஞ்சல் அலுவலகம் 22 வருடங்களின் பின்னர் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாண அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெயரட்ணம் மேற்படி அலுவலகத்தை திறந்து வைத்தார்.



காங்கேசன்துறை கடற்பரப்பில் விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் சிதைவுகளை அகற்றும் பணி முடிவுற்றுள்ளதாக குறித்த பணியில் ஈடுபட்ட இந்திய நிறுவனமான 'றிசோல்வ் மரைன் குரூப்'பின் கிளை நிறுவனம் அறிவித்துள்ளது.

2011 ஜூன் மாதம் ஆரம்பமான இந்தப் பணியில் புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட 10 கப்பல்களின் சிதைவுகளை கண்டறிந்து மீட்டுள்ளதாகவும் இதற்கு நிறுவனத்தின் அதியுச்ச தொழிநுட்ப, மனித வளம் என்பன பயன்படுத்தப்பட்டதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கப்பல் சிதைவுகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து காங்கேசன்துறை துறைமுக புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 21 சாரதிகள் கைது

காப்புறுதி, வரி மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இன்றி பயணிகள் பஸ்களைச் செலுத்திய நீண்ட தூர போக்குவரத்து பஸ் சாரதிகள் 21பேர் கண்டி பொலிஸ் போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்ட நிலையில் மேற்படி ஆவணங்கள் இன்றி குறித்த பஸ்களை இவர்கள் செலுத்தி வந்துள்ளார்கள் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேற்படி சாரதிகளின் தவறான நடவடிக்கைகள் பற்றி பயணிகள் மற்றும் பிரதேசவாசிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமையவே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேச பொலிஸ் நிலையங்களால் வழங்கப்பட்ட தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்களை அவர்கள் வைத்திருந்ததாகத் தெரிவித்த பொலிஸார், இது தொடர்பில் அந்தந்த பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

இந்த பஸ்கள் கண்டியிலிருந்து அவிசாவளை, வெலிமடை, மஹியங்கனை ஆகிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

# யாழ். விஞ்ஞான சங்கத்தின் 19ஆவது வருடாந்த மாநாடு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 19ஆவது வருடாந்த மாநாடு இன்றும் நாளையும் எதிர்வரும் 9 ஆம் திகதியும் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. 2011-2012 ஆம் வருடத்திற்கான கருப்பொருளாக காலநிலை மாற்றம், என்னும் விடயத்தை முன்னிறுத்தி பல செயற்பாடுகளை மேற்கொண்டு இறுதியில் வருடாந்த மாநாடாக விஞ்ஞான அறிவுசார் விடையங்களை உள்ளடக்கி காலநிலை மாற்றத்தினை முதன்மைப்படுத்தி நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டின் பிரதம விருந்தினராக இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவனத்தில் (intitute of fundamental studies) பணிப்பாளரான வாழ்நாள் பேராசிரியர் சி.பி.திஸநாயக்க கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்த நிகழ்வில் இவ் வருடத்துக்கான பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம் தங்கவிருதை வாழ்நாள் பேராசிரியர் சி.பி.திஸநாயக்கா பெறவிருக்கிறார். இந்த விருதை அவருடைய ஆய்வுப் புலமைக்கும் அவரது ஆளுமைக்கும். இலங்கையின் விஞ்ஞான வளர்ச்சியில் அவருடைய தன்னிகரில்லாப் பங்களிப்புக்குமாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது. இத் தங்க விருதுக்கான உரையாக காலநிலை மாற்றம், நீரின் தரமும் சுகாதாரமும் எனும் தலைப்பினைத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளமை இவ் வருட கருப்பொருளுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக உள்ளது. முதலாம் நாள் நிகழ்வு இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளதால் ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவரையும் நிகழ்வுக்கு வருகை தருமாறு விஞ்ஞான சங்கத் தலைவர் பேராசிரியர் முகுந்தன் கேட்டுள்ளார்.

# தேசிய மலர் தொடர்பில் இணக்கப்பாடு

தேசிய மலர் தொடர் பில் சுற்றாடல் துறை அமைச்சு இணக்கப்பாடொன்றை எட்டியுள்ளது.

சரியான தேசிய மலர் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய நிம்பயாஸ்டெ லாடா என்ற விஞ்ஞானப் பெயரால் அழைக்கப்படும், நீலோற்பமலர் நாட்டின் தேசிய மலரென குறித்த குழு தீர்மானித்துள்ளது என்று உயிர்ப் பல்வகைமை செயலகத்தின் பணிப்பாளர் அஜித் சில்வா குறிப்பிட்டார்.

இதற்கமைய நீலோற்பல மலரின் புகைப்படம் அனைத்து பாடசாலைப் புத்தகங்களிலும் உள்ளடக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மலர் தொடர்பான புகைப்படம் தவறாக பிரசுரிக்கப்பட்டமை தொடர்பில் எழுந்த பிரச்சினையால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் எதிர்வரும் சில வாரங்களில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# வாழ்வு எழுச்சித்திட்டத்தின் விதைகள் நடும் திட்டம்

தென்மராட்சி, ஏப்.4

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவி நெகும (வாழ்வு எழுச்சி) தேசிய இயக்கத்தினர் சிறுபோகத்திற்கான விதைகள் மற்றும் நடுகைப் பொருள்கள் நடுகைத் திட்டம் நாளை காலை மு.ப.9.10 மணிக்கு நாடளாவியரீதியில் நடத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கான விதைகள் நேற்று தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர்களிடமும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களிடம் கையளிக் கப்பட்டன. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தலா 100 பயனாளிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குறைந்தது மூன்று இடங்களில் தேசிய நிகழ்வாக நடத்தப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டு ள்ளது.இவற்றில் பிரதேச இணைப்புக் குழுவின் தலைவர்கள்,மதகுருமார் பங்குபற்றக் செய்ய வேண்டு மெனவும் சுபநேரமான மு.ப.9.10 மணிக்கு அனைத்து பயனாளிகளும் வீட்டுத் தோட்டங்களிலும் நடுகைப் பொருட்களை நடுவதற்கு அறிவுறுத்தப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பிரிவில் நடத்தப்படும் ஆரம்ப நிகழ்வு சமுர்த்தி வங்கி அமைந்துள்ள வளாகத்தில் நடத்தப்படும் என்றும், இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், மதகுருமார், உதவிப் பிரதேச செயலர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டு ள்ளது. (வ-9)

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் மீது கற்களை வீசித் தாக்கி அவர்களை மீன் பிடிக்க விடாமல் இலங்கை கடற்படையினர் விரட்டியுள்ளனர் என்று தமிழக மீனவர்கள் மீண்டும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது குறித்து இந்திய ஊடகத்தில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது:-

இராமேஸ்வரத்தில் இருந்து 500இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் 2,000இற்கும் அதிகமான மீனவர்கள் நேற்று முன்தினம் கச்சத்தீவுக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்தனர்.

மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கற்களை வீசித் தாக்கினர். இதையடுத்து மீன் பிடிக்காமல் வலைகளை எடுத்துக் கொண்டு தப்பித்தால், பிழைத்தால் போதும் என்று மீனவர்கள் நேற்று அதிகாலை கரை சேர்ந்தனர்.

இலங்கை கடற்படையின் அடாவடித் தாக்குதலில் சில மீனவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை யாரும் இதுகுறித்து முறைப்பாடு கொடுக்கவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து மீனவர்கள் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைக் குழு கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததால் அன்றில் இருந்து கடலுக்குப் போகவே பயமாக உள்ளது. கடந்த ஞாயிற்றுக் கிழமையும் எங்களைத் தாக் கினர். நேற்று முன்தினமும் எங்கள் மீது கற்களை வீசி கொலை வெறித் தாக்குதல் நடத்தினர். எனவே, இது போன்ற தாக்குதல்கள் நடக் காமல் இந்திய மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண் டும் - என்றனர். (வ)

## கூ. சங்க பணியாளர்களுக்கான பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 2 ஆம் படி கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள், கணக்காளர்கள், பணியாளர்களுக்கான புதிய சம்பளத்திட்டம் தொடர்பான பயிற்சி நெறி நாளை 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பொது முகாமையாளர்கள், கணக்காளர்கள்,பணியாளர்கள் ஆகியோருக்கு ஊக்குவிப்பு படி, புதிய சம்பளத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பயிற்சி வழங்கப்படவுள்ளது. (வ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப் 04
கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு.

**கோண்டாவில் இந்து மகளிர் வித்தியாலயம்**

உ.பகீரதன் 4ஏ,பி, 2சி,எஸ், ஸ்ரீ.பவோஜன் 2ஏ,5பி,சி,எஸ், சு.பிறின்சிகா 2ஏ,பி,சி,4எஸ், அ.ராம்டினாத் ஏ,2பி,3சி,2எஸ், தே.விஜிதரன் ஏ,4சி,4எஸ், க.விதுர்ஷனா ஏ,பி,சி,5எஸ், வ.ஜிந்துசன் 2பி,3சி,4எஸ்,

**செங்குந்தா இந்துக் கல்லூரி**

ஜெ.சிந்துஜா 3ஏ,3பி, 3சி, சி.சிரானிசுகந்திகா 3ஏ, 4பி,சி,எஸ், பா.பானுசன் 2ஏ,3பி,3சி, பி.சூரியதாஸ் 2ஏ,பி,2சி,3எஸ், மு.சியானி 2ஏ,பி,2சி,3எஸ், பு.உமேஸ்வரன் ஏ,2பி,5சி, உ.லபேசன் ஏ,5சி,2எஸ், உ.அசோதன் ஏ,பி,3சி,4எஸ், சி.சுமன் ஏ,4சி,3எஸ், அ.ஜீவாகரன் ஏ,4சி,2எஸ், சு.சுரேக்கா 2பி,3சி,2எஸ், ரெ.அனுசியா ஏ,பி,5எஸ், ஜீ.சஜீவன் ஏ,3சி, 4எஸ், நா.கஜேந்திரன் ஏ,சி, 4எஸ், நா.கீர்த்தினி ஏ,2சி,5எஸ்.

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி (ஆங்கில மொழி மூலம்)**

ஆர்.தேனுஷன் 9ஏ, ரி.ஆதிரை 8ஏ,பி, எஸ்.பிரிசில்லா 6ஏ,2பி,சி, எம்.சர்வேசன் 6ஏ,2பி,சி, என்.தனுசிகா 6ஏ,3பி, எஸ்.சித்திராங்கி 4ஏ, 3பி,2சி, எஸ்.பைரவி 3ஏ,4பி,2சி,

**(தமிழ் மொழி மூலம்)**

ஆர்.தயாளன் 5ஏ,2பி, சி,எஸ், ரி.துவாரகா 5ஏ,பி, 3சி, எஸ்.ரூபகாணன் 4ஏ, 4பி,சி, எஸ்.தர்சிகா 4ஏ,3பி, 2சி, எம்.தனுஷ்ராஜ் 4ஏ,2பி, 2சி,எஸ், கே.கௌசிகா 3ஏ,பி,4சி,எஸ், எம்.நிரோஜா 3ஏ,3பி,சி,எஸ், எம்.மதுசன் 3ஏ,4பி,சி,எஸ்.

# வருமான மேற்பார்வையாளர் பதவிகள் இனிமேல் இல்லை

## அவர்களுக்கு வருமான பரிசோதகர் பதவி

யாழ்ப்பாணம், ஏப்.4
வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் இருந்த வருமான மேற்பார்வையாளர் பதவிகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சால் நீக்கப்பட்டு விட்டன. இந்தப் பதவிகளில் கடமையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களும் வருமான பரிசோதகர் தரம் 3 இற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த உத்தியோகத்தர்களுக்கான சேவைமாற்ற உள்ளீர்ப்புக் கடிதங்கள் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் பரிந்துரையுடன் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

கடந்த டிசெம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

வருமானப் பரிசோதகர் பதவிகளுக்கான சேவைகள் பிரமாணக் குறிப்புகள் கடந்த வருடம் மாகாண உள்ளூராட்சி அமைச்சால் வெளியிடப்பட்டன. இனி வருங்காலங்களில் பட்டதாரிகளுக்கே இந்தப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பதவிகளுக்கான, போட்டிப் பரீட்சைக்குக் கடந்த வருடம் விண்ணப்பங்கள் பட்டதாரிகளிடமிருந்து திறந்த போட்டிக்கும், பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்த வருமான மேற்பார்வையாளரிடமிருந்து மட்டுப்படுத்தப்பட்ட சேவைக்கும் கோரப்பட்டிருந்தன.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி வருமான மேற்பார்வையாளர்/ வருமான பரிசோதகர் சங்கத்தின் முயற்சியால் வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் அனைத்து வருமான மேற்பார்வையாளர்களும் வருமான பரிசோதகர்களாக உள்ளீர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் வடக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் 59 வருமான மேற்பார்வையாளர்கள் வருமானபரிசோதகர் பதவிகளுக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூராட்சி சபைகளில் வெற்றிடமாகக் காணப்படும் வருமான பரிசோதகர் தரம் 3 பதவிகளுக்கு நியமிக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

வருமான பரிசோதகர் தரம் 3 இற்கு உள்ளீர்க்கப்பட்டவர்கள், நான்கு வருடங்களுக்குள் வினைத்திறன் காண் பரீட்சை சித்தி எய்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ம-9)

# அல்லைப்பிட்டியில் கிராமிய சுகாதார நிலையம்

யாழ்ப்பாணம், ஏப்.4
அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்டிருந்த கிராமிய சுகாதார நிலையம் கடந்த சனிக்கிழமை முதல் பொது மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னதாக சுகாதார நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு ஆளணிப்பற்றாக்குறை மற்றும் உபகரணங்கள் போன்றவை சீர்செய்யப்படாத காரணத்தால் நிலையத்தின் பணிகள் தடைப்பட்டிருந்தன.

எனினும் கடந்த சனிக்கிழமை முதல் பொதுமக்கள் பாவனைக்கு கிராமிய சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளதால் அந்தப்பகுதி மக்கள் நன்மை அடைந்து வருகிறார்கள்.
(வ-14)

# மணவாளக் கோல விழா

யாழ்ப்பாணம்,ஏப்.4
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் மணவாளக்கோலத்திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பரிவார மூர்த்திகளுக்கு விசேட பூசைகளும் அம்பாளுக்கு 1008 சங்காபிடேகமும் நடைபெற்று மு.ப 10.30 மணியளவில்அம்பாள் உள்வீதி, வெளி வீதி உலாவந்து அடியார்களுக்கு அருள்புரிவார். தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.
(வ)

# 'ஏ' தர வீதி சேதம்: விபத்துகள் ஏற்படும் அபாயம்

ஏ-தர வீதிகளில் ஒன்றான நுணாவில் கனகன்புளியடி வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதால் வீதியைப் பயன்படுத்துவோர் விபத்துக்களைச் சந்திக்க வேண்டியுள்ளது என்று இந்த வீதியைப்பயன்படுத்தும் மக்கள் யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளருக்கு இது குறித்து முறையிட்டுள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்த வீதி நீண்ட காலமாக குன்றும், குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் வாகனங்களில் செல்வோர் வீதியோரத்தை பயன்படுத்த வேண்டியுள்ளது.

ஏ-9 வீதியிலிருந்து மீசாலை, புத்தூர் சந்தி-கனகன் புளியடி சந்தி, நுணாவில் சந்தி ஊடாக ஏ-9 இற்கு செல்லும் இந்த வீதியில் தினமும் நூற்றுக் கணக்கான வாகனங்கள் பயணிக்கின்றன.

ஏ-9 வீதி அகலிப்புப் பணிகள் இடம் பெறுவதால் கொழும்பிலிருந்து வரும் பெருமளவு வாகனங்கள் குறுகிய தூரமாக இந்த வீதியையே பயன்படுத்துகின்றன. நுணாவில் சந்தியிலிருந்து கனகன் புளியடிச் சந்தி வரையில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்களுக்கும் சரசாலை, மட்டுவில், வேம்பிராய், மந்துவில், மீசாலை வடக்கு, கல்வயல் போன்ற பகுதிகளைச் சேர்ந்த அயல் கிராம மக்களும் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர் - என்றார்.

முறைப்பாட்டின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
(ம-9)

**தருவது வித்தியா**

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**நாளை**

*பங்குனி 23 வியாழக்கிழமை 05.04.2012*
*திதி: சதுர்த்தசி பி.இ. 03.53 வரை*
*நட்சத்திரம்: உத்தரம் பி.இ. 02.58 வரை*
*சுபநேரம்: 07.38- 09.08 வரை,*
*ராகு காலம்: 01.38- 03.08 வரை*

**மேடம்:** இன்று சில காரணங்களுக்காக அவசர அவசரமாகப் பணிகளைச் செய்து முடிப்பீர்கள். உறவினர் ஒருவரின் சந்திப்பு அவர்கள் மூலம் சில காரியங்களை மேற்கொள்வதாகவும் இருக்கும். சில செலவுகளுக்காக சேமிப்பில் இருந்து எடுக்க வேண்டியிருக்கும். தொழில் கூட்டாளிகளுடன் கருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடுக்காமல் கொண்டு செல்லுங்கள்.

**இடபம்:** இன்று உணவைக் கூட பொருட்படுத்தாமல் காரியங்களைச் செய்து முடிக்க வேண்டிய நிப்பந்தங்கள் ஏற்படும். எதிர்பார்த்த வரவுகள் வந்தபோதும், எதிர்பாராத செலவுகளால் சிரமப்படுவீர்கள். தொழிலில் வளர்ச்சி காண திட்டமிடுவீர்கள். வெளியூர் சென்று முடிக்க வேண்டிய ஒரு பணியை தொலைபேசி மூலமாகவே செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** இன்று தாங்கள் செய்ய நினைத்தது ஒன்று, செய்து முடித்தது மற்றொன்றாக இருக்கும். இருப்பினும், பணிகள் முடிந்ததால் சந்தோஷப்படலாம். சில காரியங்களில் மனைவியின் குறுக்கீடுகள் மனநிலையில் எரிச்சலை ஏற்படுத்தலாம்; சற்று நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். பணியில் சக பணியாளர்களின் செயற்பாடுகள் அதிருப்தி தரும்.

**கடகம்:** இன்று சாமர்த்தியமான பேச்சுக்களால் தங்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். குடும்ப விவகாரங்களில், தாங்கள் ஒரு முடிவு எடுத்து அதை மனதில் வைத்துக் கொண்டு அந்த முடிவை எட்ட பல்வேறு காரணங்களையும், காரியங்களையும் மேற்கோள் காட்டிகொண்டு செல்வீர்கள். பழைய கடன் ஒன்று உடனடியாகத் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

**சிங்கம்:** இன்று மனதில் உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். ஒவ்வொரு காரியங்களிலும் அலைச்சல் இருந்தபோதும், அதை பொருள் படுத்தாது எல்லாம் அனுபவமே என்று மனதில் எண்ணிக் கொண்டு செய்து முடிப்பீர்கள். நண்பர் ஒருவர் அவருடைய பிரச்சினைக்குத் தீர்வு காண தங்களின் உதவியை நாடி வருவார்.

**கன்னி:** இன்று தீவிர சிந்தனையோடு காணப்படுவீர்கள். சுற்றியிருப்பவர்களின் கருத்துக்களைக் கேட்ட போதும், முடிவு தங்களுடையதாக இருக்கும். சகோதரர்களால் பாராட்டப்படுவீர்கள். மனைவியின் உடல்நிலை குறித்து கவலை கொள்வீர்கள். எதிர்பாராத விதமாக மாலையில் கோயிலுக்குச் செல்ல நேரிடும்.

**துலாம்:** இன்று புதிய அறிமுகங்களால் ஆதாயங்கள் கிடைக்கப்பெறுவீர்கள். நேற்றைய விடுபட்ட பணி ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள். குழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்றும் பொருட்டு, செலவுகள் மேற்கொள்வீர்கள். உடன்பிறப்புகளின் முன்னேற்றத்துக்காக பெற்றோருடன் கலந்துரையாடுவீர்கள்.

**விருச்சிகம்:** இன்று உடல்நிலையில் திருப்தியற்ற போக்கு என்றபோதும் வேலைகளை பிற்போடாமல் செய்து முடிப்பீர்கள். பொருளாதாரத்தை கணக்கில் கொண்டு, சில வகையில் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். மாலையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள திட்டமிடுவீர்கள். வெளிவட்டார பழக்கவழக்கங்கள் விரிவடையும்.

**தனுசு:** இன்று தங்களின் எண்ணங்கள் நிறைவேறும். கோபதாபங்களை வெளிப்படுத்தாமல் குடும்பத்திலும் வெளியிடங்களிலும் செயற்படுவீர்கள். சில காரியங்களுக்கு பணங்கள் தேவைப்பட்ட போதும், அது இல்லாமல் காரியங்களைச் செய்து முடிக்க எண்ணுவீர்கள். ஓரளவுக்கு நிறைவேறவும் செய்யும்.

**மகரம்:** இன்று அமைதியான செயற்பாடுகள் கொண்ட நாளாக இருக்கும். கடந்த நாள்களில் தங்களை குறை சொன்ன நபர்கள் மத்தியில் பாராட்டும்படியான ஒரு காரியத்தை மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த பணம் சற்று தாமதத்துக்கு பின் கைக்கு வந்து சேரும். தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் தங்களின் முடிவுகளை மறுபரிசீலனை செய்து கொள்ள வேண்டியிருக்கும்.

**கும்பம்:** இன்று உற்சாகத்தோடு பணிகளை மேற்கொள்வீர்கள். உடல்நிலையில் சிறு தொந்தரவுகளுக்காக அதிகம் யோசிப்பீர்கள். உடன்பிறப்பு கொடுத்த வாக்கைக் காப்பாற்றாததால் எதிர்பாராதவிதமான சிக்கலில் சிக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். மாலைக்கு மேல் திடீர் பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**மீனம்:** இன்று பிரியமானவர்களின் சந்திப்பு இருக்கும். எதிர்பார்த்த ஒரு விடயம், எதிர்பாராமல் கைகூடும். தாய் வழியில் ஏற்பட்ட மனச்சங்கடம் நீங்கும். பணியில் பொறுப்புகள் [illegible] மன [illegible]கள். பொழுது போக்கு விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | 7 |
| 7 | 6 | | | | | 5 | | 2 |
| | | | 1 | | 6 | | 4 | 9 |
| 4 | 2 | | | 6 | 3 | | | |
| 5 | | 6 | 4 | | 7 | 8 | | 3 |
| | | | 2 | 9 | | | 7 | 6 |
| 8 | 5 | | 7 | | 4 | | | |
| 6 | | 2 | | | | | 3 | 4 |
| 9 | 7 | | | | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 6 | 9 | 7 | 5 | 2 | 1 | 8 |
| 2 | 8 | 7 | 1 | 3 | 6 | 9 | 5 | 4 |
| 1 | 9 | 5 | 4 | 2 | 8 | 3 | 7 | 6 |
| 5 | 6 | 8 | 3 | 1 | 7 | 4 | 2 | 9 |
| 9 | 7 | 4 | 8 | 6 | 2 | 5 | 3 | 1 |
| 3 | 2 | 1 | 5 | 9 | 4 | 6 | 8 | 7 |
| 6 | 1 | 3 | 7 | 5 | 9 | 8 | 4 | 2 |
| 8 | 5 | 2 | 6 | 4 | 1 | 7 | 9 | 3 |
| 7 | 4 | 9 | 2 | 8 | 3 | 1 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Net Cafe க்குரிய தளபாடங்கள்
(Cabinet Chairs)
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 662 3824
021 222 4040

**வேலையாள் தேவை**
O/L, A/L தராதரம் உடைய எழுதுவினைஞர் (பெண்) தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம் நல்லூர் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.
( கொக்குவில், அரசடி சந்திப் பகுதி உட்பட)
தொடர்பு : ரமணன் கட்டடப்பொருள் விற்பனை
84, ஐயனார் கோயிலடி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
T.P : 021 4923417. 021 2229296

## விடுதிகளுக்கு காலக்கெடு

சுகாதாரச் சீர்கேடு அடிப்படை வசதிகள் இன்மை, கலாசாரச் சீரழிவு, சட்ட விரோத மதுப்பாவனை, நகரசபை அனுமதி பெறாமை உட்பட சட்டரீதியான காரணங்களால் மூடப்பட்ட விடுதிகள் இந்தக் குறைகளை நிவர்த்தி செய்து நகரசபையில் பதிவு செய்து இயங்க எதிர் வரும் 19 ஆம் திகதி வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (15-400)

**வெயிலுக்கு இதமான பலமான தோழன்**
MIRA மின் விசிறிகள்




தேர்ந்தெடுக்க பலவிதமாதிரிகளிலும் மற்றும் மனங்கவர் வர்ணங்களிலும் அருகில் உள்ள விற்பனை முகவரை அறிந்துகொள்வதற்கு அழையுங்கள் 077 8050698 2942422

**Telesee Marketing**
615, Negombo Road, Mabola, Wattala.

உ



## யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா - 2012

| | | | | |
|---|---|---|---|---|
| 05-04-2012 | வியாழன் | கொடியேற்றம் | நண்பகல் | 12.00 மணி |
| 09-04-2012 | திங்கள் | தங்கரதம் | மாலை | 07.00 மணி |
| 12-04-2012 | வியாழன் | வேட்டை | காலை | 07.30 மணி |
| 12-04-2012 | வியாழன் | சப்பறம் | மாலை | 07.00 மணி |
| 13-04-2012 | வெள்ளி | தேர் | காலை | 09.00 மணி |
| 14-04-2012 | சனி | தீர்த்தம் | காலை | 10.00 மணி |
| 15-04-2012 | ஞாயிறு | பூங்காவனம் | மாலை | 07.00 மணி |

பகல் திருவிழா தினமும் வசந்த மண்டபப் பூசை காலை 11.00 மணி தொடர்ந்து உள்வீதி உலா நடைபெறும்.

மாலைத் திருவிழா தினமும் வசந்த மண்டபப் பூசை மாலை 6.30 மணி தொடர்ந்து உள்வீதி, வெளி வீதி உலா நடைபெறும்.

திருவிழா நாட்களில் தினமும் நண்பகல் 12.00 மணிக்கு கணபதி கலாசார மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்.

இங்ஙனம்
பிள்ளையார் பணியில் நிற்கும் கோயில் நிர்வாகம்

விளம்பர அன்பளிப்பு: **நியூ பிரியங்கா நகைமாளிகை**
02G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
69, யாழ் வீதி, (A9 வீதி) கச்சேரி முன், கிளிநொச்சி.

**CSC-ASIAN COMPUTER EDUCATION**
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
**புத்தாண்டு சிறப்புக் கட்டணச்சலுகையுடன்**
நம்பிக்கையும் கல்விச் சேவையும் 18 வருட
புதிய டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பம்
- Advanced Diploma in Hardware & Networking
- Tally financial Accounting Programme
- Web Design & Development
- Dip. in Computer Application
- Advanced Java Programming
- Adv. Diploma in Digital Pre-press
- Diploma in Digital Video Production

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சி, பாடப்புத்தகங்கள் மற்றும் சாண்றிதழ்கள்
**யாழ். நகரில்**
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677
**நெல்லியடியில்**
கொடிகாமம் வீதி,
T.P : 021-2262399
**சாவகச்சேரியில்**
230, கண்டி வீதி,
T.P : 021-2270267

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 . 11 . 1931
விண்ணில் 21 . 03 . 2008



### திருமதி அன்னம்மா தியாகராஜா
(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)

**திதி: பூரணை – 06.04.2012**

பத்து மாதம் சுமந்து எமைப் பக்குவமாய் வளர்த்தெடுத்து
பார்போற்ற நாம் வாழ பல வழிகள் காட்டி விட்டு
இப்புவி விட்டேகி ஈரிரு ஆண்டுகள் ஆனது அம்மா!
எத்தனை யுகம் ஆனாலும் எம் உயிருள்ள வரை
நெஞ்சமதில் நினைவாக நீ இருப்பாய் தாயே!
நிலையான உன் நினைவும், பாசமும் நீக்கமற
நினைந்திருக்கும் அம்மா!
இன்நாளில் உன் ஆத்மா சாந்திபெற இறைவனை நாம்
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நின் ஆத்ம சாந்திக்காய் அங்கலாய்க்கும்,
அன்புக் கணவர்: வை. தியாகராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
சத்தியபாமா ஸ்ரீகரன் குடும்பம், சிவானந்தராஜா குடும்பம்,
பாஸ்கரராஜா குடும்பம், சிவசோதிராஜா குடும்பம்,
சிவனேசராஜா குடும்பம், ரவீந்திரராஜா குடும்பம், பேரப்பிள்ளைகள்.
புத்தூர் மேற்கு, புத்தூர்

## காணவில்லை



முதலில் தகவல் அளிப்பவர்களுக்கு சன்மானமாக ரூபா **100,000 /=** வழங்கப்படும்

மூக்கம்பிட்டி, கோவளம், காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட

### சிவஞானம் ரவிச்சந்திரன்

வயது 42 (PARTNER-EDNA STORES, ஐந்துலாம்புச் சந்தி, கொழும்பு-11), Colombo Residence-Umpichy Place, Wolfendhal Street, Colombo-13) என்பவர், இறுதியாக 29.03.2012 அன்று இரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறப்பட்டுச் சென்றவேளையிலிருந்து காணவில்லை. இவரைப் பற்றித் தகவல் அறிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தினுடனோ தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி:**
**0770623227 / 0777732893**

(C525) (6,14,10)

தகவல்: புஸ்பராசா (மச்சான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதவனும் அதிசயமும் பளையில் சம்பியன்

பரபரப்பாக நடைபெற்ற இறுதியாட்டங்களில் எதிரணிகளைத் தோற்கடித்து ஆண்கள் பிரிவில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டின.

தென்மராட்சி, ஏப்.4

பளை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றது.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டன.

இதில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றியீட்டியது.

பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புலோப்பளை சென்.பீற்றர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றியீட்டியது. (ங-23)



# ஊர்காவற்றுறை கோட்ட மெய்வன்மை முடிவுகள்

**ஈட்டியெறிதல்**

1 ஆம் இடம்- டி.பிரசாந்- ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

**4x 100 அஞ்சலோட்டம்**

1 ஆம் இடம்- ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

2 ஆம் இடம் - நாரந்தனை றோ.க.த.க.

3 ஆம் இடம்- எழுவைதீவு முருகவேள் வித்தி.

**4x 400 அஞ்சலோட்டம்**

1 ஆம் இடம்- ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

2 ஆம் இடம் - எழுவைதீவு முருகவேள் வித்தி.

3 ஆம் இடம்- நாரந்தனை றோ.க.த.க.

**17 வயதுப் பெண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

1ஆம் இடம் எஸ்.ஜெகப்பிரியா -சென்.மேரிஸ் றோ.க. பெண்கள் பாடசாலை.

2ஆம் இடம் என்.மேரிஸ் டெல்லா - கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர்

3ஆம் இடம் ஏ.சுஜித்திரா - கரம்பொன் சண்முகநாத வித்தி.

**200 மீற்றர் ஓட்டம்**

1ஆம் இடம் எஸ்.ஜெகப்பிரியா - சென்.மேரிஸ் றோ.க. பெண்கள் பாடசாலை.

2 ஆம் இடம் ரி.சோபனா - எழுவைதீவு முருகவேள் வித்தி.

3ஆம் இடம் ரி.மேரி புஸ்பா - எழுவைதீவு முருகவேள் வித்தி

**400 மீற்றர்**

1ஆம் இடம் கே.கிருசா சென்.மேரிஸ் றோ.க.பெண்கள் பாடசாலை.

2ஆம் இடம் எம்.இசுர்ஜா - அனலைதீவு சதாசிவ வித்தி.

3ஆம் இடம் ஜெ.சரோஜினி - நாரந்தனை றோ.க.த.க

**800 மீற்றர் ஓட்டம்**

1ஆம் இடம் கே.கிருசா - சென்.மேரிஸ் றோ.க.பெண்கள் பாடசாலை

2ஆம் இடம் எம்.இசுர்ஜா - அனலைதீவு சதாசிவ வித்தி.

3ஆம் இடம் ஜெ.புனிதா - எழுவைதீவு முருகவேள் வித்தி.

**1500 மீற்றர் ஓட்டம்**

1ஆம் இடம் ஏ.அபினயா - அனலைதீவு சதாசிவ வித்தி.

2ஆம் இடம் ஏ.சாந்தினி - கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர்.

3ஆம்இடம்ரி.மேரிதெரேசா - எழுவைதீவு முருகவேள் வித்தி.

**நீளம்பாய்தல்**

1ஆம் இடம் கே.கிருசா - சென்.மேரிஸ் றோ.க. பெண்கள் பாடசாலை.

2ஆம்இடம்கே.பவதாரிணி - அனலைதீவு சதாசிவ வித்தி.

3ஆம் இடம் ஏ.எபிசியா- அனலைதீவு சதாசிவ வித்தி.

**உயரம்பாய்தல்**

1ஆம் இடம் ரி.சோபனா - எழுவைதீவு முருகவேள் வித்தி.

2ஆம் இடம்- ஏ.ரம்சி - கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர்.

3 ஆம் இடம்- இசுர்ஜா - அனலைதீவு சதாசிவ வித்தி.

**குண்டெறிதல்**

1 ஆம் இடம்- மேரிஸ் ரெல்லா - கரம்பொன் சிறிய புஷ்பமகளிர்.

2ஆம் இடம்- கெ.கோபிகா- அனலைதீவு சதாசிவ வித்தி.

3 ஆம் இடம்- வி.சஞ்சிதா- எழுவைதீவு முருகவேள் வித்தி.

(தொடரும்)




நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட, பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியின்போது உத்தியோகத்தர்களுக்கு இடையிலான போட்டியும் நடைபெற்றது. இந்தப் போட்டிக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் நடுவராக நெறிப்படுத்தினார். (ங-86)


# வெல்லுங்கள் ரூ. 5,000/=

## உங்களுக்கான கேள்வி இதுதான்...

ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் மகாஜனா, ஸ்கந்தா அணிகள் மோதும் 12ஆவது "வீரர்களின் போரில்" வெற்றிபெறும் அணி எது?

- சரியான விடையை கீழே பிரசுரமாகும் கூப்பனில் எழுதி மகாஜனாக் கல்லூரி மைதானம், ஸ்கந்தாக் கல்லூரி, உதயன் அலுவலகம் ஆகிய இடங்களில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுங்கள்.
- விடைகளை ஏப்ரல் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் பெட்டிகளில் இடவேண்டும். அதற்குப் பின்னர் வரும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
- சரியான விடை அளிப்பவர்களில் இருந்து வெற்றியாளர் ஒருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு ரூபா.5,000/= பணப்பரிசு வழங்கப்படும்.
- உதயனில் பிரசுரமாகும் கூப்பனில் எழுதப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

உதயன்

ஏப்ரல் 6ஆம், 7ஆம் திகதிகளில் மகாஜனா, ஸ்கந்தா அணிகள் மோதும் 12 ஆவது "வீரர்களின் போரில்" வெற்றி பெறும் அணி எது?

........................


# தென்மராட்சிப் பிரதேச குழுநிலைப் போட்டிகள்



தென்மராட்சி, ஏப்.4

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான குழுநிலை போட்டிகளின் கிரிக்கெட், கபடி, வலைப் பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெவ்வேறு இடங்களில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகத்தை 7 விக்கெட்டுக்களாலும் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் சாவகச்சேரி இந்து அணி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை 3 விக்கெட்டுக்களினாலும் வெற்றி பெற்று சம்பியனாகின.

ஆண்களுக்கான கபடிப் போட்டியில் சாவகச்சேரி இந்து அணி மீசாலை ஸ்ரீ விநாயகர் அணியை தோற்கடித்து சம்பியனாகியது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் வளர்மதி வி.க அணி சாவகச்சேரி இந்து அணியை தோற்கடித்தது. மட்டுவில் மோகனதாஸ் வி.க மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் வி.க அணி கைதடி குமரன் வி.க அணியை தோற்கடித்து பிரதேச கரப்பந்தாட்ட சம்பியனாகியது. (ங-9)

# இலங்கையில் மேசைப்பந்தாட்டம் வளர்த்தெடுக்க நடவடிக்கை

## ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி

வலி.வடக்கு, ஏப்.4

இலங்கையில் மேசைப் பந்தாட்டத்தை வளர்த்தெடுக்கும் முகமாக பாடசாலை மட்டத்தில் மேசைப் பந்தாட்டத்தை ஊக்குவிக்கவும் மேலும் பாடசாலை மட்டத்தில் பயிற்சிகளை வழங்கவும் இலங்கை பூராகவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உள்ளக விளையாட்டுகளை இலங்கையில் பிரபலப்படுத்தும் திட்டத்தின் கீழேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இலங்கை நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கல்வி அமைச்சின் பிரதி அமைச்சர் மற்றும் இலங்கை மேசைப் பந்தாட்ட சங்கத்தின் தலைவர் உறுப்பினர்களிடையே இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வடமாகாண கல்வி வலயங்களில் இருந்து மேசைப்பந்தாட்டத்துக்கான பயிற்றுவிப்பாளர்கள் வட மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரினால் தெரிவு செய்யப்பட்டு வலய ரீதியாக பாடசாலைகளுக்கான பயிற்சிகளை வழங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற் கட்டமாக அனைத்து கல்வி வலயங்களில் இருந்து குறிப்பிட்ட பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு முதற் கட்டமாக பத்துப் பாடசாலைகளுக்கு மேசைப்பந்தாட்ட மேசைகள் வழங்கப்படுவதுடன் பயிற்றுவிக்கப்பட்ட மேசைப்பந்தாட்ட ஆசிரியர்கள் மூலம் உரிய பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ங-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மஹேல சதம் அடித்தாலும்

# இலங்கை போராட்டம்





கொழும்பு, ஏப்.4

அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனவின் சதமும், சமரவீரவின் அரைச் சதமும் கைகொடுக்க இலங்கை அணி ஓரளவுக்கு கௌரவமான இலக்கை நோக்கி நகர்கிறது.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. எனினும் இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸைப் போலவே இரண்டாவது டெஸ்போட்டியின் முதலாவது இன்னிங்ஸிலும் இலங்கைத் துடுப்பாட்ட வீரர்கள் மறுபடியும் கோட்டைவிட இலக்குகள் மளமளவெனச் சரிந்தன.

இலங்கை அணியில் முதல் மூன்று இலக்குகளையும் இங்கிலாந்தின் ஆரம்பப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்ஸன் பிடுங்கி எறிந்தார். அவரின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திரிமன்னே 8 ஓட்டங்களுடனும் டில்சான் 14 ஓட்டங்களுடனும் வெளியேறினர் இந்த நிலையில் இங்கையின் முன்னாள் தலைவர் குமார சங்ககார களம் இறங்கிய வேகத்திலேயே மைதானத்தை விட்டு வெளியே வந்தார். அன்டர்ஸன் வீசிய முதாவது பந்தை இலக்குக் காப்பாளரிடம் பிடி கொடுத்து ஓட்டம் எதனையும் பெறாமல் சங்ககார வெளியேறிய போது இலங்கை அணி 200 ஓட்டங்களையாவது எட்டுமா என்ற கேள்வியே இலங்கை ரசிகர்களிடம் எழுந்தது. எனினும் முதல் போட்டியின் முதல் இன்னிங்ஸில் சதம் அடித்து அணியை தூக்கி நிறுத்திய போட்டியிலும் இங் ... பம்சம் செய்து, சதம் அடித்து 216 பந்துகளில் 105 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அவருக்கு மறுமுனையில சமரவீர நல்ல ஒத்துழைப்புக் கொடுத்து ஆடினார். அதன் பின்னர் சமரவீர அரைச்சதம் அடித்த கையோடு ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் காயம் காரணமாக விளையாடாது இருந்த, இலங்கை அணியின் உபதலைவர் அஞ்சலோ மத்தியூஸ் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த அணியின் ஓட்ட எண்ணிக்கை சீரான வேகத்தில் அதிகரித்தது. எனினும் இலங்கை அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். சுவான். சதமடித்து அணியின் நிலையை தூக்கி விட முனைந்துகொண்டிருந்த மஹேல ஜெயவர்த்தன சுவானின் சுழலில் வீழ்ந்தார். அதன் பின்னர் பிரசன்ன ஜெயவர்த்தனவும் நிலைக்கவில்லை. 7 ஒட்டங்களைப் பெற்றிருந்த வேளை பின்னின் பந்தில் அவர் வெளியேறினார். ஆட்ட நேர நிறைவில் களத்தில் மத்தியூஸ் 41 ஓட்டங்களுடனும் ரந்தீவ 5 ஓட்டங்களுடனும் நின்றனர்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரவுள்ளது. இரண்டாவது டெஸ்ட் போட்டியை இலங்கை வெல்லும் பட்சத்தில் ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்தின் முதலிடம் பறிபோய்விடும். எனவே இரண்டாம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்தின் வேகம் இன்னும் அதிகரிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்தின் முன்னணி பந்து வீச்சாளர் ஸ்ருவட் புறோட் காயம் காரணமாக விலகியதால் அவரின் இடத்துக்கு பின்னும், மொன்டி பனேஸருக்குப் பதிலாக பிரஸ்னனும் அணியில் இடம்பெற்றிருந்தனர்.இவர்கள் இருவரும் தலா ஒரு இலக்கினை வீழ்ந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங)

**இலங்கை எதிர் இங்கிலாந்து** — கொழும்பு சரவணமுத்து மைதானம்

இலங்கை 238/6 (90)

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| திரிமன்னே | lbw b அன்டர்சன் | 8 | 26 | 1 | 0 |
| டில்ஷான் | c பிரையர் b அன்டர்சன் | 14 | 16 | 3 | 0 |
| சங்ககார | c ஸ்ட்ரோஸ் b அன்டர்சன் | 0 | 1 | 0 | 0 |
| மஹேல | lbw b சுவான் | 105 | 216 | 11 | 1 |
| சமரவீர | lbw b பிரஸ்னன் | 54 | 129 | 5 | 0 |
| மத்தியூஸ் | (ஆட்டமிழக்காமல்) | 41 | 120 | 4 | 0 |
| பிரசன்ன ஜெயவர்த்தன | c பிரையர் b பின் | 7 | 19 | 1 | 0 |
| ரந்தீவ் | (ஆட்டமிழக்காமல்) | 5 | 13 | 1 | 0 |

இலக்கு இழப்பு: 1-21, 2-21, 3-30, 4-154, 5-216, 6-227 — உதிரிகள் 4; மொத்த ஓட்டங்கள் 238

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அன்டர்சன் | 17 | 2 | 52 | 3 |
| பின் | 18 | 3 | 43 | 1 |
| பிரஸ்னன் | 15 | 2 | 32 | 1 |
| பட்டேல் | 16 | 3 | 32 | 0 |
| சுவான் | 22 | 2 | 71 | 1 |
| பீற்றர்ஸன் | 02 | 0 | 4 | 0 |

# விலகினார் சச்சின்

சச்சின் நீண்ட காலமாக கால் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இதன் காரணமாக ஐ.பி.எல்.தொட ரில் முழுமையாக பங்கேற்க இயலாது என்ற நிலையில் தலைமைப் பதவியில் இருந்து விலகும் முடிவை எடுத்திருக்கலாம்.



மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பதவியை ஹர்பஜன் வசம் ஒப்படைத்தார் சச்சின். நட்சத்திர வீரரான இவர், அணித்தலைமைப் பொறுப்பில் இருந்து திடீரென விலகியது பல்வேறு சந்தேகத்தை கிளப்பியுள்ளது. ஐந்தாவது ஐ.பி. எல். 'ரி-20' கிரிக்கெட் தொடர் சென்னையில் இன்று தொடங்குகிறது. இதில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக சச்சின் இருந்தார். இவர் திடீரென அணித்தலைமைப் பதவியை ஹர்பஜன் சிங்கிடம் வழங்கும்படி, உரிமையாளர் நீடா அம்பானியிடம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சச்சின் கூறுகையில், மும்பை இந்தியன்ஸ் அணியை எனது குடும்பமாக கருதுகிறேன். தற்போது எனக்கு அணித் தலைமைப் பொறுப்பில் இருந்து சிறிது ஓய்வு தேவைப்படுகிறது. அணி உரிமையாளர்கள் முகேஷ், நீடா அம்பானியிடம் ஆலோசித்தேன். அணித்தலைமைப் பொறுப்பை ஹர்பஜன் சிங்கிடம் வழங்கும்படி தெரிவித்தேன். சிறந்த அனுபவ வீரரான ஹர்பஜன் அணியை திறம்பட வழிநடத்துவார் என்று நம்புகிறேன். மும்பை அணிக்கு தலைவராகும் தகுதி அவரிடம் உள்ளது, என்றார். மும்பை இந்தியன்ஸ் அணி உரிமையாளர் நீடா அம்பானி கூறுகையில், அணித்தலைமைப் பொறுப்பில் இருந்து சச்சின் விலகியது வருத்தமான விஷயம். இவரது முடிவு சரியாக இருக்கும் என்பதால், அதனை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றார்.

ஹர்பஜன் சிங் கூறுகையில் மும்பை அணியின் தலைமைப் பொறுப்பை சச்சின், எனக்கு வழங்கியதைப் மிகப் பெரும் கௌரவமாக கருதுகிறேன். மும்பை அணியில் திறமையான வீரர்கள் நிறைய பேர் உள்ளனர். இளம் வீரர்களுக்கு முன்னோடியாக திகழ்ந்து, அணியை திறம்பட வழிநடத்தி வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்ல முயற்சிப்பேன், என்றார்.

**நடந்தது என்ன?**

சச்சின் நீண்ட காலமாக கால் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இதன் காரணமாக ஐ.பி.எல்., தொடரில் முழுமையாக பங்கேற்க இயலாது என்ற நிலையில் தலைமைப் பதவியில் இருந்து விலகும் முடிவை எடுத்திருக்கலாம்.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு கடந்த நான்கு முறை தலைவராக இருந்த சச்சினால், ஒரு முறை கூட கிண்ணம் வெல்ல முடியவில்லை. அதே நேரத்தில் 2011 இல் நடந்த சம்பியன்ஸ் லீக் தொடரில் ஹர்பஜன் தலைமையில் மும்பை அணி கிண்ணம் வென்று அசத்தியது. இதையடுத்து இவரே தலைமைப் பதவியில் தொடர வேண்டுமென மும்பை அணி நிர்வாகம் விரும்பியிருக்கலாம். இதனை அறிந்து கொண்டு சச்சினும் தலைமைப் பதவியில் இருந்து விலகியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. (5)

# STAR ஸ்ரார் ரீவி இனி இந்தியாவின் பக்கம்

2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டிற்கான இந்தியக் கிரிக்கெட் போட்டிகளுக்கான ஒளிபரப்பு உரிமையை ஸ்ரார் ரீவி நிறுவனம் வெற்றி கொண்டுள்ளது. 750 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (9458 கோடி ரூபாய்) பெறுமதியான இந்த உரிமையில் இணையத்தள, கைத்தொலைபேசி உரிமைகளும் உள்ளடக்கம்.

இந்த ஒளிபரப்பு உரிமையில் இந்தியாவில் இடம் பெறும் இந்தியாவின் சகல சர்வதேசப் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமைகளும், இந்தியாவின் முக்கியமான ரஞ்சிக்கிண்ணப் போட்டிகளுக்கான ஒளிபரப்பு உரிமைகளும், இரானி கிண்ணப் போட்டிகளுக்கான ஒளிபரப்பு உரிமைகளும் உள்ளடங்குகின்றன.

வழங்கப்பட்டுள்ள புதிய ஒளிபரப்பு உரிமையின் கீழான முதலாவது தொடர் நியூசிலாந்து அணி - இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒகஸ்ட் வரும்போது இடம்பெறும். அதன் பின்னர் இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகளும் இந்தியாவுக்கு வருகை தரவுள்ளன.

96 போட்டிகளை ஒளிபரப்பப் பெறப்பட்டுள்ள இந்த ஒளிபரப்பு உரிமையின்படி ஸ்ரார் ரீவி நிறுவனம் ஒரு போட்டிக்காக சராசரியாக 40 கோடிக்கும் மேற்பட்ட இந்திய ரூபாய்களை வழங்கியுள்ளது. இது இதற்கு முன்னர் காணப்பட்ட நிம்பஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் நிம்பஸ் நிறுவனம் வழங்கிய 32.5 கோடி இந்திய ரூபாய்களை விட கணிசமானளவு அதிகமாகும்.

இந்திய அணி அண்மைக்காலமாக தோல்விகளைச் சந்தித்து வந்த நிலையில் இந்திய அணியின் மீதான நம்பிக்கை குறைவடைந்து காணப்படுவதால் இந்த ஒளிபரப்பு உரிமைகளின் கேள்வியில் வீழ்ச்சி காணப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், கணிசமானளவு எழுச்சியை இது கண்டுள்ளது.

இதற்கு முன்னர் காணப்பட்ட நிம்பஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தம் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு தொடரின் ஆரம்பத்திலும் அந்தத் தொடருக்கான பெறுமதியின் அரைவாசியை ஒளிபரப்பு நிறுவனம் இந்தியக் கிரிக்கெட் சபைக்கு வழங்க வேண்டும் என்ற விதியை நிம்பஸ் நிறுவனம் மீறியதன் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொண்டதாக இந்தியக் கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது.

உலகின் பல்வேறு நாடுகளில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை நடத்தி வரும் ஊடக ஜாம்பவானான ரூப்பர்ட் முர்டோக்கிற்கு சொந்தமான நிறுவனங்களில் ஒன்றே ஸ்ரார் ரீவி நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## 100 தங்க நாணயங்கள்

சர்வதேசப் போட்டிகளில் நூறு சதங்களைப் பூர்த்தி செய்து சாதனை படைத்துள்ள இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு நூறு தங்க நாணயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. மும்பைக் கிரிக்கெட் அமைப்பினால் இந்தக் கௌரவம் வழங்கப்படவுள்ளது.

நூறு தங்க நாணயங்களால் கௌரவிக்கும் இந்த முடிவு மும்பைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த நூறு தங்க நாணயங்களும் 23 முதல் 25 இலட்சங்கள் இந்திய ரூபா பெறுதியானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கௌரவப்படுத்தல் நிகழ்வு தொடர்பாக மும்பைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழுத்தலைவரும் மத்திய அமைச்சருமான விலாஸ்ராவோ தேஷ்முக் - சச்சினுடன் கலந்துரையாடியுள்ளதாகவும், கௌரவப் படுத்தல் நிகழ்வுக்காக ஒரு திகதியை ஒதுக்கித் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்த மும்பைக் கிரிக்கெட் சபை வட்டாரங்கள், சச்சின் டெண்டுல்கர் இன்னமும் திகதியை ஒதுக்கித் தராததன் காரணமாக திகதி இன்னமும் நிர்ணயிக் கப்படவில்லை எனத் தெரிவித்தன.

சச்சின் டெண்டுல்கர் தனது நூறாவது சர்வதேசப் போட்டி சதத்தினை அண்மையில் இடம்பெற்ற ஆசியக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sky Computers (Pvt) Ltd**
விடுமுறைக்கால கணினி
வகுப்புக்கள் ஆரம்பம்
(பிரத்தியேகமாக/ குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி)
Ms Office, DTP, Hardware ,Graphic Designing, Web Designing, Internet & E-mail , Computer Type Setting, Kids Program.
162, Main Street, Jaffna. TP:-021 222 1417

**Deutsch, Dutch, French, Italian**
ஜேர்மன் மற்றும் நெதர்லாந்து தூதரக பரீட்சைக்கான
German-Deutsch, Netherland-Dutch, French, Italian வகுப்புகள்
Audio-Video விளக்கங்களுடன் நடைபெறுகின்றன.
புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் தற்பொழுது நடைபெறுகின்றன.
**Vivekananda Academy**
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 484 2464, 021 321 6928, 021 222 0393

**BEACON** யாழ். நகர்
A/L 2014
கலை வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
ஏப்ரல் - 7 சனி காலை 8.00 மணி

**ஓட்டோ ஓட்டுநர் தேவை**
கார்கில்ஸ், மஜிக் ஐஸ்கிறீம் ஓட்டோவில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு ஆள்கள் தேவை.
தொடர்பு: அஸ்வினி மல்ரி பிளாசா
74, பலாலி வீதி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம். 0215677777

**கணினி மலிவு விற்பனை**
HP 3.0 FULL SET -24,750/=
FREE- WEBCAM / 4GB PENDRIVE / HEAD PHONE
ஒருவருட உத்தரவாதம்
LAPTOP, DIGITAL CAMERA, PHONE
அனைத்துவகையான பொருள்களும் எம்மால் திருத்திக்கொடுக்கப்படும்.
**ST. ANTONY'S.COM**
187, KKS ROAD, JAFFNA.
(மின்சார நிலையவீதி எதிர்)
021-222-4865, 0750698608

**அவுஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா இலண்டன், சுவிஸ், பிரான்ஸ் விசா**
இலவச சட்ட ஆலோசனைகளுக்கு......
வாரத்தில் எல்லா நாள்களும் (சனி, ஞாயிறு, பொதுவிடுமுறை நாள்களும்) திறந்திருக்கும்.



திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
தலைமைக் காரியாலயம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
021 2219016, 075 6574136
115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 021 2285544
231/3, மகேஸ்வரி வீதி, கொழும்பு - 06, 011 2366925
மெல்போன் அவுஸ்திரேலியா. 0061 390437100
(16215)(6-7-8)

**மணல் விற்பனைக்குண்டு**
நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்
4 ரெக்டர் - 24,000/- அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு. (கல்லு 1 - 38/-)
தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499

யாழ் நகர் ஆசிரியர்கள் தற்போது சங்கானையிலும்...
**றோயல் அக்கடமி**
பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகில்)
**A/L 2014**
ஆரம்பம் ஏப்ரல் 05 வியாழக்கிழமை மாலை 4.00 மணி
வர்த்தகப்பிரிவு
- பொருளியல் : வரதராஜன்
- கணக்கீடு : பகீரதன்
- வணிகக்கல்வி : முரளி

கலைப் பிரிவு
- தமிழ் பத்மநாதன்
- புவியியல் பாபு
- இந்துநாகரிகம் பூரீஸ்
- நாடகஅரங்கியலும் ரமேஸ்
- ஆங்கிலம் சந்திரமவுலி
- அளவையியல் E.S.பவன்
- அரசியல் சுகாஷ்
- வரலாறு R.S.சந்திரன்
- விவசாயம் சசி
- I.C.T அம்பி

**வான் விற்பனைக்கு**
டொல்பின் வான் விற்பனைக்கு
தொடர்பு - 0779238564

தமிழ் வலி கிழக்கின் முன்னணி ஆசிரியர் B.பத்மநாதன்
**A/L 2014**
தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்
**றோயல் அக்கடமி**
பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகில்)
05.04.2012 வியாழக்கிழமை பி.ப 4.00 மணி

புதிய உதயம்....
**யூனிவேர்சல்** கல்வி நிறுவனம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், (பட்டப்படிப்புகள் கல்லூரியில்)
**A/L 2014**
கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 7.4.2012 8 am
யூனிவேர்சலின் வழமையான ஆசிரியர்களின் சேவை.

**A/L பொருளியல் நூல்**
**வணிகவங்கிகள்**
ஆசிரியர் வே. கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

**A/L-2014**
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம் ஏப்ரல் 7 சனி- காலை 9 மணி
**DMI Jaffna**

**A/L 2014** புதியதோர் உலகம் செய்வோம்
**DCM** யாழ். நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
ஏப்ரல் 7 சனி காலை 8 மணி
கலைப்பிரிவு
பொருளியல் - வரதராஜன்
தமிழ் - சந்திரலிங்கம்
புவியியல் - குமரன்
அரசியல் - சுகாஷ்
இந்துநாகரிகம் - சிறீஸ்
வரலாறு - ஆனந்தன்
வர்த்தகப்பிரிவு
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - பகீரதன்
வணிகக்கல்வி - முரளி
அளவையியல் - நீதன்
நாடக அரங் - ரமேஸ்
கிறிஸ்தவ நாகரிகம் - பிரபல ஆசிரியர்

**Vacancies @ ESOFT**
Sri Lanka's Leader in Professional ICT Education is looking for skilled people
**Vacancies in Jaffna and Kilinochchi**
**LECTURER**
Should be possess a degree or degree equialent or higher qualification. Should be specialized in lecturing in Programming Languages such as Java/C#.Net/ VB/Net and etc. Proffessional Qualifications will be an added advantage. Should be willing to work on weekends.
**TUTORS/ INSTRUCTORS**
Should be possess a Higher Diploma or Diploma or equivalent qualification in IT. Professional qualifications will be an added advantage.Experience is not must.
**Salary and Benefits**
Successful condidates will be paid a salary higher than industry rate. Other benefits are also available.
**How to Apply**
Mail us your CV (preferable by POST) within 10 days to reach the Regional Manager. Mark the post that you are Applying for on the top left corner of the envelope.
**ESOFT Computer Studies (Pvt) Ltd.**
No.17/1, Brown Road, Jaffna.
Tel:021 2224142 Hotline: 077 309 9 308
Web:http://www.esoft.lk

தரம் 6 முதல் O/L ற்கு யாழ் நகரின் No.1
**எடிசன் அக்கடமி**
யாழ்ப்பாணம், கலட்டி, நல்லூர், கொக்குவில், வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய்
**19 பேருக்கு 9A**
இது சாதனையா ? அதிசயமா ? அற்புதமா ?

| English Medium | Tamil Medium | Tamil Medium |
|---|---|---|
| பிரகதீஸ்வரன் குணவரன் | சுந்தரம் கேதாரன் | வைஸ்ணவி தங்கராஜா |
| குகநாதன் கௌசிகாந் | மிருந்தன் துமிலன் | தேவிகா தேவகுமார் |
| சிவநேசன் அக்சுதன் | சிவேந்திரராஜா சஞ்சீவன் | சௌஜா காயாரோகணன் |
| பாலச்சந்திரன் சங்கீர்த்தன் | முத்துலிங்கம் அனுஜன் | கௌசனா பாலசுந்தரம் |
| ஜெயக்குமார் புவேந்திரன் தனுசன் | ஜெயஸ்ரீ லோகபவன் | தாட்சாயினி ராஜாராம் |
| யோசப் கருணாகரன் ஷரயசிங்கிரான் | புஸ்பகுமார் வைஸ்ணவன் | |
| சாரங்கா சபாநாயகம் | கோபிகா பரிமளாகாந்தன் | |


**மனம் நெகிழ்ந்த இதய அஞ்சலி**

தோற்றம்: 1944 ★ 03 ★ 20



மறைவு: 2012 ★ 04 ★ 02

**அமரர் காசிநாதர் கனகசிங்கம்**

பள்ளிப் பருவம் முதல் இற்றை வரை அன்புடனும், பண்புடனும் எங்கள் குடும்பத்தாருடன் சகல இன்ப, துன்பங்களிலும் நேரம் தவறாது கலந்து சிறப்பித்த அமரர் காசிநாதர் கனகசிங்கத்துக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாக இதயம் நெகிழ்ந்த இதய அஞ்சலியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்லப்பிள்ளையார் கோவிலடி,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

பிரிவால் துயர் உறும்,
K.M.K. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.